பதிவு எண் 2041

கதர் வாழ்க!

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா
{ வெளி நாடு 1½ அணா






| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு கார்த்திகை மீ 12உ (27—11—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 31



## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளி தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M, V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

# சுயமரியாதைப் பிரசாரத்தின் வெற்றிக்குறி.

பார்ப்பனரல்லாதாராகிய தமிழ் மக்கள் தென்னாட்டில் சுயமரியாதைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்ததும், அதற்கு நாட்டில் சிறிது செல்வாக்கு ஆரம்பித்ததும், பார்ப்பனர்களுக்கு பார்ப்பனப் பிரசாரம் மிகுதியும் பலமாய் செய்யவேண்டிய அவசியம் வந்துவிட்டது. கொஞ்சகாலத்திற்கு முன்னால் எங்காவது மடாதிபதிகளும், லோக குருக்களும், சங்கராச்சாரிகளும், பண்டிதர்களும் சாஸ்திரிகளும், பாகவதர்களும், சஞ்சாரி என்கின்ற பெயராலும், காலக்ஷேபமென்கின்ற பெயராலும், இந்துமதம் என்கின்ற பெயராலும், வருணாசிரமம் என்கின்ற பெயராலும், ஆரிய தர்மம் என்கின்ற பெயராலும், இந்து தர்மம் என்கின்ற பெயராலும், புராணப் பிரசங்கம் என்கின்ற பெயராலும், வேதம் ஸ்மிருதி ஆகமம் என்கின்ற பெயராலும், ரிஷிகள் பெயராலும், மகாத்மாக்கள் பெயராலும், பல்விதசூழ்ச்சிப்பிரசாரமும்மற்றும் பலபேர்வழிகளின் பெயரால் பார்ப்பனப் பத்திரிகைளிலும் அவர்கள் தயவால் வாழும் பத்திரிகைகளிலும் அவர்களது கூலிப்பத்திரிகைகளிலும் பிரசுரிப்பதின் மூலமாகவும் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சுயமரியாதைப் பிரசாரத்தின் பலமானது இவைகளையெல்லாம் தாண்டிச் செல்லும்படியான நிலைமைக்கு வந்து, பாமர மக்களையும் பகுத்தறிவில்லாத மூடநம்பிக்கைக்காரரையும் தட்டி எழுப்பத்தக்க யோக்கியதைக்கு வந்து விட்டதால், உதாரணமாக மகாத்மா என்கின்ற பெருமையைக் கொடுத்து எவ்வளவோ தூரம் மக்கள் பின்பற்றி வந்த பெருமையையும் அடைந்த பெரியார் என்பவரான ஸ்ரீமான் காந்தியையே இவ்விஷயத்தில் எதிர்த்ததுடன் அவரிடம் வைத்திருந்த நம்பிக்கைகளையும் மாற்றிக் கொள்ளும்படியான நிலைமை ஏற்படும்படியான அளவுக்கு ஜனங்கள் விழித்துக் கொண்டதாலும் பல பார்ப்பனரை மூலகுரு என்று பல தலைமுறையாய் வணங்கி கப்பம் செலுத்தி வந்ததையெல்லாம் நிறுத்திவிடத்தகுந்த அறிவும் துணிவும் ஏற்பட்டு விட்டதாலும், இனி வைதிகப் பார்ப்பனர்களின் பிரசாரத்திற்கும், வைதிகப் பெயரால் செய்யும் பிரசாரத்திற்கும் செல்வாக்கில்லை எனக்கருதி இப்போது உத்தியோகப் பார்ப்பனர்கள் இந்திய நாகரீகம் என்னும் பெயரால் பார்ப்பனப் பிரசாரத்திற்கு ஆரம்பித்து விட்டார்கள். அதாவது சட்ட மெம்பர் சர். சி. பி. ராமசாமி அய்யர் என்கின்ற பார்ப்பனரின் தலைமையில் ஐகோர்ட் ஜட்ஜி வி. வி. சீனிவாசய்யங்கார் என்கின்ற மற்றொரு பார்ப்பனர், அட்வோகேட் ஜனரல் ஸ்ரீமான் T. R வெங்கிட்டராம சாஸ்திரி என்கின்ற பார்ப்பனரின் உதவியையும் மற்றும் ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் T. R. ராமசந்திரய்யர் T. M. கிருஷ்ணசாமி அய்யர் சந்திரசேகரய்யர் முதலிய செல்வாக்குள்ள வக்கீல் பார்ப்பனர்கள் உதவியையும் கொண்டு பிரசாரத்திற்கு வெளிக் கிளம்பிவிட்டார்கள்.

தென்னாட்டில் சுயமரியாதைப் பிரசாரம் ஏற்பட்டதின் பலனாய் 'பாம்பும் கீரியும்' போல் இருந்த அய்யர் அய்யங்கார்களும், 'நாயும் பூனையும்' போல் இருந்த சுயராஜ்யக் கட்சியும், மிதவாதக் கட்சியும் கொஞ்சிக் குலாவிக் கொண்டு கம்மீது பாய்கின்றன. எனவே இக்குறிகள் தமிழ் நாட்டில் சுயமரியாதைப் பிரசாரமானது ஒரு அளவுக்கு மதிப்புப் பெற்று வருகின்றது என்பதையாவது ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏதாவது ஒரு இயக்கம் புதிதாக ஆரம்பமானால் அதற்கு அதன் எதிரிகளால் 5 தசைகள் உண்டு. அதாவது:—

1. ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தை அதன் எதிரிகள் அலட்சியமாய்க் கருதுவதுபோல் வேஷம் போட்டு, யாரையும் அதனுள் லட்சியம் செய்யாமலிருக்கச்செய்து அதை ஒழித்துவிட முயற்சிப்பது.

2. அவ்வியக்கத்தைப் பற்றி ஜனங்கள் தப்பாய் நினைக்கும் படி இழிவாய்ப்பேசி அதன்பேரில் பலவித தப்பர்த்தங்களையும், பழியையும் சுமத்தி ஒழித்து விட முயற்சிப்பது.

3. அதன் தலைவர்களைப் பற்றி குற்றம் சொல்லி துர் எண்ணம் கற்பித்து யாரையும் பின்பற்றச்செய்யாமலும், மதிப்புக்கொடாமலும் இருக்கும்படி செய்து ஒழித்து விட முயற்சிப்பது.

4. பிறகு தங்களுக்குள்ள சகலவித செல்வாக்குகளையும் உபயோகித்து பலவித எதிர் பிரசாரம் செய்து ஒழித்துவிட முயற்சிப்பது.

5. கடைசி மார்க்கமாக பலாத்காரத்தாலும், சட்டங்களினாலும் ஒழித்துவிட முயற்சிப்பது

இவ்வளவையும் தாண்டிவிட்டால் இயக்கம் வேரூன்றி விட்டதென்றே சொல்லலாம்.

எனவே நமது சுயமரியாதை இயக்கம் அதன் எதிரிகளால் செய்யப்படும் மேல் கண்ட எல்லாவிதமான தத்துக்களையும் அனுபவித்துக்கொண்டு வருகின்றதுடன் அவைகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் தப்புவித்துக்கொண்டு வருகின்றதென்றே சொல்லவேண்டும்.

மாதம் 1 க்கு 4000 ரூ சம்பளம் வாங்கும் ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜும் 5500 ரூ சம்பளம் வாங்கும் சட்ட மெம்பரும், 2000 ரூ சம்பளமும், 5000 ரூ வரும்படியும் சம்பாதிக்கும் அட்வகேட் ஜனரலும், மற்றும் மாதம் 10000, 20000 சம்பாதிக்கும் முக்கியமான வக்கீல்களும் ஒன்றுசேர்ந்து எதிர் பிரசாரயுத்தத்திற்கு வர நேர்ந்து விட்டதென்றால், இப்பேர்ப் பட்டவர்களை நாம் வெளிப்படையாய் எதிரிகளாய் அடைந்ததின் மூலம் சிறிதாவது நாம் வெற்றியடைந்திருக்கின்றோமென்பதில் சந்தேகம் இல்லை. அதோடு எதிரிகள் நிலைமையும் இது சமயம் சற்று கஷ்டமான நிலையில் இருக்கின்றது என்பதற்கும் இவ்வளவு பெரிய உத்தியோகஸ்தர்கள் பிரசாரத்திற்கு கிளம்பியிருப்பதே போதுமான ஆதாரமாகும். இந்த சமயத்தைக் கைவிட்டு விடாமல் ஜாக்கிரதையாய் இருந்து முன்னேறப்பார்க்கவேண்டியது நமது கடமையாகும்.

ஐகோர்ட் ஜட்ஜாகிய ஸ்ரீமான் வி. வி. சீனிவாசய்யங்கார் சென்னையில்செய்த எதிர் பிரசாரத்தில் பேசியபேச்செல்லாம் புரோகிதர்களால் செய்யபட்டு வரும் ஒவ்வொரு சடங்கையும் செய்து தீரவேண்டும் என்பதே. அவைகள் ஒவ்வொன்றுக்கும் சமாதானம் சொல்லுவதற்கு ஒரே விஷயத்தைத்தான் எடுத்துக்கொண்டார். அதாவது:— "இவ்வளவு சடங்கை ஏற்படுத்தின நம் முன்னோர்கள் பயித்தியக்காரர்களா" என்று கேட்கின்றார். இரண்டாவதாக சடங்கின் பெருமைகளை வெள்ளைக்காரர்கள் கூட உணர ஆரம்பித்து விட்டார்கள் என்கின்றார். தவிர, பாலிய விவாகத்தைப்பற்றி சமாதானம் சொல்லும்போது, அந்தப் பொறுப்பை பெற்றோர்களுக்கு விட்டுவிட வேண்டுமே ஒழிய மற்றவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாது என்கின்றார்.

தீண்டாமையைப்பற்றி பேசும் போது, பிறவியிலேயே மக்களுக்கு ஒருவித வசீகாமும் ஆத்ம ஞானமும் வருகின்றது என்றும் தீண்டாதவர்களுக்கு அவ்வித, வசீகரமும் ஞானமும் இல்லை என்றும் சொல்லுகின்றார். அப்படி வசீகரமும் ஆத்மஞானமும் இருந்த நந்தனார் முதலிய பல பார்ப்பனரல்லாதாரை பார்ப்பனர்கள் வழிபடுவதற்கு ஏதாவது ஆக்ஷேபிக்கின்றார்களா என்கிறார். எனவே ஒரு ஐகோர்ட் ஜட்ஜியின் பகுத்தறிவுப் பாரபக்ஷமற்ற நீதிவழங்கும் தன்மையும் இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இவரால் இது சம்மந்தமான விஷயங்களில் மக்களுக்கு சரியான நியாயம் கிடைக்குமென்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? இவருக்கு துணைவரான சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் அக்கிராசன முடிவுரையாகப் பேசும் போது நாட்டில் தற்காலம் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையானது ஜஸ்டிஸ் சீனிவாசய்யங்கார் இம்மாதிரி பேசச் செய்தது என்று ஆரம்பித்து, வருணாசிரமத்தைப்பற்றி பேசும் போது இந்து நாகரீகம் புராதனமானதென்றும் இந்தியாவில் இருக்கும் வருணாசிரம தர்ம அற்புதம் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்றும் அதுவே இந்திய நாகரீகத்திற்கு ஒரு உயர்வு என்றும் ஏழ்மையும் தெய்வ ஞானமும் பொருந்தியவரை முதலில் வைத்து போர்த் திறமுள்ளவரை இரண்டாவதாக வைத்துசெல்வந்தர்களை மூன்றாவதாக வைத்து தொழில் செய்பவர்களை நான்காவதாக வைத்து இருப்பதானது உலக நன்மையை முன்னிட்டு நம முன்னோர்களின் ஆழ்ந்த சிந்தனையின் பலனாகவும் முதிர்ந்த அனுபவத்தின் பலனாகவும் ஏற்படுத்தப்பட்டது என்றும் மெச்சிக்கொள்ளுகின்றார். ஆகவே 5500 ரூபாய் வாங்கும் நமது சட்டமெம்பரின் ஞானத்தைப்பற்றி அறிந்து கொள்ள நமக்கு இதைவிட வேறு என்ன சந்தர்ப்பம் வேண்டும்.

இந்து மதத்தைப்பற்றியும் இந்திய நாகரீகத்தைப்பற்றியும் வருணாசிரமத்தைப்பற்

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க).

# பிராமணர் என்பவர் யார்? உபநிஷத்து சொல்லுவது என்ன?

கைவல்யசாமியார் எழுதியது.

சச்சிதானந்த ரூபமாயும், எல்லோருடைய மனோவிர்த்திகளுக்கும் சாக்ஷியாயும், வேதத்தின் அந்தங்களால் உணர்த்தக்கூடியதாயும், அனந்த ரூபியாயும் உள்ள பிர்மத்தை அறிந்த தன்மைக்கு பிராமண்யம் என்று பெயர். ஆரிய பார்ப்பானுக்கும் தமிழனுக்கும் பழைய காலத்தில் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆரியமதப்புராணக்கதைகளின் ஏமாற்றால் தமிழர்கள் ஆரிய புரோகித கிரியைகளைச் செய்து, வயிற்றுப் பிழைப்பிற்காக ஏமாற்றித்திரியும் பாப்பானையே பிராமணனென்று நினைத்து, தான தர்மம் செய்து வருகிறார்கள். அந்த தான தர்மங்கள் சற்பாத்திரங்களுக்குப் போய்ச் சேராமல் பாழடைகின்றன. அதுவுமல்லாமல் பிராமணத் தன்மையில்லாதவனுக்கு தான தர்மம் செய்தவன் குடும்பமும் கெட்டு அவனும் நரகத்திற்குப் போவான்என்று ஆரிய ஸ்மிருதிகளே சொல்லுகின்றன. இதனால் ஆரிய வேதத்தில் சொல்லப்பட்ட 'பிராமணன்' இன்னவன் என்பதை 'குடி அரசு' சொல்லவேண்டியிருக்கிறது. பார்பாருடைய திருப்திக்கும், தயவிற்கும், ஆடம்பரப் பெருமைமான அலட்சியத்திற்கும் மத சம்பந்தமான கிரிகைகளுக்கும் தான தர்மம் செய்ய ஸ்மிருதிகள் விதிக்கவில்லை. ஒழுக்கம் உண்மை இல்லாமல் கிரியையின் மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியாத புரோகிதனிடம் எவன் கிரியைகள் செய்துகொள்ளுகிறானோ அவன் ஏழுதலை முறை நரகத்திற்குப் போவான் என்றும், அயோக்கியதையுடைய புரோகிதர்களிடம் போவதைவிட தானே தன் எல்லாக் கிரிகைகளையும் கடவுளை நினைத்து சங்கல்பித்துக்கொள்ளுவதே கடவுளுக்குத் திருப்தியான தென்றும் அந்த சாஸ்திரமே சொல்லுகிறது. உண்மையாகவும் உங்கள் கண் முன் நடக்கும் காரியங்களையும் சாஸ்திரங்களையும் அதன் மாறுபாடுகளையும் 'குடி அரசு' உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறது. ஒருகாலத்திலும் தன்னிலமைக்கு வாமுடியாத அவ்வளவு ஆலோசனைக் குறைவை மூட்டை தூக்கும் வரையிலும் விடாத மூடர்கள் பாழடைவதைக்கண்டு மனம் வருந்துவதோடு நில்லாது 'குடி அரசு' அவர்களிடையே பின்னும் பின்னும் உண்மையைச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

பிராமணன் என்றால் இன்னதன்மையோடிருப்பவன் என்பதை வஜ்ஜாசூசிகோபனிஷதில் அட்சேபனை சமாதானத்தோடு சொல்லியிருப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். உபநிஷத் பிரமாணத்தை ஆரிய மதப் பிரிவுகள் அனைத்தும் ஒத்துக் கொள்ளுகின்றன.

பிரமம் க்ஷத்திரிய வைசிய சூத்திரன் எனவருணம் நான்கு. அவைகளுள் பிராமணனே மிகச் சிறந்தவன் என்று வேதங்களெல்லாம் கூறுகின்றன. அவ்விஷயமாக பின் வரும் சங்கைகள் பிறக்கும். பிராமணன் என்பவன் யார்! ஜீவன் பிராமணனா, தேகம் பிராமணனா, ஜாதி பிராமணனா? பக்தி பிராமணனா? கர்மம் பிராமணனா? தர்மம் பிராமணனா?

ஜீவன் பிராமணன் என்று சொன்னால் முக்காலங்களிலும் பல தேசங்களிலும் உள்ள ஜீவன் ஒரே ரூபமாயிருப்பதாலும். ஒரு ஜீவனுக்கே கர்ம வசத்தால் அநேக தேகங்கள் ஏற்படுவதாலும் இதற்கு விரோத மேற்படும்.

தேகம் பிராமணனென்று கூறுவோமா? எல்லோருடைய சரீரங்களும் பஞ்சபூத சம்பந்தமாக ஏற்பட்டிருப்பதால் தேகங்களில் தாரதம்யமில்லை. ஜனன முதலிய மாறுபாடுகள் எல்லா தேகங்களுக்கும் பொது. பிராமணன் வெளுப்பு, க்ஷத்திரியன் பளுப்பு, வைசியன் மஞ்சள், சூத்திரன் கருப்பு, என்ற ஒழுங்குமில்லை. ஆகவே தேகத்திற்கு பிராமண்யம் கூறலாகாது.

ஜாதியால் பிராமண்யம் ஏற்படுமென்று கூற இடமில்லை. அநேக ஜாதிகளிடமிருந்தும் மனிதனல்லாத மற்றைய பிராணிகளிடமிருந்தும் மகரிஷிகள் உண்டாயிருக்கிறார்கள். அவர்களே பிராமண்யத்திற்கு கர்த்தாக்களாகவும் இருக்கிறார்கள். மானிடமிருந்து ரிச்யச்ருங்கரும், குசத்திலிருந்து கௌசிகரும், நரியிடமிருந்து ஜம்பூகரும் புத்திலிருந்து வால்மீகரும், செம்படவப் பெண்ணிடமிருந்து வியாசரும், முயலிடமிருந்து கௌதமரும், ஊர்வசியிடமிருந்து வசிஷ்டரும், கலசத்திலிருந்து அகஸ்தியரும் உதித்தார்கள். இவர்களுக்கு ஜாதியில்லை. பிர்ம ஞானத்தால் உலகில் இவர்கள் பிராமணராக விளங்கினார்கள். ஆனதால் ஜாதியால் பிராமண்யம் என்பதில்லை.

பக்தி சம்பந்தம் பிராமண்யம் என்னலாமே என்றால், பல ஜாதியாரிடத்தும் பரம்பொருளைப்பற்றிய அறிவு காணப்படுவதால் அவர்களை எல்லாம் பிராமணர்கள் என்றே சொல்லவேண்டும் ஆதலால் இவ்வாறும் ஒரு ஜாதியாரை பிராமணர் என்று கூற இடமில்லை.

கர்மம்பிராமணன் என்றாலோ எல்லாப் பிராணிகளுக்கும் மூன்று வித கர்மங்களும் இருப்பதால் அவர்கள் எல்லோரும் கரும வசத்தவராக விருப்பதாலும் இவ்விஷயத்தில் ஏற்றதாழ்வு கூறவேண்டி வரும்.

தர்மம் செய்பவனே பிராமணன் என்று என் கூறலாகாது. எல்லா ஜாதியாரிடத்தும் பணச்செலவு தருமம் முதலிய சத்குணங்கள் காணப்படுவதால் இவ்வாறும் ஒரு ஜாதியாரை பிராமணரென்று கூறிவிட முடியாது.

## பின் யார்தான் பிராமணன்?

"ஜாதி குணக்கிரியைகளற்றதாயும், இரண்டற்றதாயும், பசிதாகம், சோகம மோகம், கிழத்தனம் மரணம் என்ற ஷடூர்மிகளற்றதாயும், இருத்தல், உண்டாதல், வளருதல், திரிதல் குறைதல், நசித்தல் என்ற ஷட்பாவ விவகாரங்களற்றதாயும், சச்திதானந்த அனந்த ஸ்வரூபமாயும், நிர்விகல்பமாயும, மனஸ் ஸங்கல்பங்கள் எல்லா வற்றிற்கும் ஆதாரமாயும், எல்லா பூதங்களிடத்தும் அந்தர்யாமியாகப் பாவி யிருப்பதாயும், ஒப்புயர்வற்றதாயும் அனுபவித்தே அறியத்தக்கதாயும், அபரோக்ஷமாக பிரகாசிப்பதாயும் உள்ள ஆத்மாவை, உள்ளங்கை நெல்லிக்கனிபோல நேராக அனுபவிப்பவன் எவனுயிருந்தபோதிலும் கிருதக்கிருத்தியனாகி, காமக்குரோதம் லோபம் மோகம் மதம் மாத்ஸரியம் என்ற அரிஷட்வர்கள் அற்றவனாய், சமம், தமம், உபாதி, தீட்சை சமாதானம் சிரத்தை என்ற ஷட்க ஸம்பத்துக்களை பூரணமாக அடைந்து ஸங்கல்பம், திருஷ்னை, ஆசை, மோகம் முதலியவைகள் நீங்கப் பெற்றவனாய் அகங்காரம் முற்றிலும் ஒழித்த மனமுடையவனாய் இருப்பவன் யாரோ அவன்தான் பிராமணன். வேறு எவ்விதத்திலும் பிராமண்யம் சித்திக்கமாட்டாது." இது 'குடி அரசின்' அபிப்பிராயமல்ல. உபநிஷத்தின் அபிப்பிராயம்.

உபநிஷத்தென்னும் வடமொழிப் பதத்திற்கு அகராதிகளில் இரகசியம் அந்தரங்கம், ஞானம், பிரார்த்தனைஎன்று பொருள்களென்றும், சங்கரர் முதலானபாஷியக்காரர்கள் இதற்குப் பிர்மஞானம், தத்துவஞானம் என்று பொருள்களென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உபநிஷத்தென்னும் பதத்திற்கு பொருள் "திவ்வியபூரண ஞானத்தையும் அந்த ஞானத்தினால் ஆசாபாசங்களினின்று நிவர்த்தியாகி மோக்ஷத்தையும் மார்க்கத்தையும் உண்மையாகக்காட்டும் சாதனமென்பதாம். ஆனதுபற்றியே ஆரியமதங்களுக்கு எல்லாப்பிரமாணத்தைவிட உப நிஷதப்பிரமாணம் மேன்மையுடையது. ஞானமடைந்தவன் சண்டாளனாகவிருந்தாலும் அவன் என் குருவென்றார் சங்கராச்சாரியார் பிர்மானுபவத்திற்கும் மோக்ஷப்ராப்திக்கும் யாதொரு கர்மமாவது சமயகோட்பாடாவது ஜாதியாவது வர்ணமாவது ஒருவிசக்கொள்கையாவது அவசியமில்லையென்று சங்கராச்சாரியார்தான் இயற்றிய சாரீரபாஷியத்தில் சொல்லியிருக்கிறார். இப்பொழுது சொல்லிக்கொள்ளும் பிராமணஜாதியான் எந்த விதத்திலும் பிராமணனாகமாட்டான். 'பார்ப்பார் தங்களைப்படைத்து காகங்களை என் படைத்தாய்' என்று பண்டு காலத்தில் பாடிய பாட்டை வாங்கிக்கொண்ட பாப்பாரஜாதியேயொழிய வேதத்தில் சொல்லப்பட்ட பிராமணஜாதியல்ல என்பதற்கு வேதமே பிரமாணம். பிராமணன் மகன் சண்டாளனானதும், சண்டாளன் மகன் பிராமணனானதுமான கதைகள் இந்து சாஸ்திரங்களில் நிறைந்திருக்கின்றன. இந்த விஷயத்தில் சுவாமி விவேகானந்தர் சொன்னதாவது "நீங்கள் முதல் முதல் கௌதம சூத்திரங்களில் ஆரம்பித்து பிராமணர்களைப்பற்றிய அவாது மதத்தை வாத்ஸ்யாயன பாஷ்யானுசாரமாய் அறிந்து பிறகு சபரர் முதலானவர்களதுபாஷியங்களோடு மீமாம்ஸா சாஸ்திரங்களைப்படிப்பீராயின்......பிராமணர் என்போர் யாவரென்றும் ஒவ்வொருவரும் அவ்விதமான பிராமணனாகலாமா கூடாதாவென்றும் ஞானத்தினால்தான் பிராமணனாக முடியும் என்பதையும் அறிவீர்கள்."

தான் முன்மஜன்மத்தில் பிராமணஜாதியாக இருந்ததாகச் சொன்ன அன்னிபெசன்டு அம்மையாரும், பார்ப்பார ஜாதியல் பிறந்தால்தான் பிராமணனாகலாம் என்று சொன்ன ஸ்ரீமான் காந்தியும் இந்த மாதிரி சொன்னால்தான வைதீகர்கள் தங்களை சாஸ்திரம் படித்தவர்கள் என்று ஒத்துக்கொள்வார்கள் என்பதை உணர்ந்துகொண்டார்கள். அப்பொழுதுதான் தென்தேசப் பார்ப்பனர்களெல்லாம் தங்களுக்கு இடையூறாக நிற்கமாட்டார்களென்பது இவர்கள் தெரிந்த விஷயம். நம்மை அடிமைபுகும் சோம்பேறிகள் என்பதும், பணம் கொடுப்பதுபோல் நாம் சாஸ்திரத்தைப் படித்ததில்லை என்பதும், அவர்களுக்குத் தெரியும். முன் ஆலோசனையோடு தங்கள் காரியங்களுக்கு எதையும் சோம்பலில்லாமல் எந்தத் தொழிலையும் சமயம்போல் சந்தர்ப்பம் தெரிந்து செய்யும் திறமையும் பார்ப்பனர்களிடம் அவர்கள் கண்டிருக்கலாம், பார்ப்பார்கள் தங்கள் கூட்டத்திற்கு விரோதமாகப் போவதில்லை. காரியமிருந்தால் தந்திரமாக தெரிந்தும் தெரியாமலும் முடித்துக்கொள்வார்கள். கூலிவாங்கவந்துவிட்டாலும், நம்மவர்களையே திட்டுவதற்கு கூலி வாங்கும் நம் கூலியாட்கள் போல, தங்கள் சமூகத்திற்கு தீங்குசெய்ய உடைந்தையாக விருக்கமாட்டார்கள் என்பதும் அவர்களுக்குத்தெரியும். நாம் அவர்களைக்குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை. இருக்கிறவன் செம்மையாக விருந்தால் செய்கிறவன் செம்மையாய் செய்வான் என்கிற பழமொழியும் இந்த சமயத்தில் உண்டானதே. நாமெல்லாம் ஆணவத்தாலோ, அறியாமையினாலோ, பொறாமையினாலோ, தனித்தனி அபிப்பிராயமும் கட்சியும் ஏற்படுத்திக்கொண்டால் நம்ம லாபமே கெட்டுப்போகும், பின் சமூகத்தின் ஐக்கியமும் முன்னேற்றமும் என்ன கெதியாகுமென்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

## திருவள்ளுவரும் கடவுளும்.

2

சிதம்பரனார் எழுதுகிறார்-

உலகங்கள் ஒற்றுமையின்றி வாழ்வதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முதற் காரணமாகக் கூறவேண்டியது மதமேயாகும். அறிவற்ற மக்கள் சிறிய செய்திகளில் கூட மன வேறுபாடு கொண்டு ஒருவர்க்கொருவர் பகைத்துக் கொள்ளுவதென்பது அரிதாகத்தான் இருக்கின்றது. ஆனால் மதம் என்னும் பெயரால் சண்டையிடுகின்றவர்கள் பெரும்பாலும் அறிஞர்களும் பெரியோர்களுமாகவே இருப்பார்கள். கடவுள் அருள் பெற்ற பெரியார் என்று கருதப்படுகின்றவர்கள் கடவுளைப் பற்றிப் பிறரிடம் போராடாமலிருக்கவில்லை. ஒரே கடவுள் தான் பல வடிவமாக மக்கள் நினைந்தவாறு அவரவர்களுக்கு அருள் புரிகின்றார் என்பதாகப் பல அறிஞர்கள் கூறியிருப்பினும், அவர்களே பிற மத வெறுப்புடையாராகவும் காணப்படுகின்றார்கள். அங்ஙனமின்றி, "கடவுள் ஒருவரே, யாவரும் அவர் தம் மக்களே" என்ற கொள்கையை அறிஞர்களும் உலகமும் கொள்ளுமாயின் உலகத்தில் கலகம் ஒரு சிறிதுமின்றி ஒற்றுமை யன்பும் ஓங்கி நிற்குமென்பது திண்ணம். இக்கொள்கை இக்காலத் தறிஞர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மைக் கொள்கையாகும்.

"கடவுள் ஒருவரே, அவரை வணங்கவேண்டியது எல்லோருடைய கடமை" என்பதை எடுத்துக் கூறியவர், நமது பண்டைத் தமிழ்ப் பெரியாராகிய திருவள்ளுவர் ஒருவரே. அவர் கடவுளைப்பற்றிக் கூறிய உண்மை மொழிகளை உற்று நோக்குவோமாயின், நாமும் சமரச சன்மார்க்கத்தையடையும் பேற்றைப் பெறலாம். திருவள்ளுவர் கடவுளைப்பற்றி மொழியும் உண்மை மொழிகளாவன:—

1. "எழுத்துக்களெல்லாம் எவ்வாறு 'அ' என்னும் எழுத்தைத் தலைமையாகக்கொண்டிருக்கின்றனவோ அதுபோல உலகத்தில் உள்ள உயிர்களெல்லாம் கடவுளைத் தலைமையாக உடையன."

2. "உண்மையான அறிவினையுடைய கடவுளின், யாவர்க்கும் அருள்செய்கின்ற நல்ல பாதங்களை வணங்காமலிருப்பார்களாயின், கடவுள் ஒருவர் இருக்கின்றாரென்பதை அறிந்து கொண்டதினால் பயனென்ன" கடவுள் ஒருவர் இருக்கின்றாரென்பதை அறிந்துகொண்டதன் பயன் அவரை வணங்க வேண்டுவதேயாகும்.

3. "அன்பால் நினைக்கின்றவர்கள் யாவராயினும் அவர்கள் மனத்தில் அவரவர்கள் நினைத்த வடிவுடன் விரைந்து சென்று அருள்புரியும் கடவுளுடைய பெருமை பொருந்திய பாதங்களை இடைவிடாமல் சிந்திப்பவர் என்றும் அழிவில்லாத உலகில் நீண்டகாலம் வாழ்ந்திருப்பர்."

4 "விருப்பும், வெறுப்பும் இல்லாத கடவுளுடைய பாதங்களை இடைவிடாமற் சிந்திப்பவர்களுக்கு எக்காலத்திலும் துன்பமுண்டாகாது."

5. "எல்லாவற்றிற்கும் தலைவனாகிய கடவுளுடைய அழியாத புகழை விரும்பிப் போற்றுகின்றவர்களை, மக்களை மயக்கும் நல்வினை தீவினை யென்னும் இரு வினைகளும் சேரமாட்டா."

6. "மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளாலும் உண்டாகும் ஆசைகள் இல்லாத கடவுளின் உண்மை ஒழுக்க வழியில் நிற்பவர்கள் ஒரே தன்மையராய் நீண்ட நாள் வாழ்ந்திருப்பார்கள்."

7. "ஒரு விதத்திலும் தனக்கு ஒப்பில்லாத தனிப் பரம்பொருளாகிய கடவுளை வணங்கினவர்கள்தான் மனத் துயரின்றி வாழ்வார்களே யல்லாமல் மற்றவர்கள் மனத்துயரை நீக்கிக்கொண்டு வாழ முடியாது."

8. "நன்மைக் கடலாகிய, இரக்க வடிவினனாகிய கடவுளின் பாதங்களை வணங்கினவர்கள் நன்மை பெறலாமேயன்றி மற்றவர்கள் பிறவிக் கடல்களைத் தாண்டுவது அரிதாகும்"

9. "தத்தமக்கேற்ற செயல்களைச் செய்யாத மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளைப் போல, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில்லாத ஆற்றலுடைமை, அளவில்லாத இன்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்களையுடைய கடவுளின் பாதங்களை வணங்காத தலையினாற் பயனில்லை"

10. "தலைவனாகிய கடவுளின் பாதங்களை வணங்குபவர் பிறவியாகிய பெருங்கடலைத் தாண்டுவார்கள். வணங்காதவர் தாண்டமாட்டார்கள்"

மேற்கண்ட சொற்றொடர்களே திருவள்ளுவரால் கடவுளைப்பற்றிக் கூறப்பட்டிருப்பவை. இக்கொள்கைகளே பொதுவாக எந்த மதத்தினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருப்பதைக் காணலாம். இந்து மதத்தில், கடவுளர்களுக்கு, பல பெண்டு பிள்ளைகளை உண்டாக்கி வைத்தும், அவர்களையும் உலக வாழ்க்கையில் ஈடுபடுத்தி மனிதன் படுகின்ற துன்பங்களையெல்லாம் படச்செய்தும் வணங்குவதுபோலில்லாமல், திருவள்ளுவர் எல்லாவற்றையுங் கடந்துநிற்கும் பரம்பொருளையே கடவுளென்று கூறுவதை அறியலாம். திருவள்ளுவர் கொள்கையின்படி பார்ப்போமாயின் ஒவ்வொருவரும் தத்தம் மனத்திலேயே கடவுளை வணங்க வேண்டுமேயன்றி, ஆடம்பரமான வழிகளினாலோ, பூசைகளினாலோ வணங்க வேண்டியதில்லை. எல்லாம் வல்ல கடவுளை வணங்குவதற்கும் சிலருக்குக் கூலி கொடுத்து அவர்கள் மூலமாக வணங்கும் வஞ்சகமான முறையைத் திருவள்ளுவர் ஒப்புக்கொண்டவரல்லர்.

ஊரும், பேரும், உருவுமற்ற கடவுளுக்கு ஊரும், பேரும், உருவும் உண்டாக்கி வணங்கி வணங்கும் வழக்கத்தைப் பல மதத்தினர்கள் ஒப்புக் கொள்வதில்லை. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த பேரறிஞர்களும், கடவுளை இயற்கை யழகாற்கண்டு வணங்கி வந்தனர். பாமர மக்களே உருவச் சிலைகளை வணங்கி வந்தனர். நமது திருவள்ளுவர் கூறுவதிலிருந்து, உருவ வணக்கத்தைத் திருவள்ளுவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா என்று பார்ப்போமாயின், ஒப்புக்கொள்ளவுமில்லை, மறுக்கவுமில்லை என்ற முடிவிற்குத்தான் வரவேண்டும். ஆகவே விக்கிரக ஆராதனையுடையவர்களும் திருவள்ளுவர் கூறிய கடவுளை ஒப்புக்கொள்ளுவார்கள். விக்கிர ஆராதனையை மறுக்கின்றவர்களும் திருவள்ளுவர் கூறும் கடவுளை ஒப்புக்கொள்ளுவார்கள்.

வேதநூல் ஒரு நூலைச் செய்யும் ஆசிரியர்கள் தங்கள் கொள்கைகளையும் அந்நூலின் மூலமாகப் பரவச்செய்வதற்கு முயல்வார்கள். இது நூலாசிரியர்களின் இயற்கை. அது போலவே திருவள்ளுவரும், தமது கடவுட் கொள்கையைக் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தின் மூலம் போதித்திருக்கின்றார்.

ஆகவே திருவள்ளுவர் கூறிய கடவுள் வணக்கத்தை உலகத்தார் கைக்கொள்வார்களாயின் உலக சகோதரத்துவம் நிலவும். சமயச் சண்டைகள் அடியோடு தொலையும். அடியோடு தொலையும் மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும் நடைபெறும் வீண் செலவுகளும், அக்கிரமங்களும் அகன்றொழியும். ஆகையால் தமிழர்கள் அனைவரும், திருவள்ளுவரின் கடவுட் கொள்கையை மேற்கொண்டு, யாவருடனும் சமரசத் தன்மையுடன் வாழவும், திருவள்ளுவரின் கொள்கைகளை எங்கும் பரவும்படிச் செய்யவும் முயலுவோமாக.

## "குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம் (மார்ஜின்) விட்டு, காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் ஊர்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. S. P. சந்தாதாரர்கள்எழுதும்கடிதங்களில்தங்கள் சந்தாநம்பரைக்குறித்து எழுதக்கோருகிறோம். நிற்க, சந்தாதாரர்களில் சிலர் தங்களது சந்தா காலம் தீர்ந்தும் பணம் அனுப்பாமலிருப்பதால் அவர்களுக்கு வி. பி. அனுப்பியிருக்கிறோம். நண்பர்கள் அவைகளை கௌரவித்து 'குடி அரசை' ஆதரிக்கவேண்டுகிறோம்.

மானேஜர்,

# திருபுவனத்தில் நவம்பர் 20-ல் திரு. ஐ. குமாரசாமி பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்ற கும்பகோணம் தாலூகா பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

இன்று காலை வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஈரோட்டிலிருந்தும், திரு. ஜே. எஸ். கண்ணப்பர் சென்னையிலிருந்தும், ஆர். சின்னையாபிள்ளை மாயவரத்திலிருந்தும் திருவிடமருதூர் ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். தலைவர்கள் வரும் வண்டி வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே திரளாள பொது ஜனங்களும் இவ்வூர் முக்கிய பிரபலஸ்தர்களும் பிளாட்பாரத்தில் வந்து கூடியிருந்தார்கள். பின்னர் தலைவர்கள் வந்திறங்கியதும், மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி மெம்பர்களாகிய ஸ்ரீமான்கள் முகம்மது முகைதீன், ஆர். முருகேச முதலியார், ஆர். நாராயணசாமி நாயுடு, வி. கோ. பால்சாமி பிள்ளை முதலானோர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் பி. என். கே. ராமானுஜலு நாயுடுவின் தலைமையின் கீழ் மேற்படி தலைவர்களை மேளவாத்தியங்களுடன் வரவேற்று, மாலைகள் சூட்டி மகாநாட்டுப் பந்தலுக்கு மோட்டார் வண்டிகளில் மேள வாத்தியங்களுடன் ஊரார்களும், பல தலைவர்களும் புடை சூழ ஊர் வலமாக அழைத்துச் சென்றனர். வழி நெடுக தலைவர்கள் மோட்டார் வண்டிகளில் வருவதை அறிந்து தெருக்களில் திரள் திரளாக ஜனங்கள் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஊர் முழுவதும் தோரணங்களாலும், புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் திரு நாயக்கர் வருக! திரு. ஜே. எஸ். கண்ணப்பர் வருக! என வழிநெடுக பந்தல்களில் எழுதப்பட்டிருந்தது. பின்னர் ஊர்வலம் திருப்புவனம் ஊருக்கு மேற்கே ஒரு அழகான மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலை அணுகியது. அப்பந்தல் திரு நாயக்கர் பந்தலென அமைக்கப்பட்டிருந்தது. அது சுமார் 3,000 ஜனங்கள் சௌகரியமாக தங்கியிருக்கும்படியான ஒரு பெரிய பந்தல். பந்தல் முழுதும் கொடிகளாலும், செண்டாக்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தூண்களில் 'புரோகிதம் ஒழிக! சுயமரியாதை இயக்கம் ஓங்குக' என்னும் பல படிப்பினைகள் அச்சிட்டுத் தொங்கவிடப்பட்டிருந்தன.

## மகாநாட்டுக் கூட்டம்.

சுமார் 10-மணிக்கெல்லாம் மகாநாடு கூடியது. தலைவர்களும் பிரமுகர்களும் மகாநாட்டுப் பந்தலில் வந்து நிறைந்திருந்தார்கள்.

சுமார் 2,000 ஜனங்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்து மிகவும் அமைதியுடன் கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். முதலில் கடவுள் வணக்கத்துடனும், தேசிய பாடல்களுடனும் சபை ஆரம்பமாயிற்று. வரவேற்புக்கழகத் தலைவரான திரு இராமானுஜலு நாயுடு திரு. ஜே. எஸ். கண்ணப்பரை மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார். திரு. ஜே. எஸ். கண்ணப்பர் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியதாவது:—

## திரு. கண்ணப்பர் பேச்சின் சாரம்.

அன்பர்களே!

"ஒன்றும் அறியாத என்னை இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி வரவேற்புக்கழகக் கமிட்டியார் கட்டளையிட்டார்கள். நான் வைக்கம் வீரர் திரு. ராமசாமி நாயக்கரின் அரும்பெரும் சொற்பெருக்கை கேட்டு மகிழவே இங்கு வந்தேன். ஆனால் எனக்குள்ள கடமையை இன்று நான் செய்வேன்.

அன்பர்களே!

நமது சுயமரியாதை இயக்கம் இன்று நேற்று உதித்தது அல்லவென்பதை இந்திய சரித்திரத்தை ஆதிமுதல் படித்தவர்களுக்குத் தெரியும். நமது தேசத்தில் பௌத்தமதம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே தற்காலம் நமது தேசத்தில் ஆதிக்கம் செலுத்திவரும் வருணாசிரமம் கண்டிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பது நன்கு விளங்கும். வருணாச்சிரமக் கொள்கை ஜாதி பேதங்களை உண்டு பண்ணிவிட்டது. இத்தகைய ஜாதி பேதங்களையும், கொடுமைகளையும் சகிக்காது புத்தர் என்னும் ஒரு மகான் புதிதாக ஒரு மதத்தைத் தோற்றுவித்து வருணாச்சிரமத்தின் கேடுகளையும், பிராமணனின் சூழ்ச்சியையும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டி அதைக் கண்டித்து வந்தார். புராணங்களையும் பிராமணர்கள் என்னும் ஒரு ஜாதியார்தான் படிக்கலாமென்றிருந்தது. புத்தர் தோன்றி ஒரு மதத்தை ஸ்தாபித்து வேதங்களையும் புராணங்களையும் ஆதித்திராவிடர்கள் உட்பட எல்லோரும் கற்கும்படி ஒரு சர்வ கலாசாலையை நாலந்தாவில் ஸ்தாபித்தார். அக்கலாசாலையில் எல்லா ஜாதியாரும் ஜாதி வித்தியாசமின்றி சமத்துவமாகக் கல்வி பயின்று வந்தனர். இக்கலாசாலைக்கு அக்காலத்தில் அரசு செலுத்தி வந்த அசோக மஹாராஜா ஏராளமான பணத்தையும் கொடுத்து உதவினர். இவ்விதம் புத்தமதம் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டு பரப்பிவரப்பட்டது. பிராமணர்கள் மற்ற ஜாதியாரை இனி அடிமைப் படுத்திவைக்கச் சாத்தியப்படாதெனக் கருதி அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அவர்கள் சூழ்ச்சியின் முக்கிய நோக்கம் சுயமரியாதைக்காக ஏற்பட்ட இப்பௌத்த மதத்தை இந்நாட்டை விட்டு அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்பதே. அதற்காக ஒரு நாளிரவு பௌத்தர்களெல்லாம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில் சில பிராமணர்கள் அக்கலாசாலையில் தீயிட்டு அழித்துவிட்டார்கள். இந்த பௌத்தர்கள்தான் பிராமணர்களின் கொடுமையை சகியாது சுயமரியாதைக்காகப் போராட்டம் செய்தார்கள் என்பதல்ல. அவர்களுக்குப்பின் நாயன்மார்கள் ஆழ்வாராதிகளும் ஜாதிபேதம் கிடையாது, மனிதர்களுக்குள் உயர்வுதாழ்வு இல்லையென்று சுயமரியாதைப்போரை நடத்தி வந்தார்கள். பிராமணர்களின் சூழ்ச்சியால் பௌத்தமதம் நம் நாட்டைவிட்டு அழிந்து போனதால்தான் நாம் பிராமணர்களுக்கும் வேதம், புராணம், மூட நம்பிக்கை முதலியவைகளுக்கும் அடிமையாய்க் கிடக்கிறோம். அம்மதம் இன்றைக்கும் பர்மா சிலோன் முதலிய இடங்களில் நிலைத்திருப்பதனால் அந்த ஜனங்கள் வேதங்கள் ஆகமங்களுக்கு அவ்வளவு அடிமைப்பட்டிருக்கவில்லை.

16-ம் நூற்றாண்டாகிய எலிசபத் மகாராணி காலம் வரை இங்கிலாந்து எவ்வித நிலையிலிருந்தது என்று அத்தேச சரித்திரத்தை வாசித்துப் பார்த்தால் அக்காலத்து ஜனங்கள் புரோகிதர்களுக்கும் மதபோதகாசாரியர்களுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் அடிமைப்பட்டுகிடந்தார்கள் என்பது விளங்கும்.

இன்னும் துருக்கி தேசத்தின் சரித்திரத்தை படித்துப் பார்த்தாலும், அத்தேசம் சமீபகாலம் வரை மதத்தின் கட்டுப்பாட்டால் மூட நம்பிக்கைகளுக்கு எவ்வளவு தூரம் அடிமைப்பட்டு கிடந்ததென்பது தெரியவரும். புரோகிதம் ஒழிந்த பிறகு மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல் அது சுய மதிப்புடன் சமத்துவமாக வாழ்ந்து வருகிறதெனவும் விளங்கும்.

ஆகையால் இதிலிருந்து எந்த நாடு புரோகித மதத்தாலும் மூட நம்பிக்கைகளாலும் அடிமைப் பட்டுக் கிடக்கிறதோ அந்நாடு முதலில் அவைகளை அடியுடன் ஒழித்தால்தான் க்ஷேமமடையுமென்பது தெரிய வருகிறது. ஆகையால் இவ்வியக்கத்தை ஆதரித்து அவருடன் ஒத்துழைப்பீர்களென்று நம்புகிறேன். நாம் நம் சுயமரியாதை இயக்கத்தின் பயனாக புரோகித மதத்தையும் மூடக் கொள்கைகளையும் அடியுடன் ஒழித்து மனித வர்க்கத்தின் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலை நாட்டி நம்முடைய நாடு சுயராஜ்யமடையும்படி செய்ய வேண்டும். இவ்வியக்கத்துக்கு நீங்கள் உங்களுடைய முழு பலத்தையும் பூரண ஒத்துழைப்பையும் கொடுத்து உதவுவீர்களென்று நம்புகிறேன். இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும்படியான பாக்கியத்தை எனக்கு நீங்கள் அளித்ததற்காக வரவேற்புக் கழகத் தலைவருக்கும், உங்களுக்கும் நான் மனப்பூர்வமாக என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பின்னர் வரவேற்புக் கழகத்தலைவர் ஸ்ரீமான் இராமானுஜலு நாயுடு தன்னுடைய பிரசங்கத்தைப் படித்தார்.

## வரவேற்புக் கழகத் தலைவர் பேச்சு.

அன்புமிக்க சகோதரி சகோதரர்களே!

இம்மகாநாட்டின் வரவேற்புத் தலைமை வகிக்கும் பாக்யத்தை வரவேற்புக் கழகத்தார் எனக்களித்திருக்கின்றார்கள். அன்பின்மிகுதியால் எனக்களித்த கட்டளையை மறுக்கப் போதிய தைரியமின்மையாலும், உங்கள் பூரண ஆதரவை எனக்களிப்பீர்கள் என்ற முழு நம்பிக்கையாலுமே உங்களை நான் அன்புடன் வரவேற்கிறேன். உங்கள் வரவு நல் வரவாகுக.

இங்கு விஜயம் செய்துள்ள பெரியார்களாகிய உங்கள் பெருமைக்குத் தக்கபடி நாங்கள் விரும்பியவாறு செய்யும் உபசாரங்களில் ஏதாவது குற்றங்களிருப்பினும் மன்னிப்பீர்களாக.

## காங்கிரஸ் மகா சபை.

மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டம் அமுலிலிருந்த காலத்தில் இத்தாலூகாவானது முன்னணியில் நின்றதுமல்லாமல் பல குறிப்பிடத் தக்கதும் போற்றத்தகுரியதுமான சம்பவங்களும் நடந்தேறியன. பெரும்பாலும் பார்ப்பனரல்லாத சகோதரர்கள்தான் அதில் ஈடுபட்டு நாட்டிற்கு அரும் பெரும் தொண்டும் தியாகமும் செய்திருக்கின்றார்கள் என்று சொல்லும் பொழுது நான் பெருமை பாராட்டிக் கொள்ளாமலிருக்க முடியாது. ஆனால் அவர்கள் தம் தொண்டும், தியாகமும் பிற்காலத்தில் பாழும் பார்ப்பனர்களுக்கு வயிற்றுச் சோறாய் போனதுமன்றி காங்கிரஸ் மகா சபையும் வகுப்பு வாதம் நிறைந்த சுயராஜ்யக் கட்சியெனும் பெரும் பூதத்தால் விழுங்கப்பட்டு ஜீரணமுமாய் விட்டது.

## வகுப்பு வாதம்.

என்று காங்கிரஸ் ஒழிந்ததோ அன்றே பார்ப்பனரின் வகுப்பு வாதத்துவமும் தலைவிரித்தாட ஆரம்பித்து விட்டது. அவனது நோக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் நிறைவேறி வருவதைக்கண்ட

பார்ப்பனர்கள் தங்கள் வகுப்பு வாதத்தைப் 'பிராமணன்' 'ஆரியதர்மம்' போன்ற பத்திரிகைகளின் மூலமாயும் 'சநாதன தர்மம்' வருணாசிரம தர்மம் போன்ற பிராமணீய பிரசங்கங்களின் மூலமாயும் இத்தாலூகாவைப் பொருத்துமட்டுமல்லாது இத்தமிழ்நாடு முழுவதுமே அதி தீவிரமாய் பரவச் செய்து வருகின்றனர். போதாக்குறைக்கு வகுப்புவாதத்துவ மாகாநாடொன்றையும் சில மாதங்களுக்கு முன் 'தூவார' என்னும் கிராமத்தில் கூட்டி நமது சுயமரியாதை தத்துவத்திற்கு விரோதமானதும், சமரச மற்றதுமான சில தீர்மானங்களையும நிறைவேற்றி யுள்ளார்கள் என்பதையும் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைப்பூட்ட வேண்டியவனா யிருக்கிறேன். இவ்வகுப்புவாதமும், இவ்வகுப்புவாத தத்துவம் எனும் விஷத்தை கக்கிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளும் என்று ஒழியுமோ அன்றுதான் உண்மையிலே இத்தாலூகாவிற்கு மாத்திரமல்ல இந்நாட்டிற்கும் க்ஷேம முண்டாகும்.

## வகுப்பு வாதிகள்.

பகுத்தறிவிற்குப் பொருத்தமான எந்த விஷயத்தை யார் சொல்லிய போதிலும் சரி அதை எதிர்த்தேதான் தீருவார்கள். நேருக்கு மாறாய் நடப்பார்கள். 'விதவா விவாகம்' நல்லதென்றால் உடனே இவர்கள் கூடாதென கூக்குரலிடுவார்கள். தீண்டாமை என்பது வேண்டாமையெனில், ஆண்டவனுக்குக் கூட அடுக்காதே என பிரமாதமான கூச்சல் போடுவார்கள். தேவதாசிகளின் மசோதா சட்டமாய் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சகலரும் ஒப்புக் கொண்டாலும் இந்த பாவிகள் உடனே வேதம் மதம் இவைகள் அழிந்து போயினவெனக் கத்துவார்கள். இதற்கெல்லாம் ஆதாரமேதாவதுளதா எனிலோ உடனே பழைய புராணக் குப்பைகளைக் கூட்டிக் கூடைகளில் அள்ளிக்கொண்டுவந்து கொட்டிவிடுவார்கள். இதைத் தவிர பகுத்தறிவிற்கேற்றதான ஆதாரங்களுளதா வென்றால் இக்குப்பை கூழங்களை நம்பித்தான் ஆகவேண்டும், இல்லாவிடில் நீ நாஸ்திகன், மதத்துவேஷி என்று தூற்ற ஆரம்பித்து விடுவார்கள். இப்பாழும் பண்டித பார்ப்பனரின் கொடுமையை என்னென்று சொல்லுவது.

## நமது நிலைமை.

இதுவரையிலும் பார்ப்பனர்களின் சுயநல புத்தியைப்பற்றிச் சொல்லி வந்தோம். இனி நமது பார்ப்பனரல்லாத மக்களுடைய நிலை எவ்வாறிருக்கிறதென்பதைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இத்தாலூகாவைப் பொறுத்தவரையில் எததாலூக வைப் பார்க்கிலும் இத்தாலூகாவில் பார்ப்பனர்கள் அதிகம் தானெனினும் இத்தாலூகாவின் பார்ப்பனரல்லாதாரின் ஜனத்தொகையைக் காட்டிலும் பார்ப்பனர்கள் ஜனத்தொகை மிகக் குறைவேயாம். என்ற போதிலும் பார்ப்பன ஆட்சிதான் இங்கு நிலவுகிறது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்கள் முனிசிபாலிட்டி போன்ற சகல பொது ஸ்தாபனங்களும் பார்ப்பனர்கள் கையிலேதான் இன்றைக்கு இருந்துவருகிறது. காரணம் ஏழை ஜனங்கள் பார்ப்பனரால் ஏமாற்றப்பட்டுப் போய்விட்டன ரென்றும் சொல்வதற்கில்லை. இத்தாலூகாவின் பார்ப்பனரல்லாதார் தலைவர்களுக்குள்ளேயே ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையின்மையும் அபிப்பிராய பேதங்களுமேயாம்.

இனியாகிலும் நமக்குள்ளிருக்கும் சகல அபிப்பிராய பேதங்களையும் விட்டொழித்து ஒன்று சேர்ந்து பிராமணீய ஆட்சியை தொலைப்பதற்கு வழி தேடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

## முடிவுரை.

பார்ப்பனீய ஆட்சியில், வகுப்பு வாதமும், வகுப்புவாதிகளும் ஒற்றுமை யின்மையும் பெருகிக்கிடக்கும் இத்தாலூகாவில் இன்று நாம் இங்கு ஒற்றுமையுடன் ஒன்றுகூடியிருப்பதொன்று குறிப்பிடத்தக்கது.

ஆகையால் இங்கு கூடியிருக்கும பெரியோர்களாகிய நீங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து தீர யோசித்து இப்பிராமணீயம் நாளையே நாட்டை விட்டு ஓடும்படியானதும சமரசத்தை உண்டுபண்ணத்தக்கதும், சுயமரியாதைத் தத்துவத்தை மக்களுக்குப் போதிப்பதுமான நல்லதீர்மானங்களை சமனதுடன் நிறைவேற்றிப் பாமர மக்களை அடிமைவாழ்விலிருந்து ரட்சிப்பீர்களென்று கேட்டுக்கொள்ளுவதுடன் எமது கோரிக்கைக்கிணங்கி இங்கு விஜயம் செய்துள்ள பெரியோர்களாகிய உங்களுக்கு இத்தாலூகா வாசிகளின் சார்பாகவும் எமது வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும் எமது மனமார்ந்த நன்றியையும் வந்தனத்தையும் செலுத்திக்கொள்ளுகின்றேன்.

## தலைவர் தேர்தல்

பின்னர் வரவேற்புத் தலைவர், இம்மகாநாட்டுக்கு தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் படி வைக்கம் வீரர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரை கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க திரு நாயக்கர் தஞ்சை வக்கீலும், கல்வி சபைத் தலைவருமாகிய ஸ்ரீமான் ஐ. குமாரசாமி பிள்ளை பி. ஏ அவர்களை இம்மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி பிரேரேபித்துப் பேசுகையில், தான் இந்த ஜில்லா வாசியல்லாததினால் ஸ்ரீ குமாரசாமி பிள்ளை செய்திருக்கும் வேலைகளைப்பற்றி அதிகம் தெரியாதென்றும ஆனால் பிராமணரல்லாதாரின் நன்மைக்காகவும், சுயமரியாதைக்காகவும் தஞ்சையில் பாடுபட்டு வருகிறவர்களில் ஒரு முக்கியஸ்தரென்றும், பிராமணர்களின் ஆதிக்கம் தஞ்சையில் அதிகமென்றும், அதிலும் அச்சத்தாலூகாவில் அதிகமென்றும், நம்முடைய சுயமரியாதை இயக்கத்தை இந்தத்தாலூகாவில் தான் பரவும் படி செய்யவேண்டுமாகையால் இம்மகாநாடு இங்கு கூடியது மிகவும் விசேஷமாகுமென்றும், ஸ்ரீமான் குமாரசாமி பிள்ளை படிப்பிலும், அறிவிலும் முதிர்ந்தவரானபடியால் இம்மகா நாட்டை மிகவும் திறமையுடன் நடத்தி வைப்பார்கள் என்றும் நான் அவரையே இம்மகா நாட்டுக்கு தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றும் கூறினார்.

ஸ்ரீமான் ஆர். சின்னையா பிள்ளை அவர்கள் டை தீர்மானத்தை ஆமோதித்துப் பேச பட்டுக்கோட்டை அழகிரிசாமி நாயுடு அவர்கள் ஆதரிக்க பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள் தலைவர் ஸ்தானத்தில் அமர்ந்தார். பின் அவருக்குப் பூமாலை சூட்டப்பட்டது. பின்னர் தலைவர் பெருத்த கரகோஷத்தினிடையே தன்னுடைய பிரசங்கத்தை வாசித்தார். (தலைவர் பிரசங்கம் மற்றொரு பக்கம் பார்க்க.)

## சுயமரியாதைக் கொடி ஏற்றம்.

ஸ்ரீமான் ஆர். வி. வெங்கட்டராம நாயுடு சுயமரியாதைக் கொடியேற்று விழாவைச் செய்து முடிக்கையில் கூறியதாவது- இன்று இம்மகாநாட்டில் சுயமரியாதைக் கொடியேற்றுங் கைங்கர்யத்தை நீங்கள் எனக்கு அளித்ததற்காக நான் என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன். நமது இயக்கம் வலுவடைந்து எங்கும் பரவவேண்டுமானால் நாம் ஊக்கத்துடனும் பலத்துடனும் வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் நமது இயக்கத்தைப் பிரசங்கங்கள் மூலமாக ஜனங்களின் மனதில் பதியவைக்கவேண்டும். நமது இயக்கத்துக்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இருந்து வரும் 'ஜஸ்டிஸ்' 'குடி அரசு.' 'திராவிடன்' பத்திரிகைகளுக்கு நம்மவர்கள் பெரும்பாலோராகச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவளிக்க வேண்டும். இந்தியா சட்ட சபைக்கு தஞ்சாவூரின் பிரதிநிதியாய் சட்ட சபைக்குப் போயிருக்கும் ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் 'சுதேசமித்திரன்' பத்திராசிரியராயிருக்கிறார். அவரும் சில அய்யங்கார்களும், அய்யர்களும் தான் நம்முடைய சமூகத்தாரின்பிற்போக்குக்கு காரணம். அவர்கள் நம்மை நசுக்கி அடியுடன் தொலைக்கவே முற்பட்டிருக்கிறார்கள். நமது 'ஜஸ்டிஸ்' கட்சி மந்திரியாட்சி செய்யுங்காலத்தில் இந்த 'சுதேசமித்திரன்' அவர்கள் செய்துள்ள அரும் பெரும் வேலைகளையெல்லாம் பத்திரிகைகளில் வெளியிடாது நாண்டிச்சாக்குகளையும், பொய்களையும் பத்திரிகைகளில் எழுதி மந்திரிகட்சியை எதிர்த்தும், தூற்றியும் வந்தது. நம்முடைய கட்சி ஆட்சியிலிருக்கும் பொழுது தான் ஆரம்பக் கட்டாயக் கல்வி ஏற்படுத்தப்பட்டது அவர்களுடைய பேருதவியால் தான் இந்த ஜில்லாவில் சர்க்கார் உதவி பெற்ற பாடசாலைகள் இன்று 200 இருக்கின்றன. இதையெல்லாம் அப்பத்திரிகை புறக்கணித்து விட்டது. இன்னும் சென்னை நிர்வாக சபையில் மெம்பராக இருக்கும் சர் சி. பி. ராமசாமி அய்யர் சென்னை சட்டசபை மெம்பர் பதவிக்கு அபேக்ஷகராக நின்று பொது ஜனங்களை ஏமாற்றி ஓட்டு பெற்றதையாவது, காங்கிரசில் மிகவும் பற்றுள்ளவராக இருந்த அமமகான் தனக்கு நிர்வாக சபையில் மெம்பர் பதவி கிடைத்ததும் ஜனங்களின் பிரதிநிதியாக சட்ட சபைக்கு வந்ததையும் ராஜினாமா செய்து விட்டு அவ்வேலையை ஒப்புக்கொண்டு சர்க்காரோடு ஒத்துழைக்கமாட்டேன் என்று கூறி பதவிக்கு ஆசைப்பட்டு ஒத்துழைத்ததைப்பற்றியாவது அந்த 'சுதேசமித்திரன்' ஒரு வார்த்தைகூட கண்டித்து எழுத வில்லை. இன்னும் குருகுல போராட்டத்தில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார், பிராமணர் ஒரு பிராமணரல்லாதாருடன் சமபந்தி போஜனம் செய்ததாகக் கேள்விப்பட்டால் தான் பதினைந்து நாள் பட்டினி கிடக்கவேண்டுமென்று சுயநலத்துடனும் ஜாதித்திமிருடனும் கூறியதைப் பற்றியாவது அப்பத்திரிகை கண்டித்து எழுதவில்லை. ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயாரம்மாளை அவள் என்று அகௌரவமாய் ஒரு தடவை எழுதியது. இதெல்லாம் பிராமணர்களின் குறும்புத்தனத்தையும், திமிரையுமே காட்டுகிறது. இப்பிராமணர்களின் ஆதிக்கமும், நம்மை மதத்தின் பேரால் அடிமைப்படுத்துவதும் ஒழிய வேண்டுமானால் நாம் தைரியத்துடனும், தளரா ஊக்கத்துடனும் நமது சுயமரியாதை இயக்கத்தை நடத்தியே தீரவேண்டும். கடைசியாக இம்மகாநாட்டுக்கு முன்பு சுயமரியாதைக் கொடியை நாட்டி ஏற்றும்படியான கௌரவத்தை எனக்குக் கொடுத்ததற்காக மறுபடியும் வரவேற்புக் கழகத்தலைவருக்கும், வந்தனம் செலுத்துகிறேன்.

இத்துடன் மகாநாடு மத்தியானப் போஜனத்துக்காகக் கலைந்தது, பின்னர் ஒரு மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டி கூட்டி நிறைவேற வேண்டிய பல தீர்மானங்களைப்பற்றி ஆலோசனை செய்தது.

## பிற்பகல் நடவடிக்கை.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. சென்னை சட்டசபையில் கொண்டு வந்திருக்கும் தேவதாசிகள் மசோதாவை இம்மகாநாடு ஆதரிப்பதோடு இம்மசோதா நிறைவேறாதபடி சத்தியமூர்த்தி கூட்டத்தார் செய்து வரும் சூழ்ச்சிகளை இம்மகாநாடு கண்டிக்கிறது என்று ஸ்ரீமதி ராமாமிருத அம்மாள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசுகையில், ஹிந்து கோவில்களில் பணிவிடை செய்யும்பொருட்டு அக்காலத்தில் தேவதாசிகள் நியமிக்கப்பட்டிருந்த தென்று வே

த்தில் சொல்லப்பட்டிருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்ளுவோம். வேதத்தில் கூறுகிறபடி இப்போது பிராமணர்கள் வேதம் ஓதுகிறார்களா? இல்லையே. காலத்துக்கு ஏற்றமதமே யொழிய வேறல்ல. எங்கள் சமூகத்தில் 100-க்கு 70 பேர்கள் மிகுந்த வறுமையில் கண்ணீர் விட்டு தவிக்கின்றார்கள். எங்களை நீங்கள் சகோதரிகளைப் போல் பாவியுங்கள். எங்களுக்கு இந்த விபசாரத் தொழில் வேண்டாம். நாங்கள் இதற்குமுன் செய்துவந்த நடனம் சங்கீதம் முதலிய தொழில்களை யெல்லாம் ஆடவர்கள் செய்யத்தொடங்கி விட்டனர். எங்களுக்கு வேறு பிழைப்பில்லை. எங்களில் பலர் வயிற்றுப் பிழைப்பின்றி மடிகின்றனர். சத்தியமூர்த்திபோன்றவர்கள் கோவில்களுக்கு எங்களை என் பொட்டுக்கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்களென்றால், இவ்வழக்கத்தை எடுத்து விட்டால் எங்ஙனம் கோவில்களில் குருக்களையும் எடுத்துவிடுவார்களோ என்று அஞ்சுகின்றனர். ஆகையால் நீங்கள் எங்கள் மீது கருணை செலுத்தி எங்களுடைய அவமானத்தைத் தடுங்கள். சத்தியமூர்த்தி எங்களிடம் அவருடைய வாலைக்காட்ட வேண்டாமென்று சொல்லுகிறேன். ஆகையால் நீங்கள் இத்தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று கூறினார்.

ஸ்ரீ அழகிரிசாமி தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாவது:—

ஒரு தனிப்பட்ட ஜாதியாரென்று குறியாமல், யார் யாரெல்லாம் கடவுளுக்குப் பணிவிடை செய்கிறார்களோ அவர்களுக்குப்பொதுவாக தேவரடியார்களென வழங்கப்பட்டு வந்தது. ஆனால் பிற்காலத்தில் குருமார்களும் அய்யர்களும் கோவில்களுக்குள் நுழைந்த காலந்தொட்டு, லௌகீகத்தில சிறிதும் ஆசையில்லாத இவர்களை, துறவி வேடம் பூணவேண்டுமென்றிருந்த இவர்களை, பணம் என்கின்ற ஆசை சிறிதுமில்லாத இவர்களை இப்பார்ப்பனர்கள் தங்களுடைய லௌகீக விஷயங்களில் இல்லக் கிழத்திபாகச செய்ததினால்தான் இவ்வகுப்பினர் தற்காலம் இத்தகைய பரிதாப நிலைமையி லிருக்கின்றனர். பெரியோர்களே தேவரடியார்களையும், நம்முடைய சகோதரிகளைப்போல் பாவித்து அவர்களுக்கு வந்திருக்கும் அவமானத்தை நாமே காப்பாற்றி வைக்க வேண்டும். அதற்காக சத்தியமூர்த்தி போன்ற பிராமணர்களுடன் போராடி நமது சுயமரியாதையை நிலைநிறுத்தவேண்டும். ஆகையால் ஸ்ரீமதி ராமாம்ருதம்மாள் கொண்டுவந்த தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்

பின்னர் இத்தீர்மானம் ஏகவாக்காய் நிறைவேற்றப்பட்டது.

2. தற்சமயம் சகல உத்தியோகங்களும் பெரும்பாலும் ஒரு சிறுபான்மையினரான பிராமணர் கையிலிருந்து வருவதால், தேச க்ஷேமமும், நீதியும் ஏற்படாமல் இருப்பதால் ஐந்து, வருஷங்களுக்கு பிராமணரல்லாதாருக்கு மட்டுமே சகல உத்தியோகங்களும் அளிக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது. என்பதாக வக்கீல் ஸ்ரீ வேணுகோபால் நாயுடு பி ஏ, பி எல். அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசினார். அதை ஸ்ரீ தண்டபாணி செட்டியார் ஆமோதித்துப்பேசினார். இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. கிருஸ்துதவ கன்னியா ஸ்திரீகளின் கற்பைப்பங்கப்படுத்தும்படியாக, அன்னவரின் பரிசுத்த வாழ்க்கையை பழித்தும், இழித்தும் கூறிய ஸ்ரீ சத்திய மூர்த்தியின் செய்கையை இக்கூட்டம் கண்டிக்கிறதென்பதாக ஸ்ரீமான் டி. சேவியர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதை ஸ்ரீமான் ராமன் பிள்ளை ஆமோதித்தார். பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. "நமது சமூகத்தில் நடைபெறுகிற எல்லாச் சடங்குகளையும் பார்ப்பனப் புரோகிதரைக் கொண்டு நடத்துவதை உடனே ஒழித்து நம்பெரியோர்களைக்கொண்டே நடத்திக்கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. பின்னர் பட்டுக் கோட்டை வக்கீல் ஸ்ரீ வேணுகோபால் நாயுடு வைக்கம் வீரர் திரு. ராமசாமி நாயக்கரின் திருவுருவப்படத்தை மகாநாட்டுப் பந்தலில் திறந்து வைத்து அவரது அரும்பெரும் வேலையைப் புகழ்ந்து பேசினார்.

ஸ்ரீமான் வைக்கம் வீரர் திரு. நாயக்கர் மேற்படி புகழுரைகளுக்குப் பதிலளித்துப் பேசியபின் பிறப்பினால் உயர்வு தாழ்வு என்ற கொடிய வழக்கம் நம் முன்னேற்றத்துக்கும் நம் தேசம் சுயராஜ்யமடையவும் இடையூறாக இருப்பதால் ஷ பிராமணப் புரோகித மதத்தையும் ஒழித்து சமத்துவம் சகோதரத்துவம் இவற்றைக் கடைப்பிடித்து தீண்டாமை யொழித்து பொது ஸ்தாபனங்களில் சுயமரிமை உண்டென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்து பேசியதாவது.

இவ்வுலகத்தில் வேறு எந்த மதத்திலும் மனிதர்கள் பிறவியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்னும் வழக்கம் கிடையாது. ஆனால் நம்முடைய தேசத்திலோ ஒருவன் எவ்வளவு கேவலமான நடத்தை யுடையவனாயினும் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்து விட்டால் அவன் உயர்ந்த ஜாதியென்றும் எவ்வளவு நல்ல நடத்தை யுடையவனாயிருந்தாலும் அவன் 'தாழ்ந்த ஜாதி'யில் பிறந்து விட்டானானால் அவன் கேவலமாகவும் கருதப்பட்டு வருகிறான் இதற்கு காரணம் மதந்தான். இம்மாதிரி அர்த்தமும் கொள்கையும் இலலாத ஒருமதத்தை அனுஷ்டித்து வரும் வரையில், நாம் அவற்றை யெல்லாம் கண்டிக்காமல் மௌனமாயிருக்கும் வரையில் நாம் ஆயிரக்கணக்கான மக்களை நமது சமூகத்திலிருந்து பிற மதங்களுக்கு பலி கொடுத்துக்கொண்டு தான் வரவேணடும். இந்துமத பரிபாலன சபார்டு தலைவர் ஸ்ரீ சதாசிவய்யர், இந்துக்கள் என்பதற்கு வேதத்தை எவன் நம்புகிறானோ அவன் தான் இந்து என்றுகூறியிருக்கிறார். அப்படியானால் ஆதி திராவிடர்கள் பஞ்சமர்கள் இவர்களெல்லாம் இந்துக்கள், இந்தியா ஒரு காலத்தில் உன்னத நாகரீகம் படைத்திருந்த காலத்தில் மற்ற மேல் நாடுகளெல்லாம் நாகரிகமற்று அந்நாட்டு மக்கள் காட்டு பிராண்டிகளாக புழு பூச்சிகள் முதலிய வஸ்துக்களைத் தின்றுகொண்டு வனாந்தரங்களிலும் கடற்கரையோரங்களிலும் திரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் இப்போது நம் நாட்டை ஆண்டு வருகின்றனர், நாம் பிற நாட்டை ஆள முடியாவிட்டாலும் நமது நாட்டை யாவது ஆண்டு கொள்ளக்கூடாதா? ஏன் நாம் ஆண்டுகொள்ள முடியவில்லை. ஏனென்றால் நாம் மதத்தின் பேராலும் மூடக்கொள்கைகளின் பேராலும் நாம் அடிமைப்பட்டிருப்பதுதான். மற்ற நாடுகளெல்லாம் இம்மாதிரி மூடக் கொள்கைகளையும், அர்த்தமற்ற உயர்வு தாழ்வு கற்பிக்கும் மதத்தையும் அடியுடன் ஒழித்துவிட்டதால்தான் அவர்கள் தங்களுடைய தேசத்தை ஆளுவதுடன் பிற நாட்டாரையும் அடக்கி ஆண்டு வருகிறார்கள். இப்படி யிருக்க நமது நாட்டையும் நம் மக்களையும் கெடுத்து வருவது பிராமணர்கள் பேசும் வருணாசிரமும் அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இந்துமதம் என்பதும்தான். வருணாசிரமத்தைப்பற்றி பலர் பல விதமாய் பேசுகிறார்கள். எவ்வித வியாக்கியானம் செய்தபோதிலும் அது உயர்வு தாழ்வு கற்பிக்கிறது. ஆதி தமிழர்களிடத்தில் வருணாசிரமம் இருந்திருக்குமானால் வருணாசிரமம் என்னும் சமஸ்கிருத பதத்துக்குப் பதிலாக தமிழ் மொழியும் இருந்திருக்க வேண்டும். இன்னும் வருணாசிரமப் பிராமணர்கள் ஒரு தமிழனுடன் பேசிவிட்டால் அதற்காக ஒரு பிராயச்சித்தமும், அவனுடைய பாஷையைப் பேசினால் அதற்கொரு பிராயச்சித்தமும், அவன் நிழல் பட்டால் அதற்கொரு பிராயச்சித்தமும், செய்வதை நீங்கள் பார்க்கலாம். உதாரணமாக சங்கராசாரி போன்றவர்கள் நம்மிடம்பணம்வாங்கிக்கொண்டு போவதல்லாமல் இவ்வாறு நம்மை இழிவுபடுத்தியும் வருகின்றார்கள். ஆகையால் நாம் இனி இத்தகைய இழிவுகளை ஒரு நாளும் சகித்திருக்க முடியாது

இனி சடங்குகள் என்று பெயர் வைத்துக் கொண்டு நம்மிடமிருந்து பணம் பறிப்பதுமல்லாமல் நம்மை ஒரு ஜாதியாருக்கு அடிமையுமாக்குவதை ஒழிக்க வேண்டுமென்பதைத் தவிர புரோகிதர்களின் வாயில் மண்ணைப் போட வேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடன் நான் கூறவே இல்லை. ஒரு கூட்டத்தாருக்குக் கொடுப்பதே புண்ணியமென்று நினைப்போமானால் நாம் சுயராஜ்ய மடைவதற்கே தகுதியுடையவர்களல்ல. நமது முன்னோர்கள் தர்மம், புண்ணியம் என்று வாரி வாரி இப்பிராமணர்களுக்கு கொடுத்தும் அவர்களும் அவர்களுடைய குடும்ப மிருக்கிற நிலைமையையும் பாருங்கள். நமது சுயராஜ்யமும் போய் பர ராஜ்யமும் அடிமைத்தனமும்தான் மீதி. இன்னும் தஞ்சாவூர் ராஜா காசி முதல் கன்னியாகுமரி வரை தான தர்மங்களும் சத்திரங்களும் கட்டிவைத்திருந்தும், அவருடைய பெயர் சொல்ல இன்று ஒரு சந்ததி கிடையாது. இன்னும் எத்தனை குடும்பங்கள் கெட்டுப்போய் விட்டது என்று கவனியுங்கள். ஏழைகளுக்கும் கூன், குருடு, வேலைசெய்ய இயலாதவர்களுக்கே நாம் தர்மங்கள் செய்ய வேண்டுமே யொழிய வேலை செய்யவோ பணம் சம்பாதிக்கவோ திறமையுள்ள பிராமணக் கூட்டத்தாருக்கு மதங்களின் பெயராலும் வீணாக நாம் ஒரு நாளும் கொடுக்கவே கூடாது. ஒரு குழந்தை ஜனனமானது முதல் அதன் ஆயுள் பரியந்தம் நாம் சடங்குகள் பெயரால் பணம் கொடுப்பதல்லாமல் இறந்தபின்னும் நாம் செலவு செய்கிறோம், இத்தகைய மனப்பான்மையுள்ள நாம் சுயராஜ்யமடையத் தகுதி யுடையவர்கள்தானா? மக்களுக்குள் உயர்வு தாழ்வு தீண்டாமை முதலியவைகள் காட்டிவிருந்து வரும்வரை நம் நாடு சுயராஜ்யமடையப் போவதில்லை. ஆகையால் நீங்கள் இப்புரோகித மதத்தை ஒழித்து சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) "சூத்திரன்" என்ற சொல் வேசி பிள்ளை என்ற இழி பொருள்களைக் கொடுக்கின்றமையால் இச்சொல் வழக்கில் இல்லாதபடி உடனே செய்யும்படிக்கும், சட்டங்களில் பிராமணனுக்கும் மற்றவர்களுக்கும் எவ்விதமான வித்தியாசமுமிலலாமல் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது என்று காரைக்குடி சின்னையா பிள்ளை கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது.

(2) இந்து மதம் என்பதைச் சார்ந்த பெண்களுக்கு ஆண்மக்களைப் போன்று குடும்ப சொத்தில் பங்கும் உரிமையும் கொடுக்கவேண்டுமென்றும் அதற்கேற்ப இந்துச் சட்டத்தை திருத்தவேண்டுமென்றும் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறதெ

ன் திரு ஜே. எஸ் கண்ணப்பர் கொண்டு வந்த தீர்மானம் ஸ்ரீமதி ராமாமிருதம்மாளால் ஆமோதிக்கப்பட்டு பின் ஏகமனதுடன் நிறைவேறியது.

(3) கும்பகோணம் முனிசிபல் கவுன்சில் நாமிநேஷனில் கவர்ன்மெண்டார் ஒரு கக்ஷியும் சாராது நடுநிலைமை நில்லாது பார்ப்பனர் காங்கிரஸ் கக்ஷியார் சார்பாக நாமிநேஷன் செய்ததைப்பற்றி இம்மகாநாடு கண்டிக்கிறது என்ற ஸ்ரீமான் எஸ். எஸ். சாரங்கபாணி பக்தர் கொண்டுவந்த தீர்மானமும் நிறைவேறியது.

(4) ஆடுதுறை விவசாயப் பண்ணையைச் சார்ந்து ஓர் விவசாயப்பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(5) நாட்டார்வாய்க்கால் கீர்த்திமான் ஆறு இந்த இரண்டு நதிகளுக்கும திருநாகேசுவரத்தில் பாலம் கட்டவேண்டுமென்றும் திருமலைராஜன் போன்ற ஆறுகளுக்கு இப்பொழுது தண்ணீர் விடாமல் எப்பொழுதும் அடைத்திருப்பதால் பிரசுதார்களுக்கு கஷ்டம் அதிகமாயிருப்பதினால் மற்ற நதிகளைப் போல் இதற்கும் முறை போட்டு பாசனத்திற்கு தண்ணீர் விடும்படியாய் இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(6) காவேரியில் கவிஸ்தலத்திற்கு மேற்கில் ஆறுகண்ணில் தண்ணீர் திறந்து விடக்கூடாதென்று இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(7) சர்க்கார் டிரேனிங் பள்ளிக்கூடத்தில் 100-க்கு 75 வீதம் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களையே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(8) முனிசிபல் எல்லைக்குள்பட்ட திருப்புவனம் நன்செய் புன்செய் நிலங்களுக்கு ரெவினியு டிபார்ட்மெண்டில் வரி அதிகமாய் விதித்து வாங்குவதினால் முனிசிபாலிடியாரும் வரி விதித்து வசூல் செய்யக்கூடாது. அந்தப்படி வரி விதித்து வசூல் செய்வதை சட்டம் செய்து ரத்து செய்துவிடும்படி கேட்டுக்கொள்கிறது.

(9) முனிசிபல் எல்லைக்குள்பட்டு வந்து குடி இருக்கும் வரி கிராமத்து மிராசுதார்களுக்கு முனிசிபாலிட்டியில் தொழில்வரி விதித்து வாங்குவதை சட்டம் செய்து ரத்து செய்யும்படி இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(10) ராயல் கமிஷனைப்பற்றி சர்வகட்சி தலைவர்களையும் மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அழைபித்து யோசனை கேட்ட சமயம் பிராமணரல்லாதாரியக்கம் இருப்பதை அறிந்தும் கவனியாமல் பாராமுகமாய் இருந்ததைக் குறித்து இம்மகாநாடு கண்டிக்கிறது.

(11) ராயல் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென சில கக்ஷி தலைவர்கள் சொல்லுவது இந்தியர் ஒருவரையேனும் கமிட்டிகளில் நியமிக்காதது பற்றியே. இந்தியரை நியமித்தால் நமக்கெல்லாம் பிரதிநிதியென ஒருபார்ப்பனர் அல்லது அவர் சொல்படி ஆடும் பார்ப்பனரல்லாதார்தான நியமிக்கப்படுவார்கள். அப்படிக் கிவர்களை நியமித்து நமக்கு இடையூறு நாமே தேடிக்கொள்ளுவதைவிட இப்பொழுது வரும் கமிஷனால் நமக்கு நன்மையுண்டாகா விட்டாலும் தீமை உண்டாகாமல் இருக்கவேணும் கமிஷனை பகிஷ்கரிக்க கூடாதென இம்மகாநாடு கோருகிறது.

(12) வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு ஜென்ம விரோதிகளான சென்னை மாகாண காங்கிரஸ் பார்ப்பனர்களும் இதர பார்ப்பனர்களும் ராயல் கமிஷன் கமிட்டிகளில் ஸ்தானம் வகித்து நமது கொள்கையை பலவிதத்திலும் நிறைவேற வொட்டாமல் செய்வதற்கு வாக்கு மூலம் வாங்கும் விஷயத்தில் அநேக சூழ்ச்சிகளை செய்ய இப்பொழுதே ராயல் கமிஷன் பகிஷ்கார வேஷம் போட்டு கமிட்டிகளில் ஸ்தானம் பெறமுயலுவதால் அவர்கள் ஸ்தானம் பெறுவாரானால் நமது கக்ஷி வாக்கு மூலத்தை நமது மாபெரும் தலைவர் திரு. டாக்டர் நாயர் பெருமான் காலத்தில் வாங்க மறுத்தது போல் இப்பொழுது செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(13) திராவிட தமிழ் உலகத்திலுள்ள சித்த வைத்தியத்தையே ஆதரிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(14) சென்னை சுதேச வைத்திய கலாசாலை சித்த வைத்தியப் பகுதியில் ஆதிதிராவிடர் முதலிய ஏழை மாணவர்கள் போய்ப் படிக்கும் படிக்கு ஸ்தலஸ்தாபனங்களின் மூலமாய் (ஸ்காலர்ஷிப்) முதலிய போதுமான ஆதரவளித்து ஏராளமான மாணவர்களை அனுப்பும் படிக்கு ஸ்தாபன தலைவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது என திருவாரூர் தமிழ் சித்தவைத்தியசாலை முனிசிபல் வைத்தியர் ஸ்ரீ கண்ணுசாமி பிள்ளை அனுப்பிய மேல்கண்ட இரண்டு தீர்மானங்களும் நிறைவேறியது.

(15) அயல் நாட்டிற்கு சென்றிருந்தும் தாய் நாட்டை மறவாமலும் பிராமணீயக் கொடுமையை ஒழிப்பதற்கு அநுபாடுபடுபவரும் 500 'குடி அரசு' சந்தாதாரர்களை சேர்த்தனுப்பியவரும் திருவண்ணாமலை கோவில் வழக்கிற்காக ரூ. 100 சேர்த்தனுப்பியவருமான திரு சாரங்கபாணி நாயுடுவையும் அவரது நண்பர்களையும இம்மகாநாடு பாராட்டுகிறது.

16 திருவிடைமருதூர் யூனியனுக்குட்பட்ட எலிமெண்டரி கல்வி சாலைக்கு இந்த ஜில்லா கல்விக் கமிட்டியார் ஏராளமான பொருளுதவி (கிராண்ட்) பெற்றும் கல்விக்காக பயிலும் மாணவர்களிடம் அதிகபணம் வாங்குவதை கண்டிப்பதுடன் இத்தகைய பள்ளிமாணவர்களுக்கு இலவசமாய் கல்வி கற்பிக்கவேண்டிய முயற்சியில் உடனே ஜில்லா போர்டும், ஜில்லா கல்வி சபையும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

17 பி என். ஆர். ரயில்வேயிலும் தென்னிந்திய ரயில்வேயிலும் சிக்கன திட்டம் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளரைக் குறைக்க ரயில்வே அதிகாரிகள் முற்பட்டிருப்பதை இம்மகாநாடு பலமாகக் கண்டிப்பதுடன் தொழிலாளர்கள் எல்லோரும் அநேகமாக பிராமணரல்லாதாராயிருப்பதால் அவர்களுக்கு இச்சோதனைக்காலத்தில் பிராமணரல்லாத சகோதரர்கள் உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றது.

18 சுயமரியாதைக்கு உழைக்கும் 'திராவிடன்' 'குடி அரசு' 'ஜஸ்டிஸ்' முதலிய பத்திரிகைகளுக்குப் பார்ப்பனரல்லாதார் யாவரும் சந்தாதார்களாய்ச் சேரவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

19 நமது முன்னேற்றத்துக்குத் தடையாய் இருக்கும 'சுதேசமித்திரன்' 'இந்து' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது.

20 பிராமணரல்லாத நம் சகோதரர்கள் பெரும்பான்மையாக ஐக்கிய நாணயச் சங்கங்களில் சேர்ந்து பொருளாதார நிலைமையைச் சீர்படுத்துவதோடு அவைகளிலுள்ள பிராமண ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

21 திருவையார் சமஸ்கிருத காலேஜுக்கு செய்யும் செலவில் ஒரு பகுதியைக்குறைத்து ஆதிதிராவிட வகுப்பில் இன்னமும் அதிகமான பிள்ளைகளுக்கு போதிக்கும் ஆரம்பப் படிப்பும் ஏற்படுத்தவேணுமாய் ஜில்லா போர்டை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

22 தற்போதைய தாலூகா போர்டு தேர்தல் தொகுதிகளில் போதுமான வாக்காளர்கள் செல்ல சௌகரியம் இல்லாததினால் இந்நிலையை மாற்றிவிட்டு ஒவ்வொரு அபேக்ஷகருக்கும் தனித்தனி தொகுதி ஏற்படுத்துமாறு தாலூகா போர்டு அங்கத்தினர்களையும ஜில்லா போர்டாரையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

23 இந்த ஜில்லாவில் உள்ள ஜில்லா போர்டு தாலூகா போர்டு முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்களுக்கு கட்டுப்பட்ட பள்ளிக்கூடங்களில் 100க்கு 90 பேருக்கு குறையாமல் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களையே நியமிக்க வேணுமாய் அந்தந்த ஸ்தாபனத்தின் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது. உபாத்தியாயர்கள் கிடைக்கவில்லை என்று ஏற்படுமானால் அந்தந்த ஸ்தாபனங்களில் இருந்து ஸ்டைபெண்டு கொடுத்து பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களை தயார் செய்யவேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

மேட்டூர் பாசன திட்டத்தை இம்மகாநாடு கண்டிக்கிறது. மேற்படி திட்டம் சிறிது கூட சிக்கனமின்றி செய்யப்பட்டு வருவதாகவும், நஞ்சை நிலங்களுக்கு கூடுதல் வரி விதிக்ககூடாதென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

### தலைவர் முடிவுரை.

மகாநாட்டுப் பந்தலில் பல தீர்மானங்கள் நிறைவேறிய பின் தலைவர் திருவாளர் ஐ. குமாரசாமி பிள்ளை தனது முடிவுரையை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது:—இம்மகாநாடு சிறப்பாக நடந்தேறியதற்காக நான் உங்கள் அனைவருக்கும் வந்தனம் செலுத்துகின்றேன். இம்மகாநாடு தாலூகா மகாநாடாயிருந்தாலும, ஜில்லா மகாநாட்டைப் போல் அவ்வளவு சிறப்புடனும் வெற்றியுட

இதன தொடர்ச்சி 14 பக்கம் பார்க்க

# ராயல் கமிஷனும் சுயமரியாதையும்.

'ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு
ஸ்ரீமான்
ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்
செய்தி.

"ஜஸ்டிஸ்" கட்சித் தலைவர்களுக்கு ராயல் கமிஷன் விஷயத்தில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய தன்மையைப்பற்றி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தனது அபிப்பிராயமாக தெரிவித்துக்கொண்டிருக்கும் செய்தியாவது:—

பிரிட்டிஷாரின் ஏகபோக ஆதிக்கத்தை இந்தியர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறவரையில், இம்மாதிரியான ராயல் கமிஷன்களில் இந்தியர்களுக்கு பதவி அளிக்காதது நம்மவர்களின் சுயமரியாதையை பாதிக்கக்கூடியதாயிருக்கின்றது என்று எண்ணுவதில் கொஞ்சமாவது அர்த்தமில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஒரு அம்சமாகவே இந்த கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியரின் சுயமரியாதையை அடியோடு அழித்தகான பஞ்சாப் அநீதிபோன்ற காரியங்களில் ஒன்று சேர்ந்து பரிகாரம் தேட சம்மதிக்காத ஒரு கூட்டத்தார் இப்போது பகிஷ்காரத்தைப் பற்றி வீண் கூப்பாடு போடுவது கேலிக்கிடமானதென்றே சொல்லவேண்டும்.

உண்மையில் ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பது என்பது, எந்த அரசாங்கத்தாரால் இந்த ராயல் கமிஷன் ஏற்படுத்தப்பட்டதோ அதே அரசாங்கத்தின் அம்சங்களான சட்டசபைகளையும், மந்திரி முதலிய பதவிகளையும் உத்தியோகங்களையும் பகிஷ்கரிக்கத்தக்க கொள்கையுடையதாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு விதமான தியாகத்திற்கும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லாததான வெறும் வார்த்தை யளவில் பகிஷ்காரம் என்று கூச்சல் போடுவதானது சுயமரியாதை உள்ள தேசத்தார் என்பவர்களுக்கு கொஞ்சமும் அழகாகாது. உண்மையிலேயே முழு விடுதலைக்கும் நம்முடைய நாட்டார் தயாராயிருக்கின்றார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், அந்த காலத்தில் பார்ப்பனரல்லாதாரே முன்னணியில் நின்று விடுதலைப் போர் புரிவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகப்படவேண்டியதில்லை.

ராஜீய விஷயங்களில் சாத்தியமானதும், காரியத்தில் நடக்கக் கூடியதுமான துறையில் பாடுபடும் "ஜஸ்டிஸ்" கட்சிக்காரர்கள், வேண்டுமென்றே பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக மற்ற கட்சியார் செய்யும் சூழ்ச்சிகளில் கலந்து கொள்வது என்பது அறிவுடைமை யாகாது.

கோயமுத்தூரில் கூடிய தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாநாட்டில் மாகாண சுயாட்சி கிடைக்கும் வரையிலும் பதவிகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகலால் முழு சுதந்திரம் கேட்கக்கூடிய காலம் வரும் வரை 'ஜஸ்டிஸ்' கட்சிக்காரர்கள் மாகாண சுயாட்சிக்காகவும், நம்முடைய நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்களுக்கும் சமமான நீதியும் பங்கும் கிடைக்கும் படியாகவும், ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரை விட உயர்ந்தவர்கள் என்று கொண்டாடும் பாத்தியதையை நிராகரிக்கவும் ஒரே நிலையாக இருந்து பாடுபட்டு வரவேண்டியவர்களாவார்கள். 'ஜஸ்டிஸ்' கட்சியாரின் வெளிப்படையான இந்த கொள்கையை நம்முடைய தேசமக்களிடமும், மற்றும் அந்நிய நாட்டாரிடமும், அவர்களால் ஏற்படுத்தப்படும் சபைகளின் முன்னிலையிலும் ஸ்தாபிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

கமிஷன் அங்கத்தினர்களில் இந்திய அங்கத்தினர்கள் ஒருவரும் இல்லாதது ஒரு கெடுதியாகக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. கவர்ன்மெண்டார் ஒரு சமயம் இந்தியர்களில் யாரையாவது நியமிப்பதானால் இப்போதைய நிலைமையில் நியமனம் பெறக்கூடிய இந்தியர்கள் பொதுவாக பிராமணரல்லாதாருக்கு தீங்கிழைக்கக் கூடியவர்களாகத்தான் இருக்கமுடியும்.

தவிர, ஆதியில் ரௌலட் கமிட்டியில் இந்தியர் ஒரு அங்கத்தினராயிருந்தும் கூட அக்கமிட்டியின் சிபார்சானது இந்திய மக்களை அரசாங்கத்தோடு ஒத்துழையாமை செய்யவேண்டிய அளவுக்கு கொண்டுவந்து விட்டு விட்டது. பொதுவாக யோசிக்குமிடத்து கமிஷனில் அங்கம் பெறக்கூடியவர்கள் ஏகபோக உரிமையாளர்களான பார்ப்பனர்களாகவே இருந்து விடக்கூடும் என்கிறதை நினைக்கும்போது அக்கமிஷனில் இந்தியர்களை நியமிக்காதது ஒரு பாக்கியமென்றே சொல்லவேண்டும்.

---

# ஸ்ரீ நாயக்கரின் தஞ்சை சுற்றுப்பிரயாணம்.


சென்றவாரம் தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருவையாறு, நாகூர் முதலிய இடங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்ததுடன், இவ்வாரமும் திருப்புவனம், மாயவரம், பேராவூரணி, பொன்மலை முதலிய இடங்களுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சுகமே வந்து சேர்ந்தோம். சென்ற இடங்களில் எல்லாம் பொது ஜனங்களின் உற்சாகமும் சுயமரியாதை ஆவலும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாததுடன் பார்ப்பனர்கள் அரசியல் பெயராலும் மதத்தின் பெயராலும் இதுவரை செய்துவந்த சூழ்ச்சிகளையும் அவற்றால் நாம் ஏமாந்து அனுபவித்து வந்த கஷ்டங்களையும் நன்றாய் உணர்ந்துவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். தவிர, திருப்புவனத்தில் கூடிய கும்பகோணம் தாலூகா மகாநாட்டில் நிறைவேறப்பெற்றிருக்கும் தீர்மானங்களை அந்த ஜில்லா போர்டார் எவ்வளவு தூரம் அமுலுக்குக் கொண்டுவரப்போகின்றார்கள் என்பதையும் மக்கள் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது திருவையாறு சமஸ்கிருத காலேஜுக்காக வருஷம் ஒன்றுக்கு 35000 ரூபாய் வீதம் செலவழிக்கப்படும் தொகையிலிருந்து பகுதியையாவது தமிழுக்கும் ஆதிதிராவிட சமூகத்தாரின் கல்வியபிவிருத்திக்கும் செலவிட வேண்டும் என்று செய்யப்பட்ட தீர்மானமும், ஜில்லா போர்டு பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் 100-க்கு 90 பேராவது பார்ப்பனரல்லாதாராயிருக்க வேண்டும் என்கின்ற தீர்மானமும், போதுமான பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்கள் கிடைக்கவில்லை என்கின்ற சாக்கு சொல்வதற்கில்லாமல் வேண்டிய உபாத்தியாயர்களுக்கு ஸ்டைபெண்டு கொடுத்து தகுதியுண்டாக்க வேண்டுமென்கின்ற தீர்மானமும் முக்கியமானவைகளில் சேர்ந்தவைகளாகும். இவற்றை பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு பாடுபடுவதாகச் சொல்லும் ஜில்லா போர்டு பிரமுகர்கள் கவனிப்பார்களா என்பது இனிமேல்தான் அறிய வேண்டும்.

## பேராவூரணி.

பட்டுக்கோட்டைக்கு அடுத்த பேராவூரணியில் நடந்த சுயமரியாதை மகாநாட்டை பார்த்தவர்களுக்குத்தான் அதன் பெருமை விளங்கும். அந்த சின்ன கிராமத்தில் 2500 பேர்களுக்கு மேலாக பல கிராமங்களிலிருந்து வந்து பகல் 2-மணி முதல் இரவு 9-மணி வரை அசையாமல் உட்கார்ந்து கேட்டதும் காட்டிய உற்சாகமும் நமது சுயமரியாதை இயக்கத்தின் வெற்றியையே குறிப்பிட்டது. இந்த மகாநாட்டிற்கு முக்கியஸ்தர்களாயிருந்து நடத்திய அவ்வூர் இந்து முஸ்லீம் கனவான்களின் ஊக்கமும், அங்குள்ள மலையாள சாமியார் அவாது சிஷ்யர் குப்புசாமியார் இவர்களின் ஊக்கமும் உபசரிப்பும் ஆசையும் யாவராலும் அளவெடுக்க முடியாததென்றே சொல்லுவோம். அந்தக்கூட்டத்தில் குறைந்தது 500 பேராவது அந்த நிமிஷத்திலிருந்தே மூட நம்பிக்கையிலிருந்தும் பொய் மதக்கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை பெற்றிருப்பார்கள் என்றே சொல்லவேண்டும். இனியும் இது போன்ற மகாநாடுகள் அந்தப்பக்கங்களில் மாதா மாதம் நடைபெறுமெனத் தெரிகின்றது.

இவ்வாரம் 26உ சனிக்கிழமை பகல் வண்டியில் ஸ்ரீமான் நாயக்கர் திருநெல்வேலியில் சுயமரியாதைச் சங்க ஆண்டு விழாவுக்கு தலைமை வகிக்க புறப்படுகிறார். 30உ அல்லது முதல்தேதி வாக்கில் திரும்புவார்.

போலி பஹிஷ்காரப் பிரசாரத்தையும் பெசண்டம்மையார் செய்யும் பார்ப்பனப் பிரசாரத்தையும் வெளியாக்குவதற்கு இம்மாதிரி சுற்றுப்பிரயாணம் முன்னிலும் அதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறபடியால் ஒவ்வொரு இடத்துக்கும் நாயக்கரே வரவேண்டுமென்று எதிர்பார்க்காமல் ஆங்காங்குள்ள நண்பர்கள் சுற்றுப்பிரசாரங்களில் தாங்களாகவே சுற்றுப்பிரசாரம் செய்து உண்மையை விளக்கிக்காட்டவேணுமாய் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். சமயம் மிகவும் நெருக்கடியானதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு கார்த்திகை 12-உ

## ராயல் கமிஷன்.

ராயல் கமிஷன் பகிஷ்காரக் கூச்சல் சுயநல அரசியல் வாதிகளிடை எவ்வளவுக்கெவ்வளவு பலமாகக் கிளம்புகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டிலுள்ள மக்களிடை அதன் புரட்டுகளும் வெட்ட வெளிச்சமாய்க் கொண்டு வருகின்றது.

தவிர பகிஷ்காரத்திற்கு எதிர் பிரசாரமும் பலமாய் ஏற்பட்டு வருகின்றது. பகிஷ்கார காரணங்களும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றன. எனவே கூடிய சீக்கிரத்தில் பகிஷ்காரக் கூச்சலுக்கு சாவுமணி அடித்து விடும் என்பது திண்ணம்.

ராயல் கமிஷனில் இந்தியர்களை சேர்க்கவில்லை என்ற கருத்துடன் தான் ஆதியில் பகிஷ்காரம் ஆரம்பிக்கப்பட்டது. தேசத்தில் இருக்கும் கட்சிப் பிளவுகளையும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கும் சூழ்ச்சிகளையும் வெளியாக்கி, யாரை நியமிப்பது என்ற கேள்வி பிறந்தபின் அதற்கு பதில் சொல்ல முடியாமல, இப்போது, கமிஷனை பகிஷ்கரிப்பதற்கு அது காரணமல்ல என்று சொல்ல முன் வந்து விட்டார்கள். 'காங்கிரஸ்' சுயராஜ்யக் கட்சி முதலியவற்றிற்கு தலைவரான பண்டித மோதிலால் நேரு அவர்கள் கமிஷனில் இந்தியரைச் சேர்க்காதது மிகவும் நல்லதென்றே சொல்லி விட்டார்.

ஆகவே பகிஷ்காரத்தின் வேருக்கு சாவுமணி அடித்தாய் விட்டது இனி கப்புக் கவருகளைப் பற்றி நாம் அதிகக் கவலைப்பட வேண்டியதில்லை.

### சுயமரியாதை.

பகிஷ்காரத்திற்கு இப்போது முக்கியமாய்ச் சொல்லிக் கொள்ளப்படும் காரணமெல்லாம் இந்தியாவின் சுயமரியாதையை உத்தேசித்து பகிஷ்காரம் செய்யவேண்டுமென்பதாகக் கூச்சலிடப்படுகின்றது. கமிஷன் நியமித்ததினால் இந்தியாவின் சுயமரியாதை இந்தக் கூட்டத்தாருக்கு எந்த விதத்தில் பாதிக்கப்பட்டு விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த ராயல் கமிஷன் நியமிக்கப்படும் என்கிற விஷயம் இன்றல்ல நேற்றல்ல இன்றைக்கு 8, 9 வருஷத்திற்கு முன்பாகவே நமக்கு வழங்கியதாய் சொல்லப்பட்ட சீர்திருத்த நிபந்தனையிலேயே கண்டிருக்கின்றது. அதாவது இந்த சீர்திருத்தத்தை இந்தியர்கள் நன்றாய் நடத்திக்காட்டி விட்டார்களா என்கின்ற பரீட்சை பார்க்க இனி பத்து வருஷம் கழித்து ஒரு கமிஷன் வைத்து விசாரணை செய்யப்படும் என்கின்ற தத்துவம் கொண்ட வியாசங்கள் அதில் காணப்பட்டிருக்கின்றன. 1920 ஆம் வருஷத்திய சீர்திருத்தம் போதாது, அது அதிருப்தியும், ஏமாற்றமும் அளிக்கிறதாயிருக்கிறது. ஆதலால் இதை பகிஷ்கரிக்கவேண்டும் என்று காங்கிரஸ் சொன்ன காலத்தில் அதை எதிர்த்து இந்த சீர்திருத்தமானது சுயராஜ்யத்திற்கு முதற்படியானது, இதை நடத்திக்காட்டிய மேலால் சீர்திருத்தம் கேட்கவேண்டுமேயல்லாமல் பகிஷ்கரிப்பது சரியல்லவென்றும், இத்தீர்மானத்தை நிறைவேற்றினால் லேயே காங்கிரஸ் செத்துப்போய்விட்டது என்றும் சொல்லியதுடன், சீர்திருத்தத்தை நடத்த தனது சிஷ்ய கோடிகளை ஏவி விட்டு ஆள் ஒன்றுக்கு மாதம் 5000, 6000 ரூ வீதம் சம்பளம் வாங்கிக்கொடுத்தது இதே பெசண்டம்மையார் தான். அப்படிப்பட்ட அம்மைக்கு மறுபடியும் கமிஷன் நியமித்ததால் இப்போது திடீரென்று சுயமரியாதை ஞானம் எப்படி வந்தது என்பது நமக்குவிளங்கவில்லை.

இந்தியாவின் சுயமரியாதைக்கு ஒரு வெள்ளைக்கார சீமாட்டி அழுவதென்றால் 'ஆடு நனைகிறதென்று ஓநாய் ஒலமிட்டழுத கதையையே' ஒக்கும் என்பதே நமது அபிப்பிராயம். அதிலும் பெசண்டம்மையார் அழுவதெனபது 'ஆடு நனைகின்றதென்று சிறுத்தைப் புலி அழுவதையே ஒக்கும் என்றும் சொல்லுவோம்.

இந்தம்மையார் இந்தியாவின் சுயமரியாதைக்காக கவலைப்படுவதின் யோக்கியதையைப் பொது மக்கள் அறிய உதாரணம் பஞ்சாப் படுகொலையை ஆதரித்து பிரசாரம் செய்தார்களே அது ஒன்றே போதும் என்றே நினைக்கிறோம். அதாவது "பஞ்சாபியர்கள் கொங்கல் போட்டதற்கும் ஜனரல் டையர் பீரங்கி தண்டு போட்டதற்கும் சரியாய் போய்விட்டது. இதுதான் அரச தர்மம்" என்று சொன்னார்கள்.

இவ்வம்மையார் சுயமரியாதை லக்ஷணம் இப்படியானால், அய்யம்மார் அய்யங்கார்மார்கள் சுயமரியாதை உரைச்சித்த ஏதாவது உதாரணம் வேண்டுமானால் அதே பஞ்சாப் அக்கிரமத்தின் போதும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒத்துழையாமையின்போதும் இவர்கள் என்ன செய்தார்கள் என்பதை சற்றுயோசித்தால் விளங்காமல் போகாது.

ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேறியதும ஸ்ரீமான்கள் 'சுதேசமித்திரன்' ஆசிரியரும் இப்போதைய காங்கிரஸ் காரியதரிசியுமான எ. ரங்கசாமி அய்யங்காரும் 'இந்து' ஆசிரியரும் தமிழ்நாட்டுத் தலைவராயுமிருந்த கஸ்தூரி ரங்கய்யங்காரும், பரிசுத்த தேசியவாதி என்று சொல்லப்படுபவரும் சுயராஜ்யக்கக்ஷி காரியதரிசியும் சட்டசபையில் காங்கிரஸ் கக்ஷி உப தலைவரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியுமான சத்தியமூர்த்தி அய்யரும் ராஜிநாமா கொடுத்து விட்டு ஓடிப்போய் விட்டார்கள். இந்திய தேசீய தலைவரும் எல்லா இந்திய காங்கிரஸ் தலைவரும டிக்டேடர் என்று சொல்லுவதான ஏகதலைவருமான ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் (ஒத்துழையாமை) பகிஷ்காரங்கள் என்பது சட்ட விரோதம் என்று சொன்னார்.

ஆகவே பஞ்சாபில் குழந்தைகுட்டிகளுடன் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு பெருங்கூட்டத்தில் முன் பின் எச்சரிக்கை இல்லாமல் பின்புறமாய் வந்து ஓடவிடாமல் தடுத்து மிஷின் பீரங்கி வைத்து பட்டாஸ் சுடுவது போல் சடபுட சடபட என்று குண்டுகளைப் பொழிந்து மக்களைக்கொன்றதும் தண்ணீர் குழாய்களையும் கரந்த விளக்குகளையும நிறுத்தி தெருவில் மக்கள் வயிற்றினால் ஊர்ந்து போகும்படி சொன்னதும் மக்களை மூக்கை நிலத்தில் தேய்த்ததும் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தினதும் கொண்டி அடித்து நடக்கும்படி கட்டளை இட்டதும் பெண்கள் கற்பை அழித்ததும சகோதரிகளை நிர்வாணமாக்கி மர்மஸ்தானத்தில் கோலை குத்தினதும் ஆகிய காரியங்களை இந்தியாவின் சுயமரியாதைக்கு பங்கம் என்று நினைக்காமலும் வேறு சிலர் அப்படி நினைத்தும் அதற்கு பரிகாரம் செய்ய ஏற்படுத்திய பஹிஷ்காரங்களுக்கு கட்டுப்படாமலும் எதிரிகளுக்கு உளவாயிருந்து கூலி வாங்கினதுமான இந்த துரோகிகள் வஞ்சகர்கள் காட்டிகொடுப்பவர்கள் அயோக்கியர்கள் இப்போது தங்களுக்கு திடீரென்று சுயமரியாதை ஞானம வந்துவிட்டதென்று சொன்னால், கடுகளவு மூளையுள்ளவனாவது அவ்வளவு யோக்கியனாவது இவற்றை நம்பமுடியுமா என்றுதான் கேட்கின்றோம். குறிப்பாகப் பேசுமிடத்தில் இந்த பஹிஷ்காரத்தை கிளப்பியதில் நம நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களது வயிற்றுப் பிழைப்புக்காக எந்த எந்த வழியில் தங்கள் சுயமரியாதையை விற்றுப் பிழைக்கின்றார்கள் என்பதும் தங்கள் சுயநலங்களுக்காக எந்தெந்த விதத்தில் மதத்தின்பேராலும் அரசியலின்பேராலும் எத்தனை கோடி மக்களின் சுயமரியாதையைக் கெடுத்து வாழ்கின்றார்கள் என்பதும், இந்திய நாட்டுக்கு வந்தவெந்த அன்னிய ஆட்சியாவது இந்த பஹிஷ்காரப்பார்ப்பனக் கூட்டத்தின் உள் உளவும் காட்டிக்கொடுக்கும் தன்மையும இல்லாமல் வாழ்ந்ததாஎன்பதும் அறியாதார்கள் யார் என்றே கேட்கின்றோம். ராயல் கமீஷன் நியமிக்கப் பட்டதானது எந்த விதத்திலாவது இந்தியாவின் சுயமரி

யானைக்கு விரோதமானது என்று இந்தப் பார்ப்பனக் கூட்டத்தாராவது பெசண்டம்மை கூட்டத்தாராவது மற்றும் வேறு எந்த யோக்கியராவது உண்மையில் நினைப்பார்களானால் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய யோக்கியதை என்ன என்பதையாவது சற்று யோசித்துப் பாருங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ராயல் கமீஷன் யாரால் ஏற்படுத்தப்பட்டது? பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்பவர்கள் யார் என்றால் நம் நாட்டை ஆளுவதற்குஏற்பட்ட பிரிட்டிஷ் ஜனங்களின் பிரதிநிதிகள் ஆகவே அவர்களுடைய நடவடிக்கையை நாம் ஒப்புக்கொள்ளவில்லையானால், அல்லது அவர்களது நடவடிக்கை நமக்கு சுயமரியாதைக்கு விரோதமென்பதானால் நாம் செய்யவேண்டிய காரியமென்ன? அவர்கள் ஏற்படுத்திய சட்ட சபையில் அரைக்ஷணம் உட்கார்ந்திருக்கலாமா? அவர்கள் ஏற்படுத்திய உத்தியோகத்தில் அரை வினாடி இருக்கலாமா? அதற்காக அவர்கள் கொடுக்கும் காசில் ஒரு சின்னக்காசு பெறலாமா? அவர்களின் இம்மாதிரியான நமது சுயமரியாதைக்கு விரோதமான ஆட்சியை நடத்த நாம அடிமையாகப் பதிவு செய்து கொள்ளலாமா? அவர்கள் ஏற்படுத்திய கோர்ட்டுகளில் அந்தக் கூட்டத்தாரால் ஏற்படுத்திய அதிகாரிகளிடத்தில் போய் நின்றுகொண்டு, கடவுளே! பிரபுவே! கனம்பொருந்தியவான்களே! என்று கும்பிடு போட்டுக் கெஞ்சும் வக்கீல் உத்தியோகத்தில் ஒரு இமை நேரமாவது இருக்கலாமா? ஆகவே இது போன்றவைகளை யோசித்துப் பார்த்தால் இப்போது பஹிஷ்காரத்தை ஒரு வாயில் பேசிக்கொண்டு மற்றொரு வாயில் மேற்படி காரியங்களை செய்து கொண்டு இருக்கும் கூட்டத்தார் யோக்கியர்கள் என்று யாராவது நம்ப முடியுமா என்றும் அப்படி நம்புகிறவர்களும் அவர்களை பின்பற்றுகின்றவர்களும் அறிவாளிகளாகவும் யோக்கியர்களாகவும் இருக்கக் கூடுமா என்றும் கேட்கின்றோம்.

பார்ப்பனர்களில் சுயமரியாதை யோக்கியம் நாணயம் ஆகிய இவைகளின் தத்துவம், கௌகத்தி காங்கிரஸ் தீர்மானத்திற்கு கொடுத்த மதிப்பையும் பார்ப்பனரல்லாதார் சிலர் காங்கிரசில் சேர எண்ணி வந்தவர்களை நடத்திய மாதிரியையும் சென்னை முனிசிபல் தலைவர் தேர்தலையும் கவனித்தவர்களுக்கு நன்றாய் விளங்காமல் போகாது.

சென்னையில் உண்மையை தைரியமாய் எடுத்துச்சொல்லவோ புத்தியுடன் நடந்து கொள்ளவோ பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகள் கூடப் பயப்படுகின்றன. ஆனபோதிலும் இது விஷயத்தில் 'சைபுல் இஸ்லா'மும், 'நவசக்தி'யும தைரியமாய் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி இருப்பதற்கு நாம் மிகவும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கின்றோம். 'சைபுல இஸ்லாம' எழுதியிருப்பதை வேறு இடத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். 'நவசக்தி' எழுதுவதாவது.—

"பஹிஷ்காரம் பஹிஷ்காரம என்று கூச்சலிடுவது சூழ்ச்சியின் பாற்பட்டதாகும்" "முன்னே உருக்கொண்ட பல கமிஷன்களில இந்தியர் சிலர் அங்கம் பெற்றதின் பயன் என்னவாயிற்று"?

"பஹிஷ்காரம் என்னும் சொல்லைக்கேட்டு சகோதரர்கள் ஏமாறலாகாது என்று எச்சரிக்கை வழங்குகிறோம்" என்று குறிப்பிட்டிருக்கின்றது. 'நவசக்தி' எழுதியிருக்கும் முழு வியாசமும் அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும.

எனவே நம் நாட்டிடை இதுசமயம் தோன்றியிருக்கும் பஹிஷ்கார இயக்கமானது பார்ப்பனர்களின் மற்றொரு சூழ்ச்சி என்பதையும் இதில் கலப்பதானது எவர்களுக்கும் குறிப்பாக பார்ப்பனரல்லாதாருக்கு தற்கொலையாயிருக்கும் என்பதையும் தெரிவிப்பதுடன் பார்ப்பனரல்லாதாரிலும் சிலர் பார்ப்பனர் வலையில் சிக்கி பஹிஷ்காரத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமான முக்கியஸ்தர்கள் கந்தசாமி செட்டியார், வரதராஜுலுக்கள் போன்றோர்களை நம்பி குழியில் விழுந்துவிடக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்கின்றோம்.

## மாஜி ஜட்ஜி சர் டி சதாசிவய்யர்

சர். டி. சதாசிவய்யர் இறந்ததைக்கேட்டு மனவருத்தமடைகின்றோம். மனிதனுடைய சாதாரண யோக்கியதைக்கும் நாணயத்திற்கும் மேற்பட்ட அந்தஸ்தும் ஒழுக்கமும் உள்ளவர் தென்னாட்டுப்பார்ப்பனர்களுக்குள் எந்த ஒரு பெரிய அதிகாரியாவது கூடிய வரையிலும் கண்ணியமாயும் நாணயமாயும் தனது அதிகாரத்தை செலுத்தியவர் உண்டா என்கின்ற ஒரு கேள்வி பிறக்குமானால் அதற்கு சர் சதாசிவம் என்றே சொல்லுவோம.

ஜன சமூக சமத்துவத்திற்கு எந்த ஒரு பார்ப்பனராவது கூடிய வரையில் சம்மதித்தவர் உண்டா என்கின்ற கேள்வி பிறக்குமானால் அதற்கு சர் சதாசிவம் தான் என்கின்ற விடையே பகர்வோம்.

எனவே இப்பேர்ப்பட்ட ஒரு பெரியார் இம்மண்ணுலகில் மறைந்தது பற்றி யாரும் துயருறாமல் இருக்க முடியாது என்பதோடு சர் சதாசிவத்தினிடமும அவரது குடும்பத்தாரிடமும் மிகுதியும அன்பும் மரியாதையும் விசுவாசமும் கொண்டுள்ள ஸ்ரீமான் திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் நமது ஆறுதலை சமர்ப்பிக்கின்றோம்

## வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு நடத்துவதாக நாலைந்து மாதத்திற்கு முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டு பணமும் வசூலிக்கப்பட்டு இதுவரையிலும் அதைப்பற்றி யாதொரு பிரஸ்தாபத்தையும் காணோம. அந்த ஜில்லா பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இது விஷயமாய் கவலை செலுத்தாமல் இருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது. இது சமயம் இவ்வளவுதான் சொல்லக்கூடும்.

## சேலம் தென் ஆற்காடு ஜில்லாக்கள்.

சேலம் ஜில்லாவிலும் தென் ஆற்காடு ஜில்லாவிலும் மகாநாடு விஷயமாக எவ்வித பிரஸ்தாபமும் காணப்படுவதில்லை. பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுப் பேச்சை ஆரம்பித்தால் அங்கங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களின் பதவி போய்விடுமோ என்னமோ என்று பயப்படுவதாகக் காணப்படுகின்றது. தமிழ் நாடுகளில் இப்படிப் பயந்து கொண்டு மதில்மேல் பூனையாயிருந்த காரணத்திற்காகவே பல பிரமுகர்களுக்கு இருந்த பதவி கூட போய்விட்டதாக நாம அனுபவத்தில் அறிந்துவருகின்றோம். ஆதலால் பதவியை சதா சர்வகாலம் கட்டிக்கொண்டு அழாமல் தாங்கள் எந்த முறையில் இந்தப் பதவிகளுக்கு வந்தோம் என்பதைக் கவனித்து சற்று கண் விழித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

## சுயமரியாதை பிரசாரத்தின் வெற்றி.

எவ்வளவோ காலமாய் பார்ப்பனர்களால் கொடுமைப்படுத்தப் பட்டிருந்த பாலக்காடு கல்பாத்திப் பொது ரோடுகளில் மலையாளத்து ஈழுவ சகோதரர்களும் தீய சகோதரர்களும் நடக்கக்கூடாது என்று இருந்த தடைகள் இவ்வருஷம் நீக்கப்பட்டுவிட்டது. அதுவும் ஐகோர்ட்டாரால் நீக்கப்பட்டதே ஒழிய பார்ப்பனர்களுக்குப் புத்தியும் சமரச ஞானமும் உதயமாகி நீக்கப்பட்டது என்று சொல்லவே முடியாது என்றே சொல்லுவோம். இன்னமும் இதுபோல் மலையாளத்திலும் தமிழ் நாட்டிலும் நடக்கக் கூடாததும், கிட்டே அணுகக் கூடாததுமான எத்தனையோ தெருக்கள் இருந்து கொண்டு வருகின்றன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் வெள்ளைக்காரர்கள் வாய் மூலமாய் தீர்ப்பை எதிர் பார்க்கின்றார்களே ஒழிய ஒரு பார்ப்பனருக்காவது புத்திவந்து தாங்களாகவே அனுமதித்தார்களென்று சொல்லிக்கொள்ள முடியாமலேயே இருக்கின்றது. இனி யாவது சுசீந்திரம் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த தலைவர்களுக்காவது திருவாங்கூர் அரசாங்கத்திற்காவது புத்தி வருமோ என்று கேட்கின்றோம்.

## ஸ்ரீ ஈ. வெ கிருஷ்ணசாமி நாயுடுகார்

ஸ்ரீமான் ஈ. வெ ராமசாமி நாயக்கரின் தமையனாரான ஸ்ரீ. கிருஷ்ணசாமி நாயுடுகார் அவர்கள் மலாய்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திற்காக இம்மாதம் 11-உ அவரது நண்பர் சுப்பராயலு நாயுடுகாருடன் டைரியா என்ற கப்பலில பிரயாணமானார். இப்போது அவர் கோலாம்பூருக்கு சுகமே போய் சேர்ந்ததாக சமாச்சாரம் கிடைத்திருக்கின்றது. எனவே, மலாய் நாட்டில் வசிக்கும் தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி நாயுடுகாரது சுற்றுப்பிரயாணத்திற்கு ஆதரவளிப்பாராக.

## பார்ப்பனர்கள் மாமிசம் சாப்பிட்டது

வடக்கே இந்து முஸ்லீம் ஒற்றுமைப் பிரசாரத்திற்காகப் போன ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் டில்லியில் பிரசங்கம் செய்து கொண்டிருக்கையில் முன் காலத்தில் ஆரியர்கள் பசுக்கள் உள்பட மிருகங்களை தெய்வங்களுக்கு பலி கொடுத்து அந்த மாமசங்களை உண்ணவில்லையா என்றும் இப்போது மாத்திரம் பசு பலியில் ஆரியர்களுக்கு இவ்வளவு அக்கறை வருவானேன் என்றும் பொருள்பட பேசிவரும்போது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டு இந்த வார்த்தைகளை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி சத்தம் போட்டு ஸ்ரீமான் அய்யங்காரை மிரட்டி விட்டார்களாம். அய்யங்காரும் பயந்து போய் சொன்னதை வாபீஸ் வாங்கிக்கொண்டாராம், இதனால் வடநாட்டு ஆரியர்கள் எவ்வளவு தூரம் நாணயமாயும் யோக்கியமாயும் நடந்துகொள்ளுகிறார்கள் என்பது வெளியாகின்றது. ஆனால் வேதம் என்பதிலும், மனுதர்மசாஸ்திரம் என்பதிலும், ஸ்மிருதி, ராமாயணம், பாரதம் என்பதிலும் மிருகங்களை கொன்று தின்றதாக வண்டி வண்டியாய் எழுதியிருப்பதற்கு இவர்கள் என்ன சமாதானம் சொல்லுவார்கள்? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஆண்பிள்ளையாயிருந்தால் தான் உண்மை என்று சொன்னதை உறுதிப்படுத்தி இருப்பார். ஒரோ பாவம் அவருக்கும் ஆண்மைத்தனத்துக்கும் எவ்வளவோ தூரம். ஆனதால் பேசாமல் ஓடிவந்து விட்டார்.

## ஸ்ரீ ஞானநத பிரம்மச்சாரி.

ஸ்ரீமான் ஞானாநந்த பிர்மாச்சாரி என்கின்ற பார்ப்பன நைஷ்டிக பிரம்மச்சாரியவர்கள் இவ்வாரம் முழுதும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கருடைய சுற்றுப்பிரயாணத்தில் இருந்து அங்காங்கு சமாசப பிரசார பிரசங்கம் செய்ததுடன் பார்ப்பனப் புரட்டுகளையும் ஆதாரரூபமாய் மக்களுக்கு விளக்கிக்காட்டி வந்து வெள்ளிக்கிழமை மாலை சேலம் சென்றுள்ளார்.

## தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

தென் இந்தியத் தொழிலாளர்களின் மத்திய சங்கக் கமிட்டி இம்மாதம் 20ம் தேதி தஞ்சையில் கூட்டி வேலை நிறுத்தம் செய்திருக்கின்றதாக கேள்விப் பட்டு மிகவும் கலக்கமுறுகின்றோம். தற்கால அரசியல் தலைவர்கள் என்போர்கள் யாரையும் நம்பாமல் தங்கள் காலிலேயே தாங்கள் நிற்கக்கூடிய யோக்கியதை அடைந்து தாங்களாகவே வேலை நிறுத்தம் செய்ய முன்வந்திருப்பது உண்மையானால் ஒரு சமயம் அது வெற்றி பெறலாம் எனினும், வேலை நிறுத்தம் என்பது சத்தியாக்கிரகத்தைவிட கடினமான தியாக புத்தி வேண்டிய அவசியமுடையதாகும். வேலை நிறுத்தத்துடன் போராடுவது பாம்பினிடம் போராடுவது போன்ற கஷ்டமும் ஆபத்து முடையதுமாகும் என்பதை நமது தொழிலாள சகோதரர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம்.

## ஒரு சந்தேகம்.

### ஆதி திராவிடா விபசாரி மக்களைவிட இழிந்தவர்களா?

ஆதிதிராவிடர் விபசாரிமக்களைவிட இழிந்தவர்களாமகமதியருக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தைகள் கோவிலுக்குள் போகலாம், பச்சையப்பன் கல்லூரியில படிக்கலாம் என்றும், கிருஸ்தவர்களுக்கும் இந்து விபசாரிகளுக்கும் பிறந்த குழந்தைகளும் கோவிலுக்கு போகலாம், பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், வெள்ளைக்காரனுக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தை கோவிலுக்கு போகலாம் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், தமிழ் நாடு அல்லாத அன்னிய நாட்டு தீண்டாதார் என்போருக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தை கோவிலுக்குள் போகலாம் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், மலையாள தீண்டாதார் என்போர்கள் இந்து கோவிலுக்குள் போகலாம் பச்சையப்பன் கலாசாலையில் படிக்கலாம் என்றும், பச்சையப்பன் கல்லூரியில் இதனை பேர்களும உபாத்தியாயாக இருக்கலாம் என்றும, பழக்கமும் வழக்கமும் இருக்கின்றது. ஆனால் தமிழ் நாட்டின் பூர்விகமான குடியாய் இருந்து, தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில வளர்ந்து, இந்துக்கள் என்று மதிக்கப்பட்டு வாழ்ந்து வரும் ஆதிதிராவிடர்கள் என்னும் தமிழ் மக்கள் மாத்திரம் இந்து கோவிலுக்குள் போகக்கூடாதென்றும் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கக்கூடாதென்றும் சொல்லுவது யோக்கியமாகுமா? இம்மாதிரி கோவில்களையும் (டைனமைட்டு) வெடி குண்டு போட்டு உடைத்தெறிந்தால் மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்டப்படி குற்றம் என்பதாக சொல்லப்பட்டாலும கடவுளால் உண்டாக்கப்பட்ட சட்டப்படி குற்றமாகுமா என்று கேட்பதுடன் நம்நாட்டு ஆதிதிராவிடர்கள் என்போர்கள் விபசாரி மக்களைவிட இழிந்தவர்களா என்று அறிய விரும்புகின்றோம்.

## திருமணம்

நாளது நவம்பர் 27உ கன்னடிய பாளையம் 1. ஸ்ரீமான் எம். கெ. முத்துசாமி பிள்ளையவர்கள் குமாரன் சிரஞ்சீவி ஆர்த்தனாரி பிள்ளைக்கும் கெரிஞ்சிப்பேட்டை ஸ்ரீமான் வெங்கடாசலம் பிள்ளையவர்கள் குமாரத்தி சௌபாக்யவதி அலமேலு அம்மாளுக்கும் 2. மூங்கிற்பாளையம் ஸ்ரீமான் குருநாதபிள்ளையவாகள் குமாரன் சிரஞ்சீவி முத்து கிருஷ்ணசாமி பிள்ளைககு ஸ்ரீமான் எம். கெ. முத்துஸாமி பிள்ளை குமாரத்தி சௌபாக்கியவதி வள்ளிநாயகி அம்மாளுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெறுமென்று ஒரு நிரூபர் தெரிவிக்கிறார்.

**மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.**

## பச்சையப்பன் கலாசாலையும் பார்ப்பனர்களும்

பச்சயப்பன் கலாசாலையில் ஆதிதிராவிடர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இந்துக்கள் தான் என்று ஐகோர்ட்டார் தீர்ப்பு சொன்னதின்பலனை சோதிக்க கொள்ள அப்டன் ரிதாமகர்த்தாக்களில் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டார்களாம். இந்துக்கள் என்பவர்களுக்கும் இந்து மதம் என்பதற்கும் இதைப்போல் முட்டாள்தனமானதும் அவமானமானதுமான சம்பவம் என்பதாக மற்றொன்றைக் குறிப்பிட முடியவே முடியாது. ஒரு மனிதன் இந்துவா அல்லவா என்பதற்குக்கூட வெள்ளைக்காரர் ஏற்படுத்திய சட்டமும் கோர்ட்டுகளும்தான் தீர்மானிக்க யோக்கியதையுடையவைகளாகிருக்கின்றதே ஒழிய தர்மகர்த்தாக்களுக்கோ இந்துமத ஆதாரமென்பவைகளுக்கோ இந்துமதத்தலைவர்கள் என்பவர்களுக்கோ கொஞ்சமும் யோக்கியதை இல்லை என்பதும் வெள்ளைக்கார கோர்ட்டார் சொன்னால்தான் தர்மகர்த்தாக்கள் ஒப்புக்கொள்ளக் கூடியவர்களே ஒழிய தங்களுக்கென்பதாக ஒரு சுய புத்தியும சுயமரியாதையும் இல்லை என்பதும் இதனால் நன்றாய் விளங்கிவிட்டது.

தவிர தர்மகர்த்தாக்கள் சிலரின் யோக்கியதையைப் பார்க்கின்றபோது இந்த விஷயத்தில் அபிப்பிராயம் சொல்ல நேர்ந்த ஐகோர்ட் ஜட்ஜு நல்ல வேளையாக ஒரு வெள்ளைக்காரராய் இருந்ததினாலேயே ஆதிதிராவிடர்களும் இந்துக்கள்தான் என்று சொல்லநேர்ந்ததே அல்லாமல் மற்றபடி ஒரு பார்ப்பனராகவோ அல்லது பார்ப்பனக்கொள்கையை பின்பற்றும் அவரது அடிமையாகவோ இருந்திருந்தால் இம்மாதிரி சொல்லியிருக்கமாட்டார் என்றே நினைக்கத் தக்கதாகவும் ஏற்பட்டுவிட்டது. அதாவது பச்சையப்பன் டிரஸ்டி கூட்டத்தில் ஆஜரான ஆறு டிரஸ்டிகளில் ஒரு பார்ப்பனர் இருந்திருக்கிறதாகத் தெரிய வருவதுடன் அந்த ஒரு பார்ப்பனரும் ஆதிதிராவிடர் இந்துக்களானாலும்கூட அவர்களை கலாசாலையில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று அபிப்பிராயங்கூறி இருக்கிறதாகவும் காணப்படுகிறது.

விபசாரத்திற்காக சாமிபேராலும் மதத்தின் பேராலும் பொட்டுக்கட்டி விடுவதை தடுக்கவேண்டுமென்று சொன்னால், அது வேண்டாம் என்று சொல்ல தேசீயத் தலைவர்கள் என்று சொல்லும் பார்ப்பனர்களிலேயே பலர் இருக்கும்போது வெறும் பார்ப்பனர்களில் ஒருவர் இதைச் சொல்லுவதில் ஆச்சரியபபட வேண்டியதில்லை.

## கண்டி மருத்துவ குல சங்கம்,

சென்ற (18—11—27) ல் கண்டி மாளிகா முன்னுள்ள மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் காந்தியடிகளுக்கு கண்டி மருத்துவ குலத்தவர்கள் ஷை சங்க சார்பாக புகழ் பத்திரமும் கதர் நிதிக்காக ரூபாய் 141 ம் கொடுத்தார்கள்.

காரியதரிசி.

மாயவரத்தில் பொதுக்கூட்டம்.

## ஸ்ரீ. எஸ். ராமநாதன் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கம்.

## ராயல்கமிஷனை பஹிஷ்கரிக்க வேண்டுமா?

நவம்பர் 21உ மாலை 5 மணிக்கு மாயவரத்தில் சுயமரியாதைக் கூட்டமொன்று அகில இந்திய சர்க்கா சங்கத் தமிழ்நாட்டுக் காரியதரிசி, ஸ்ரீமான் எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அச்சமயம் திரளான பொது ஜனங்கள் விஜயம் செய்திருந்ததுடன் ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஜே. எஸ். கண்ணப்பர், ஆர் சின்னையா பிள்ளை, தஞ்சை ஜில்லா போர்டு மெம்பர் ராஜதுரை செட்டியார், முத்தையா முதலியார், காவிரிப்பூம்பட்டினம் ராமலிங்கம் பிள்ளை, திருச்சிராப்பள்ளி மணிவாசகக் கழகம் கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, மணவை திருமலைசாமி, 'ரிப்பப்ளிகன்' ஆசிரியர் தெ. வெ. துரைசாமி உடையார், ச. மு. பரமசிவம் செட்டியார், கோ. மு. லட்சுமண செட்டியார், பூவாளூர் பொன்னம்பல ஓதுவார் மூர்த்தி, முதலியோர்களும் வந்திருந்தனர். முதலில் கடவுள் வணக்கத்துடனும் தேசிய கீதங்களுடனும் சபை ஆரம்பமாயிற்று. தலைமை வகித்த

### ஸ்ரீமான். எஸ் இராமநாதன் முன்னுரையாக பேசியதாவது.

இன்று நாம் இரு நாயகர்களின் பிரசங்கத்தைக் கேட்கும் பொருட்டே இங்கு கூடியிருக்கின்றோம். அவர்கள் பேசுவதற்கு முன் ஸ்ரீமான்கள் எஸ் கண்ணப்பர், விஸ்வநாத பிள்ளை, சிதானந்த சுவாமிகள் ஆகியோர்கள் பேசுவார்கள். இக்கூட்டத்தில் ராயல் கமிஷனைப்பற்றிப் பேசப்போவதாக முன்னமே நாம் துண்டுப்பிரசுரங்கள் மூலமாக வெளியிட்டுள்ளோம். அதைப் பற்றி நானும் சிறிது கூற எண்ணுகின்றேன். ராயல் கமிஷனிலுள்ள அங்கத்தினர்களின் பெயர், அது செய்யப்போகும் வேலை ஆகிய இவைகளைக்குறித்து அறிவிக்கப்பட்டதற்கு முன்பே நமது வைசிராய் இந்தியத் தலைவர்களை விஷயம் குறிப்பிடாமல் அழைத்து ஆலோசனை செய்தார். அவர் அவ்விதம் செய்ததின் நோக்கமென்னவென்றால் ராயல் கமிஷனைப் பற்றி ஜனங்களுக்கு ஒரு பிரமையை உண்டுபண்ணும் பொருட்டேயாகும். அவ்வளவு ரகசியமாக இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை செய்த வைசிராய் தலைவர்களின் யோசனைகளைக் கேட்டதாகவும் தெரியவில்லை. தலைவர்கள் தங்களுக்கு அதில் ஸ்தானம் கிடையாததால் ஏமாற்றமடைந்து சீற்றமடைந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் ராயல் கமிஷனைப்பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறுகின்றனர். சென்னையிலும் பல இடங்களிலும் அவர்கள் பகிஷ்காரத்தைப்பற்றிப்பிரசங்கங்களும் செய்கின்றனர். பகிஷ்காரத்தைப் பற்றிய பிரசங்கங்களும் செய்கின்றனர். அவர்கள் தற்சமயம் பகிஷ்காரத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பதற்குக் கூறும் காரணம் என்னவென்றால், 1919-ம் வருஷம் சீர்திருத்தத்திற்குப் பின் இந்தியர்கள் எவ்வளவுதூரம் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்யும் பொருட்டும், வருங்கால இந்தியாவின் அரசியல் திட்டத்தை நிர்ணயிக்கும் பொருட்டும் வருவதாகச் சொல்லப்படும் இந்த ராயல் கமிஷனில் (இந்தியர்களைத் தவிர வேறு எந்த ஜாதியார்களும் இந்தியர்களின் உண்மையான நிலைமையை அறிந்து அந்நாட்டுக்குப் பொருத்தமான அரசியலை நிர்ணயிக்க முடியாது என்ற கொள்கையின் பேரில்) எந்த இந்தியரையும் நியமிக்காமல் இந்தியர்களுக்கு இன்னும் அதிகப்படியான சீர்திருத்தம் வழங்கப் போகிறோம், என்று ஆங்கிலேயர் சொல்லிக்கொள்வது இந்தியர்களுக்கு மிகவும் அவமானத்தை உண்டுபண்ணக் கூடியது என்பதே. ஆனால் இதற்கு முன் நடந்த பஞ்சாப்படுகொலையையும் அப்பொழுது இந்தியர்கள் அடைந்திருந்த அவமானத்தையும் கவனிக்கும் பொழுது இப்பொழுது இந்தியர்களடைந்த அவமானம் அவ்வளவு பெரிதல்ல. நம் நாட்டின் தற்கால நிலைமையைக் கவனித்தால் நாம் இன்னும் மானக்கேடான நிலைமையில் தான் இருக்கின்றோமென்று சொல்வேன். வடநாட்டில் இந்து முஸ்லிம் சண்டைகளும், தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் போராட்டங்களும் தீர்ந்தபாடில்லை. நம்மிடை ஜாதிச் சண்டைகளும் மதபூசல்களும் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாச்சிரமக் கொள்கைகளும் நாளுக்கு நாள் ஓங்கி வளர்ந்து வருகின்றன. இத்தகைய வித்தியாசங்களெல்லாம் ஒழிந்து மக்களுக்குள் சமத்துவம் ஏற்பட்டால்தான் நாம் சுயராஜ்யம் அடையத் தகுதியுடையவர்களாவோம். சுயராஜ்யமோ அதிகப்படியான சீர்திருத்தங்களோ வழங்கப்படுவதற்கு முன்னரே ஒவ்வொரு வகுப்பினரின் உரிமை நிர்ணயிக்கப்பட்டுத் தீரவேண்டும். அவ்விதமில்லாமல் ஒரு சாரார் சுயராஜ்யமென்றாவது அதிக சீர்திருத்தம் வேண்டுமென்றாவது இந்தியர்களை நியமிக்காததினால் ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றாவது பறை சாற்றுவதும், எல்லாக் கட்சியினரும் எங்களுடன் சேர்ந்து பகிஷ்கரியுங்களென்று சொல்வதும் அவர்களின் சூழ்ச்சியையும், வஞ்சகத்தையுமே வெளிப்படுத்துகின்றது. ஆதிகாலந்தொட்டே அவ்வகுப்பினராகிய பிராமணர்கள் பலவித சூழ்ச்சிகளைச்செய்து நம்மை இத்தகைய நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். இன்று எங்களுடன் சேர்ந்து கமிஷனைப் பகிஷ்கரியுங்கள் என்று சொன்னால் நாம் அவர்களை எப்படி நம்புவது. நீடோன சில அய்யர்களை ஐயங்கார்களை கமிஷனில் நியமிக்கப்பட்டு விட்டால் அவர்கள் நம்மை நட்டாற்றில் விட்டுவிட்டு கமிஷன் முன்பு சாட்சியம் சொல்லப்போய்விடுவார்கள். அப்போது நாம் நம்முடைய குறைகளையோ, உரிமைகளையோ கமிஷன் முன்பு எடுத்துச்சொல்ல முடியாமற்போய்விடும். ஆகையால் நாம் நம்முடைய உரிமைகளையும் சுயமதிப்பையும் நிலை நிறுத்த எண்ணுவோமானால் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையையே பலப்படுத்திக்கொள்ளவேண்டும். பிராமணர்கள் அனிபெசண்ட் அம்மையாரைத் தங்களுக்குத் தலைவியாக நியமித்ததையும், அவர் கொண்டுவந்திருக்கும் குடியரசு மசோதாவையும் கவனிக்கையில் இது பிராமணர்கள் செய்து வரும் ஒரு பெரு மோசடியேயாகும். அந்தக் குடியரசு மசோதாவில் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கூடாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷனை ஆதரிப்பது என்று சொல்லிவிட்டால் பிராமணரல்லாதார் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவத் திட்டங்களை கமிஷன் முன்பு எடுத்துக்கூறி எங்கு அதிகப்படியான உரிமைகளைப் பெற்று விடுவார்களோ என்று பொறாமை கொண்டு இப்பார்ப்பனர்கள் கமிஷனைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று கூறி பிராமணரல்லாதாரை கமிஷன் முன் சாட்சியம் கூறவிடாதபடி தடுக்க வேண்டுமென்பதற்காகவே இந்தப் பகிஷ்காரச் சூழ்ச்சிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் அனிபெசண்ட் அம்மையார் கொண்டுவந்துள்ள குடியரசு மசோதா பிராமணரல்லாதாரை அடியோடு நசுக்கி விடக்கூடியதாயிருப்பதால்தான் அம்மசோதாவை பிராமணர்கள் ஆதரிக்கின்றனர். இதைப் பிராமணரல்லாதாராகிய நாம் எவ்விதத்திலும் நிறைவேற விடக்கூடாது என்று கூறினார்.

### ஸ்ரீமான் கண்ணப்பரின் சொற்பெருக்கு.

சில நாட்களாக எல்லாப் பத்திரிகைகளிலும், தந்திகளிலும் ராயல் கமிஷனைப்பற்றிய செய்திகளையே காண்கின்றோம். ராயல் கமிஷனைப் பகிஷ்கரியுங்கள் என்று பெரிய எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு முன் எத்தனையோ கமிஷன்கள் இந்தியாவுக்கு வந்து போயிருக்கின்றன. ஆனால் அரசியல் விஷயமாக விசாரணை செய்ய இந்த கமிஷன் தான் முதல் முதலாக வருகிறது. 1919-ம் ௵ மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தையொட்டி ஒரு கமிஷன் இந்தியாவுக்கு வந்தது. பெரும்பாலும் ஆங்கிலேயர்களே இருந்த அந்தக் கமிஷனுக்கு லார்டு சவுத்பரோ தலைவராயிருந்தார். ஸ்ரீமான்கள் வலங்கிமான் சாஸ்திரி, சுரேந்திர நாத பானர்ஜி என்னும் இரண்டு இந்தியர்கள் தான் அதில் ஸ்தானம் பெற்றிருந்தார்கள். அப்படியிருந்தும் பலர் அந்தக் கமிஷனில், சாக்ஷியம் கொடுத்தார்கள். ஆனால் பிராமணரல்லாதார் ஒருவரும் கமிஷன் முன்பு சாட்சியம் கொடுக்கவில்லை. ஸ்ரீ வலங்கிமான் சாஸ்திரி நம்முடைய பிராமணரல்லாதார் சமூகத்துக்கு பல கேடுகளை விளைவித்திருக்கின்றார்.

அவர் சர்க்கார் தாஸர். அவர் சென்ற இடங்களிலெல்லாம் சர்க்காரைப் புகழ்ந்தே பேசியிருக்கிறார். அவர் சர்க்காருக்கு ஏற்ற தாளம் போடுபவர். அந்தக் கமிஷனில் நியமிக்கப்பட்டிருந்த இந்திய உறுப்பினர் பார்ப்பனரல்லாதாரின் குறைபாடுகளை கவனிக்க மனமுள்ளவர்களல்லர் எனக் கண்ட நமது நாயர் பெருமானார் அக்கமிஷனில் சாக்ஷியம் சொல்ல மறுத்து விட்டனர் என்ற செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கும். இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனிலோ இந்தியர்கள் என்ற பூண்டே கிடையாது. அதனால் இதைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று இப்போது சிலர் பெருத்த கிளர்ச்சி செய்கின்றனர் இந்தக் கமிஷனில் சில அய்யர்களோ, அய்யங்கார்களோ நியமிக்கப்பட்டிருந்தால் நாம் அதனால் நன்மையடையப் போவதில்லை. ஆகையால் நாம் இதைப்பற்றி நன்றாக ஆலோசனை செய்தாகவேண்டும். அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடக் கூடாது. நம் நாட்டில் ஜாதிச் சண்டையும், மதச்சச்சரவுகளும் மிகுந்து வருகின்றன. மக்களுக்குள் உயர்வு தாழ்வு இருந்துவருகிறது. 1919ம் வருஷச் சீர்திருத்தத்துக்கு முன்பு, பிரிட்டிஷ் பார்லிமெண்டாருக்கு இந்தியாவில் ஜாதி வித்தியாசங்களும், மக்களுக்குள் உயர்வுதாழ்வும் இருக்கின்றனவென்றும் தெரியாது. ஆனால் அவர்கள் இந்தியாவில் பிராமணர்கள் என்று ஒரு வகுப்பார் மட்டுமிருக்கின்றனர் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். சவுத்பரோ கமிட்டியின் முன் பிராமணரல்லாதாரின் குறைபாடுகளை எடுத்துச் சொல்வதில் உபயோகமில்லையெனக் கருதி டாக்டர் நாயர், ஸர். பி தியாகராய செட்டியார், பனகால் ராஜா, ஸர். கெ வி. ரெட்டி முதலியோர்கள் இந்தியர்களின் உண்மையான நிலைமையை ஸ்ரீ மான்டேகு முதலிய பார்லிமெண்டு அங்கத்தினர்களிடம் எடுத்துக் கூறினார்கள். ஜாயிண்டு பார்லிமெண்டு அறிக்கையைப் படித்துப் பார்ப்பீர்களானால் பிரிட்டிஷார் இந்தியர்களின் உண்மையான நிலைமையை நன்றாக அறிந்து கொள்ளவில்லை என்பது தெரியவரும். அக்காலத்தில் நமது தலைவர்கள் அவ்விதம் சில வேலைகள் செய்யாதிருப்பார்களானால் நாமும், ஆதிதிராவிட மக்களும் இன்று எந்த நிலைமையிலிருப்போம் என்பதை யோசித்துப் பாருங்கள்.

இந்நிலையில் நாம் ராயல் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமா என்று கேள்வி கேட்க இடமேற்படுகிறது. ஆனால் சூதும் வாதும், நய வஞ்சகங்களும் நிறைந்த பிராமணர்களை நம்பி நாம் ஒருநாளும் கமிஷனை பகிஷ்கரிக்க முடியாது. அவர்கள் பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று சொல்லிக்கொண்டு நம்மை கமிஷன் முன் சென்று விடாதபடி தடுத்துக் கொண்டிருப்பார்கள். பின் சில பிராமணர்கள் அதில் போய் சாக்ஷியம் கூறுவார்கள். அதனால் நாம் மோசம் போனவர்களாவதல்லாமல் நம்முடைய குறைகளையும் கமிஷன் முன் எடுத்துக்கூற முடியாமற் போய்விடும். ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார் ஆகியோர்கள் பின் நியமிக்கப் படுவார்களானால் பகிஷ்காரமெல்லாம் காற்றாய்ப் பறந்துவிடும். இன்னும் அவர்கள் கூறும் பகிஷ்கார இயக்கந்தான் வெற்றியடையக்கூடுமா என்று பார்ப்போம். இதற்கு முன் பஞ்சாப் படுகொலையை முன்னிட்டு இவர்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லையென்று ஓர் இயக்கம் தோற்றுவித்தார்கள். அதற்காக சட்டசபைப் பிரவேசம் கூடாதெனக் கதறினார்கள். 1923ம் வருஷம் சட்ட சபைக்குள் சென்று முட்டுக்கட்டை போடப் போவதாகக் கூறினார்கள். இப்போது சட்டசபைகளில் மந்திரி பதவிகளையும் உத்தியோகங்களையும் ஏற்று வேலை செய்ய வேண்டுமென்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இது நிற்க சமீபத்தில் நடந்த சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தல் காலத்தில் நடந்த இவர்களின் திருவிளையாடல்களைச் சற்று கவனிப்போம். சென்னை கார்ப்பொரேஷனில் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் 20 பேர்களும் சுயராஜ்யக்கட்சி மெம்பர்கள் 17 பேர்களும் மற்றவர்கள் ஐரோப்பியர்களும் நாமினேஷன் மெம்பர்களுமாயிருக்கின்றனர். மேற்சொல்லப்பட்ட இரண்டு கட்சிகளில் எந்தக்கட்சி வெற்றிபெற வேண்டுமானாலும் ஐரோப்பியர்களையும் நாமினேஷன் மெம்பர்களையும் நாடியே தீரவேண்டும் முதலில் சுயராஜ்ய கட்சிக்காரர்கள் ஸ்ரீமான் சுவாமி வெங்கடாசலம் செட்டியாரை நிறுத்துவதாக யோசனை செய்திருந்தார்கள்

திரு. சுவாமி வெங்கடாசலம் செட்டியார் இதற்கு முன் கார்ப்பொரேஷன் தலைவராக இருந்து அனுபவம் பெற்றிருந்ததையும், நிர்வாகத் திறமையுடன் நடத்தக் கூடியவர் என்பதையும், கார்ப்பொரேஷன் விஷயங்களில் ராஜீய உணர்ச்சியைப் புகுத்துவது சரியல்லவென்பதையும் அறிந்த ஜஸ்டிஸ் கட்சியார் ஸ்ரீமான் சாமியை ஆதரிப்பதாகக் கூறினார்கள். அவர் நிறுத்தப்பட்டிருப்பாரானால் நிச்சயமாக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார். ஆனால் கார்ப்பொரேஷன் சுயராஜ்யக்கட்சிப் பிராமணர்கள் ஸ்ரீமான் செட்டியார் பிராமண ரல்லாதாராய் இருக்கின்ற காரணத்தால் ஒரு கட்சியிலும் சேராத ஸ்ரீ. ஜி. ஏ. நடேசய்யர், பிராமணராக இருப்பதை முன்னிட்டு அவருக்கு ஓட்டுச் செய்வதென்றும் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக ஒருவரையும் அபேக்ஷகராக நிறுத்துவதில்லை என்றும் சூழ்ச்சி செய்தார்கள். ஸ்ரீ. ஜி. ஏ. நடேசய்யரைத் தலைவராக்கும் பொருட்டு சில பிராமண உத்தியோகஸ்தர்கள் பெரும் முயற்சிகள் செய்தனர் இச்சூழ்ச்சியை அறிந்த சுயராஜ்யக் கட்சி பிராமணரல்லாதார்கள் பிராமணரல்லாதார் ஒருவருக்கே ஓட்டுச்செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆனால் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியாரை ஒரு அபேக்ஷகரை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். பின்னர் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஸ்ரீமான் ஜி. நாராயணசாமி செட்டியார் நின்றார். சுயராஜ்யக் கட்சிப் பிராமணரல்லாதாரும் சில ஐரோப்பியர்களும் ஜஸ்டிஸ் கட்சியாருமாக சேர்ந்து ஓட்டுக் கொடுத்ததில் ஸ்ரீமான் நாராயணசாமி செட்டியாருக்கு 28 ஓட்டுகளும், ஸ்ரீ. நடேசய்யருக்கு 18 ஓட்டுகளும் கிடைத்தது. இவ்விதம் சுயஜாதி அபிமானமே குடிகொண்டிருக்கும் இந்த நயவஞ்சகப் பார்ப்பனர்களை நம்பி நாம் எப்படி ராயல்கமிஷனை பகிஷ்கரிப்பது? இன்னும் மதுரை முனிசிபல் தேர்தலில் ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பின் கதி என்னவாயிற்று? ‘ஒரு பிராமணனின் இருதயத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் பிராமணீயத்தையும், வருணாசிரமத்தையும் தான் நீங்கள் பார்க்கக் கூடும்” என்று டாக்டர் நாயர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கின்றார். ஆகையால் இந்த சுயநலப் பிராமணர்களை ஒரு நாளும் நாம் நம்பக்கூடாது. ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்கத்தான் வேண்டுமென்று நாம் ஒரு முடிவுக்கு வருவோமானால், நாம் ஒரு தனிக்கட்சியாய் நின்று அதைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

---

## செங்குந்தர் மஹாஜன சங்கம்.

செங்குந்தர் 15-வது மகாநாடு 1928-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 1, 2 தேதிகளில் (பிரபவ-௵ தை-௴ 19, 20 தேதி புதன் வியாழன் இவ்விரு தினங்களிலும்) கோயமுத்தூர் ஜில்லா நாகலிங்கபுரம் போஸ்டு கொடுவாயில் கூடுவதாக அவ்வூரில் கூடிய நிர்வாகசபை மீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கொடுவாய் ஸ்ரீமான்கள் சு. ஆறுமுக முதலியார் தலைவராகவும், மு ப. வையாபுரி முதலியார் காரியதரிசியாகவும் கொண்ட உபசாரணைக்கமிட்டியாரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கோயமுத்தூர் 25—11—27. } பழனியப்ப முதலியார், கௌரவ காரியதரிசி.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

னும் நடத்தி வைத்த வரவேற்புக் கழகத்தாருக்கும், மகாஜனங்களின் ஒத்துழைப்புக்கும் என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இம்மகாநாடு இவ்வளவு ஆடம்பரத்துடனும், வெற்றியுடனும் நடைபெறுமென எவரும் எதிர்பார்த்திருக்கவே முடியாது. இத்தாலூகாவில் குறிப்பாக இவ்வூரிலுள்ள வாலிபர்களால் இவ்வளவு திறமையுடன் நடத்திவைக்கப்பட்டதென்பதைக் காணுந்தோறும் என்மனம் பூரிக்கின்றது. அவர்களுடைய உழைப்பையும் உணர்ச்சியையும் நான் எவ்விதம் அளவிட்டு கூறுவது. இன்று நாம் பல தீர்மானங்களை நிறைவேற்றி வைத்திருக்கின்றோம். அவைகள் ஏட்டளவில் மட்டும் இருந்து விடாமல் அடுத்த மகாநாடு இத்தாலூகாவில் நடைபெறும் முன்னரே அவற்றை நாம் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து விடவேண்டும்' இம்மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கும்படியான கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக மீண்டும் எனது வந்தனத்தைச் செலுத்தி இம்மகாநாட்டு நடவடிக்கைகளை இத்துடன் முடிக்கிறேன்.

பின் தலைவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் வந்தனமளித்தபின் இரவு 8 மணிக்கு மகாநாடு இனிது கலைந்தது.

தலைவர் திரு. ஐ. குமாரசாமி பிள்ளை அவர்களின்

# அக்கிராசன பிரசங்கம்.

சுருக்கம்.

## அனுதாபச் செய்திகள்.

மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீ ஐ. குமாரசாமி பிள்ளை, இம்மகாநாட்டுக்கு வர முடியாமைக்கு வருந்துவதாகவும், மகாநாடு வெற்றியுடன் நடைபெற வேண்டுமென்றும் பனகால் ராஜா, ஸ்ரீமான்கள் கும்பகோணம் பாப்பு சாயபு, காரைக்குடி குமரன் ஆசிரியர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, மருத்துவ சங்கத்தலைவர் பண்டித ஆனந்தம் ஆகியோர்கள் அனுப்பிய தந்திச் செய்திகளையும், ஸ்ரீமான்கள் தஞ்சை ஜில்லா போர்டு உதவி தலைவர் என் ஆர். சாமியப்ப முதலியார், திருநெல்வேலி திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்., எம். எல், சி., ஸ்ரீ என். தண்டபாணி பிள்ளை முதலியோர்களும் இன்னும் சில கனவான்களும் அனுப்பிய கடிதங்களையும் கூட்டத்தில் படித்துக்காட்டி தன் பிரசங்கத்தைத் துவக்கலானார்.

சகோதரர்களே, வரவேற்புக் கழகத்தார் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு என் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன்.

கும்பகோணம் தாலூகாவானது, பார்ப்பனரின் சிற்றரசை நமது ஜில்லாவிலும், மாகாணத்திலும் பெயர் பெற்றிருக்கிறது. நம்மவர்களின் ஒற்றுமைக்குறைவால், தாலூகா போர்டு தலைமையும் முனிசிபல் கழகத் தலைமையும் இது சமயம் பார்ப்பனர் கையிற் சிக்கிவிட்டன. மிக்க முயற்சியுடன் அவர்களிடமிருந்து கைப்பற்றிய பதவிகளை நாம் இழந்தது நமது அறியாமையேயாகும். அவைகளைத் திரும்பவும் அவர்களிடமிருந்து பிடுங்குவது எவ்வளவு கஷ்டமாயிருப்பினும் மனத்தளர்வின்றி ஒற்றுமையுடன் போராடுவோமாயின் நாம் வெற்றி பெறுவது நிச்சயம்.

நமது மாபெருந்தலைவர்களாகிய நாயர் பெருமானும், தியாகராய வள்ளலும், நமது இயக்கத்தைத் தொடங்கி பத்தே வருடங்களாகியும், நாம் அவ்வியக்கத்தால் அடைந்துள்ள பலனே அளவிறந்ததாகும். மக்களை ஏமாற்றி எவ்விதப் பெரும்பதவிகளும் பூதேவராகிய தமக்கே உரியதென இறுமாந்து திரிந்த பார்ப்பனரை எதிர்த்து நமது சுதந்திரங்கள் பலவற்றை திரும்பப் பெற்றோம். பார்ப்பனரின் தேசபக்த விரிவுரைகளும், கட்டுரைகளும் அவர்களுடைய உதடுகளின் அளவே நிற்பனவென்றும் அவர்கள் மனம் என்றும் போல், இன்னும் பின்னும், தம்மினமல்லாத எவரிடத்தும் அன்பு பாராட்டாதென்றும் சுயஜாதி பிரசாரஞ் செய்து சுயநலந்தேடிச் சுகம்பெறும் வித்தையைப் பார்ப்பனர் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயின்று வந்தவர்களென்றும், அவர்களை எக்காலத்தும் எவ்விஷயத்திலும் நம்பலாகாதென்றும், அவர்கள் தலைமையின் கீழ் நாம் சமூக இயக்கமும் தேசீய இயக்கமும் நடத்துவோமாயின் ஏமாற்றமடைவோமென்றும், அவர்களை அறவே நீக்கி நம்மவர்களனைவரும் மனமொத்து பாடுபட்டாலே நாம் உண்மையில் முன்னேற்றமடைவோமென்றும் நாம் தெற்றென உணர்ந்தோம். பார்ப்பனரல்லாதார் எக்கட்சியிலிருப்பினும் தாம் சகோதரர்களென்பதையும் நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் பொதுவான பகைவர் பார்ப்பனர் என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டோம். பார்ப்பனரைப் போன்ற சாதிப்பற்றுள்ள சாதியார் பரந்த உலகத்தின் கண்ணே வேறெங்கும் கிடையாதென்பதைச் சென்னைக் கார்பரோஷன் தலைவர் தேர்தல் நன்கு வெளிப்படுத்தியது. பார்ப்பனர்களிலொருவராகிய திரு சி: வி. விசுவநாத சாஸ்திரியாரே தம்மினத்தாருடைய ஜாதி யபிமானத்தைச் சுட்டி நகையாடுகின்ற போது அதற்கு மேல் நானொன்றும் அதிகமாகக் கூறவேண்டிய அவசியமில்லை.

காங்கிரஸ் என்ற பதத்திலேயே ஏதோ பெருமையிருக்கின்றதென்ற மூடத்தனமான எண்ணம நம்மவரிற் பலரிடம் வேரூன்றி குடிகொண்டிருக்கிறது. இந்த எண்ணத்தை நாம் அடியோடு ஒழிக்கவேண்டும்.

சுயராஜ்யக் கட்சியினர் மூவர் இருமூன்றாண்டுகளாகச் சட்ட சபையிலிருந்ததால் என்ன நன்மைகளையடைந்தோம. காங்கிரஸ் கட்சிக்காரர்களென்றும், இரட்டையாட்சியைக் கொன்று புதைக்கவும், மந்திரிகளின் அதிகாரத்தை மாய்க்கவும் கங்கணம் கட்டிக்கொண்ட சுயராஜ்யக் கட்சிக்காரரென்றும் சட்ட சபைகளில் நம்பிக்கையில்லையென்றும் பன் முறை பறையடித்து நியாயக் கட்சியினரின் செல்வாக்கைக் குறைந்த வகையிற் பார்ப்பனர்க்குப் பெரு மகிழ்ச்சியையுண்டாக்கியதைவிட இவர்களால் மக்களுக்கு என்ன நன்மையுண்டாயிற்று? சுயராஜ்யக் கட்சிக்காரர் சிலர் தேர்தல் முடிந்து வெற்றி பெற்ற அன்றே கதரைக் களைந்து அப்புறமெறிந்து மந்திரி பதவிக்கு அடி போடலாயினர் மந்திரிகளை மாய்ப்பதாகக் கூறியவர்கள் மந்திரிகளாக இருந்து மாய்ந்து போகத்துணிந்தனர். சுயராஜ்யக் கட்சியினரையே மந்திரிகளைத் தேர்ந்து இரட்டையாட்சியில் பாதி யாட்சியை நடாத்தும்படி கவர்னர் கேட்டுக்கொண்டபோது சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் உடனே வேண்டாமென்று அந்த வேண்டுகோளை மறுக்க மனம் வரவில்லை. கூடிக் கூடிப் பேசினார்கள். ஒருவருக்கொருவர் போட்டியிட்டார்கள். பார்ப்பனர் ஒருவருக்கும் அதில் இடம்கிடைக்காதென்ற எண்ணம் முதலிலேயே புலனாகிவிட்டபடியால் பார்ப்பனர்கள் பெருந்தேச பக்தர் களாகவும், புளிப்புத் திராட்சையை நாடாத நரிகளாகவும் பிதற்றித் திரிந்தார்கள். கடைசியாக சுயராஜிய கட்சியினரின் மந்திரிவேட்டை பயனில்லாது போனதும், எங்கே 'நியாய' கட்சியினர் வந்து விடுகிறார்களோ என்ற பொறாமையாலும் நடுக்கத்தாலும் 'சுயேச்சையா'ருடன் கூடி அளவளாவி சூழ்ச்சி செய்து அவர்களுடைய மந்திரிகளை தமது கையாள் போல வைத்து அமுல் செலுத்தி வந்ததும், நம்பிக்கையின்மை தீர்மானத்தை நியாயக்கட்சிக்காரர் ஒருவர் கொண்டு வருகிறாரே என்று உள்ளே சினந்து விருப்பமில்லாமல் தாமே ஒரு தீர்மானங்கொண்டு வந்தது போற்கொண்டு வந்து தோற்றுப் போக வேண்டுமென்றே விரும்பியமிருந்தபடியால் தாமடைந்த தோல்வியை வெற்றியாகக் கொண்டாடி யானந்தித்ததும் நீங்கள் யாவருமறிந்த சரிதம்.

நமது மாகாண மந்திரிகளின் வைபவத்தை என்னென்று சொல்லுவது? சம்பளம் செல்வாக்கு முதலியவைகளைப் பற்றிய வரையில் அவர்கள் மந்திரிப்பதவிகள் பெற்றது அவர்கள் முற்பிறப்பில் செய்திருந்த நற்றவத்தின் பயனேயாகும்! சட்டசபைத் தேர்தலில் முனைந்து நின்ற கட்சிகளாக நின்று போராடியவர்கள் நியாயக்கட்சியாரும் சுயராஜ்யகட்சியாருமே. ஏனையோர் சமயோசிதகாரணங்களை முன்னிட்டு ஓர் விச நாமதேயமுமில்லாமல் சுயேச்சையாக நின்றார்கள். நமது கட்சியினரின் எண்ணிக்கை குறைந்தது. சுயராஜ்யக் கட்சியார் மந்திரி பதவிகளை யேற்றுக்கொள்வதில்லை என்று தீர்மானித்தவுடனே எங்கேயோ மறைந்திருந்த பலர் ஒன்று சேர்ந்து சுயராஜ்யக் கட்சியினின்றும் சிலரது மறைவான உதவியால் கவர்னரால மந்திரிகளாக நியமிக்கப்பட்டார்கள். திரு. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் முதன் மந்திரிக்கு ஓர் உண்டிவிழாவும் நடத்தி மகிழ்ந்தார் மந்திரிகள் தம் பதவியை யேற்றுச்சிலகாலம்வரை நியாயக்கட்சியைத் தூற்றுவதிலேயே தமது காலத்தைக் கழித்து வந்தனர். இப்பொழுது சில காலமாக அது மட்டாகவிருக்கிறது. ஏனென்றால் தமது கட்சியை அழிவு வாராமல் காத்துக்கொள்வதற்காக மந்திரிகள் பல காரியங்கள் செய்யவேண்டி நேரிட்டு விட்டன.

குறித்த கொள்கைகளும் நிலைத்த வாழ்க்கைகளும் வரன் முறையும் கட்டுப்பாடுமில்லாத இக்கட்சியார் தங்கள் வாழ்வுக்காகச் செய்த காரியங்கள் எண்ணுக்கடங்கா. மந்திரிக்கு ஒன்றிரண்டு கூறுகின்றேன்:—ஜில்லா, தாலூகா போர்டுகள் முனிசிபல் கழகங்களுக்கு நியமனங்கள் செய்வதில் நியாயக்கட்சி மந்திரிகள் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று தற்போதைய முதன் மந்திரியார் தனக்குப் பதவி கிடைத்த முன்பு கூறியதோடு அதன் பின்வரும் நியமன ஏற்பாட்டை அறவே ஒழித்துவிடப் போவதாகக் கூறியிருக்கிறார். ஆனால் தஞ்சாவூர் ஜில்லா போர்டார் தமக்குள்ள நியமன இடங்கள் பத்தைநாலாகக் குறைத்து ஆறு இடங்களைத் தேர்தலுக்காக ஆறு தாலூகா போர்டுகளுக்கு விட்டுவிடலாமென்பதாக இரண்டு விசேஷக் கூட்டங்களில் ஏகோபித்து தீர்மானஞ் செய்து விட்டு அரசாங்கத்தாரின் அனுமதிக்காக எழுதிய போது, ஜில்லா போர்டாரின் தீர்மானத்தை ஒத்துக்கொள்ளாமல் ஜில்லா போர்டாரின் அடிப்படையான கொள்கையை ஒப்புக்கொண்டாலும் தாழ்ந்த ஜாதியாரும் எண்ணிக்கையிற் குறைந்த சாதியாரும் இதனால் துன்பப்படாத முறையில் தகுந்த ஏற்பாடு செய்வதைப்பற்றி ஆழ்ந்து யோசனை செய்து முடிவுக்கு வாராமலிருப்பதால் ஜில்லா போர்டின் தீர்மானத்தை ஏன் ரத்து செய்யப்படாதென்று காரணங் காட்டும்படி முதன் மந்திரியாரின் அரசாங்கக் கிளைக்கச்சேரியிலிருந்து உத்தரவு வந்தது. தாழ்ந்தவர்க்கும் குறைந்த எண்ணிக்கையுள்ள வகுப்பார்க்கும், நான்கு இடங்கள் விடப்பட்டிருக்கிறபடியாலும் சில தாழ்ந்த ஜாதியார் தேர்தல் வழியாகவே ஜில்லா போர்டு உறுப்பினர்களாக வந்துள்ளார்களாகையாலும் நியமன இடங்களை குறைக்கலாமென்று ஜில்லா போர்டு அதற்குக்காரணம் காட்டியும், அரசாங்கத்தார் அதை ஏற்றுக்கொள்ளாமல் ஜில்லா போர்டின் தீர்மானங்களை ரத்து செய்து விட்டார்கள். தற்காலம் காலியாகவுள்ள ஐந்து இடங்களுக்கு முதன் மந்திரியார் செய்யும் நியமனங்களை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இவ்விடங்களில் ஒன்று பார்ப்பனருக்கு அவசியம் கொடுக்கப்படுமென்பதாக ஊரெங்கும் பேச்சாக இருக்கிறது. பார்ப்பனரொருவரை எந்தக் காரணங்கொண்டு நியமிக்க வேண்டுமென்று தெரியவில்லை. ஜில்லா போர்டில் முன்னமேயே போதுமான பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். சென்னை சட்டசபை யுறுப்பினர்கள் எவரேனும் முனிசிபல் கழகங்களுக்கும் ஜில்லா தாலூகா போர்டுகளில் உறுப்பினர்களாகவேண்டி விரும்பினால் அவர்களை முதன் மந்திரியார் தட்டுத்தடையின்றி நியமித்து விடுவதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். நியமனத்தை யொழித்துவிட கங்கணங் கட்டிக்கொண்ட மந்திரிமார்களில் ஒருவராகிய கனம் ஏ. ரங்கநாத முதலியார் அவர்கள் தேவஸ்தானக் கமிட்டிகளுக்குப் புதிய இந்துமத பரிபாலனச் சட்டத்தின்படி தேர்தல்கள் நடக்கும்படி விட்டு விடாமல் உறுப்பினர்களைத் தம் உரிமைப்படி நியமனஞ் செய்யப்போவதாகத் தெரிய வருகிறது.

பேசுவதொன்றும், செய்வதொன்றும் இப்போதைய மந்திரிமார்களுக்கு பழக்கமாகி விட்டபடியாலும், நமக்கும் அவைகளைக் கேட்டுச் சலித்துவிட்டபடியாலும் இனியும் பற்பல இத்தகைய செய்கைகளை நாம் காணவிருப்பதாலும் இதை இத்தோடு நிறுத்தி ராயல் கமிஷனைப் பற்றி பார்ப்பனப் புரட்டை சிறிது பேசி விட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி பேசி விட்டு இனி செய்யவேண்டிய முக்கிய விஷயங்களைப்பற்றி பேசுகையில், நாம் முன்னேற்றமடைவதற்கான வழிகளைச் சிறிது உங்களுக்கு எடுத்துச் சொல்லி என் முன்னுரையை முடிக்கலாமென்றெண்ணுகிறேன். நமது உழைப்பும், முயற்சியும் மன வெழுச்சியும் குன்றிக் கிடப்பதை எவரும் மறுக்க இயலாது. ஆனால் சில காலமாகத் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் போன்ற சில தேசபக்தர்களின் பேருழைப்பால் நமக்குச் சுயமரியாதை யுணர்ச்சியும் மனக் கிளர்ச்சியும் உண்டாகி வளர்ந்து வருகின்றன. நாம் மேன்மையுறவேண்டுமானால் தீண்டாமை, சாதி வேறுபாடு, கள்ளுண்டல் போன்ற பல சமூகக் கேடுகளையும், நம்மை அறியாமையிற் புகுத்தி மிருகங்கள் போலவும், அடிமைகளாகவும் வைத்துள்ள சமயப் புரட்டுகளையும், வறுமை, பிணி முதலிய நலக் குறைவுகளையும், ஒழிக்கவேண்டும். இவைகள் நீங்குமானால் நாம் சுயராஜ்யம் பெற்றவர்களாவோம். அதைப்பெறுதற்காக நாம் எவரையும் கெஞ்சி மன்றாடவேண்டிய அவசியம் ஏற்படாது.

நமது தலைவர் அரும்பாடுபட்டுப் பத்திரிகைகள் நடத்தியும் மகாநாடுகள் கூட்டியும் நாடுமுழுதுஞ் சென்று பெருஞ் சொற்கள் நிகழ்த்தியும் நாம் முன்னேறுதற்கான வழிகளைக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் நமதியக்கம் நகரங்களன்றி கிராமங்களில் அதிகமாகப் பரவவில்லை. கிராமங்கள் தாம் நமது நாட்டின் உயிர் தங்குகின்ற இடம். அவைகளை நாம் சீர்திருத்தி கிராமங்களை நமதியக்கத்தில் ஈடுபடச் செய்வோமாயின் நமது நாட்டின் க்ஷேமத்தைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதேயில்லை. ஆகையால் நாம் நமது சிற்றூர்கள் யாவற்றிற்கும் நமது "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகைகளையனுப்பி மக்களைப் படிக்கும்படி தூண்டி ஆங்காங்கு சென்று அவர்களை திரட்டி வைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி அவர்களுக்குச் சுயமரியாதை யுணர்ச்சியையும், கல்வி செல்வத்தில் உயரும் வழியையுங் கற்பித்து வருதல் வேண்டும். வேளாண்மை, அறிவு நூலாசிரியரின் தேர்ந்தமுறையில் நடத்தி நிலத்தின் விளைவை அதிகப்படுத்த வேண்டும். கூட்டுறவு நாணயச் சங்கங்களும் கூட்டுறவுக் கடைகளும், நில அடமான பாங்கிகளும் ஒவ்வொரு கிராமத்திலும் தொடங்கி நடத்த வேண்டும். கிராமத்திலுள்ள இளைஞர்க்கும் கல்வியில்லாது போன முதியோர்க்கும் தக்க பள்ளிக்கூடங்கள் அமைத்துத் தக்க முறையில் கல்வி புகட்டவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கங்கள் தொடங்கி நமது மக்களுக்கு இளமையிலேயே நல்ல நோக்கங்களையும், சுயமரியாதை யுணர்ச்சியையும் பரந்த அறிவையும் புகட்டி வரவேண்டும். நமது சிறுவர்களை சாரணர் இயக்கத்திற் சேர்த்து வீரர்களாகவும், தலைவர்களாகவும் அவர்களைப்பயிற்றுவிக்க முயலவேண்டும். கிராமங்கள் தோறும் படிப்பிடங்கள் ஏற்படுத்தி உபயோகமுள்ள நூல்களையும் பத்திரிகைகளையும் அங்கு சேர்த்துவைத்து கிராமவாசிகளை அவைகளைப் படிக்கும் படி செய்யவேண்டும். இவைகளையெல்லாம் கவனிப்பதற்கும் கிராமங்களின் சுகாதாரத்தைச் செம்மையாகப் பாது காக்கவும் பஞ்சாயத்தார்கள் சட்டப்படி ஏற்படுத்தி ஒழுங்காக ஒற்றுமையுடன் நடத்த வேண்டும்.

## பஹிஷ்கார இயக்கத்தில் முஸ்லிம்கள் சேரக்கூடாது

ராயல் கமிஷனைப்பற்றி 'ஸைபுல்இஸ்லாம்' எழுதுவதாவது:—

ஃ ஃ ஃ

ஒரு புறம் இந்து முஸ்லீம் கலகம், வேற்றுமை, விரோதம், மாச்சர்யம் முதலியன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனவென்பது வெளிப்படை. இந்து முஸ்லீம் கட்சியில் நடைபெறும் கலகங்களை அடக்குவதற்கும், சமாதானம் செய்வதற்கும், தேசியத்தலைவர்கள் எனப்படுவோரும், கமீஷன் பகிஷ்காரத்தை ஆதரித்து அபிப்பிராயம் கூறுவோரும் முன் செல்வதில்லை. ஆனது பற்றி அரசாங்கத்தாரிடம் இரு சாரார்களும் சென்று, தங்கள் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி உதவி தேடவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

மற்றொரு பக்கம், இந்தியாவில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற விவகாரம் தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது, பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை முன்னேற்றமடைய விடாமல் நசுக்கக் கங்கணம் கட்டி உழைத்து வருகின்றனர். பார்ப்பனரல்லாதார், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தி, பார்ப்பனர்களைப் பொது ஜனங்கள் வெறுக்கும்படி பிரசாரம் செய்து வருகின்றனர் என்பது உலகறிந்த ரகஸ்யமாகும்.

ஃ ஃ ஃ

எனவே இந்தியாவில், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற விவகாரமும், இந்து முஸ்லீம் விவகாரமும், நிரந்தரமான வழியில் ஒழிக்கப்படாமல், கமீஷன் பகிஷ்காரத்தை இவர்கள் ஆரம்பிப்பார்களேயாயின் அதில் அவர்கள் தோல்வியுறுவரென்பது நிச்சயம். ஆகையால் அவ்வித பகிஷ்கார இயக்கத்தில் முஸ்லீம்கள் சம்பந்தப்படக்கூடாதென நாம பலமாக முஸ்லீம் சமூகத்தினருக்கு வற்புறுத்திக் கூறுகின்றோம்.

## வேலைக்குக்கொடுத்த வெள்ளியுடன் ஓடி விட்டான்.

இராமநாதபுரம் ஜில்லா கோட்டையூரில் பிரபல வெள்ளிப்பட்டரையில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு ஆசாரி கார்த்திகை 4-உ ரூ. 250 பெறுமான முள்ள வெள்ளியுடன் ஓடிவிட்டான் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவில்கள், குளங்கள், ரஸ்தாக்கள் எல்லா ஜாதியாருக்கும் பொதுவாயிருக்கவேண்டும்.

சென்னை சட்ட சபையில் ஸ்ரீமதி முத்துலட்சுமியம்மாள் தேவதாசிகளுக்கு பொட்டுக்கட்டும் வழக்கத்தை சட்ட மூலமாக நிறுத்த வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தை நாம் எல்லோரும் ஆதரிக்கவேண்டும்.

கடைசியாக தாங்கள் எல்லோரும் என்னை கௌரவப்படுத்தியதற்காக என்மனமார்ந்த வந்தனத்தை மறுமுறை அளிக்கின்றேன்.

இம்மகாநாடு இனிது நிறைவேறும்படி சர்வேஸ்வரனை துதிப்போமாக என்று பேசி முடித்தார்.

## ராயல் கமிஷனைப்பற்றி முஸ்லீம் லீக்.

### பஹிஷ்காரம் கூடாது.

பஞ்சாப் மாகாண முஸ்லீம் தலைவர்கள் நவம்பர் 13-தேதி யன்று ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பதா ஏற்றுக்கொள்வதா என்பதைப்பற்றி யோசிக்கக்கூடினார்கள். மூன்று மணி நேரம் விவாதம் நடந்தது, அங்கத்தினர்கள் பின் வரும் பிரேரேபணையைப் பிரேரேபித்தார்கள்.

"தற்காலம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் ராஜ்ய நிலைமையைக் கருது மிடத்து ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பது பொதுவாக நாட்டிற்கும் சிறப்பாக முஸ்லீம் சமூகத்திற்கும் பாதகத்தையும் தீமையையும் விளைவிக்குமென்று பஞ்சாப் மாகாண முஸ்லீம் லீக் சபை அபிப்பிராயப்படுகின்றது"

பின்னர் சில திருத்தப் பிரேரேபணைகளும் சிலர் கொண்டு வந்தார்கள். அவைகளெல்லாம் தோற்றுப்போகவே மேல்கண்ட பிரேரேபணையே அதிக வோட்டுகளால் தீர்மானமாக நிறைவேறிற்று

உறையூர்

**சரிகை அங்கவஸ்திரங்கள்.**

சரிகைக்கு காரண்டி உடை நயம்.

அசல் 100 நெம்பர் நூலில் சொந்த கைத்தறி நெசவுகளில் தினப்படி உபயோகத்திற்கு ஏற்றதாயும், நாகரீகமாகவும், உள்ள பட்டுக்கரை சரிகை முந்தி $2\frac{3}{4}$ அகலம் 5 முழம் அங்கவஸ்திரங்கள், 1 நெ, 1-க்கு ரூபாய் 2—2—0. 2 நெ, 2—6—0, 3 நெ, 2—10—0, 4 நெ. 3—0—0. 5 நெ, 3-8-0, 6 நெ, சரிகை சீர் 1—14—0. 7 நெ, சாதா கம்பி 1—12—0. 200 நெ. ஷை அகலம் முழம் உள்ளது பட்டுக்கரை, சரிகை முந்தி அங்கவஸ்திரம் 1 க்கு ரூபாய் 3—8—0 முதல் ரூபாய் 6—0—0 வரையில் உண்டு. சரிகை கரை சரிகை முந்தி உள்ளது ரூபாய் 6—0—0 முதல் 20—0—0 25—0—0 வரையிலும் உண்டு. மற்றும் பேட்டாக்களும் 3 அகலம் ஜோடிகளும் உண்டு. ஆர்டர் செய்யும்போது கருப்பு, சிகப்பு கரை அல்லது முந்திகளில் சீர் இன்னது இருக்கவேண்டும் என்பதாக எழுதக் கோருகிறோம்.

N. B. மலாய் நாட்டில் கமிஷனுக்கு ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதக் கோருகிறோம்.

வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

விலாசம்:—

மானேஜர்,
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O. திருச்சி.

## கம்ம சமூகமும் பார்ப்பனர் திருவடிச் சம்மந்தமும்.

கம்ம சகோதரர்களே!

நம் சமூகத்தில் நடைபெறும் சுப காரியங்களுக்கும் விவாகத்திற்கும் சுற்றத்தார்களை அழைக்கும் பொருட்டு அனுப்பும் பத்திரிகைகளில் மணமகனையும் மணமகளையும் குறிப்பதற்கு முன்னால் 'கோடி கன்னிகா தானம் திருமலதாத்தாச்சாரியார் திருவடி சம்பந்தி' என்றும், இன்னும் 'சக்கரவர்த்தி, கந்தாடைகள் திருவடி சம்மந்தம்' என்றும் குறிக்கப்படுகிறது. சாதாரணமாய் நம்மில் ஒருவருக்கொருவர் கொள்வன கொடுப்பன செய்து கொண்டால் அதற்குத்தான் சம்பந்தம் செய்து கொள்வது என்று சொல்கிறோம். அதிலும், மணமக்களின் குணம், செயல், அழகு, இவற்றில் மாறுபட்டிருந்தாலும், செல்வத்தில் உயர்வு தாழ்வாயிருந்தாலும் அது ஒழுங்கற்ற சம்பந்தமென்று சொல்வதோடு அவ்வித சம்பந்தம் செய்தவரை தூற்றவும் பழிக்கவும் செய்கிறோம். ஆகவே சம்பந்திகளென்றால் சம தன்மையுடையவர் என்று காணப்படுகிறது.

நம் குலத்துதித்து, நம்முடனுண்டு, நம் நலம் பேணும் ஒருவரை நமக்கொத்த செல்வம் இல்லையென்ற காரணத்தால் நம்மை விடத் தாழ்ந்தவராக எண்ணும் எண்ணமுள்ள நாம் நமநலத்தைக் கனவிலும் நினையாது நம்மிடமே யாசிக்கும் இழிகுணமுடைய பார்ப்பனர்களின் உறுப்புக்களிலும் இழிந்த தன்மையதான பாதத்திற்குத்தான் சமமுடையவர் (சம்பந்தி) என்று எழுதி அதையும் பார்த்து ஆனந்திக்கிறோம்.

கம்ம வாலிபர்களே! நமக்கு சுயமரியாதை வேண்டாமா? வேண்டுமேல் ஆச்சாரிய தன்மையும் ஸ்ரீ வைஷ்ணவ தன்மையும் எள்ளளவும் இல்லாது, நம்மிடம் பிச்சை வாங்கியுண்ணும் நன்றியையும் கொன்று, நம்மையே தங்களுக்கு பரிபூர்ண அடிமைகளாகவும், ஞானசூனியர்களாகவும் செய்துகொண்ட நயவஞ்சகப் பார்ப்பனரின் காலுக்கு சம்பந்தி என்று சொல்வதை இன்றே விட்டொழிப்போம். தவிர, இது நாள்வரை இச்சம்பந்தம் செய்ததினால் கண்ட பலனென்ன. நம் சமூகத்தைவிட பிற்போக்குடைய சமூகத்தார்களும் நம்மை எள்ளி நகையாடுவதேயாகும். ஆகையால் நாம் கற்பறவோ கண்யமுறவோ பார்ப்பனரின் காலின் சம்பந்தத்தால் ஒருபோதும் முடியாதென்பதையெண்ணி நமக்கு இழிவுதரும் செய்கையை (பார்ப்பனரின் திருவடிச் சம்பந்தி என்று எழுதும் வழக்கத்தை) ஒழிப்போமாக. நாம் நற்பதவியும் சுயமரியாதையும் கண்யமும் அடைய வேண்டுமானால் பகவானின் பாதசம்பந்தம் பெறுவோமாக. இவ்வெண்ணம் நம்மவர்க்குற கடவுளும் அருள் பாலிப்பாராக.

பார்ப்பனப் பெருமை வீழ்க!
சுயமரியாதை வாழ்க!

இங்ஙனம்
B. R. சின்னகிருஷ்ணசாமி நாயுடு.

## இருபதாம் நூற்றாண்டிலுமா! மகாத்மா காந்தியின் வருகையின் பின்னுமா!

சென்ற சில தினங்களுக்குமுன் நாகர்கோவில் கிறிஸ்தவ சர்க்கலாசாலை மாணவர்கள் பேச்சிப்பாறை முதலிய இடங்களை பார்க்குபடியாகச் சென்றனர். அவ்விடம் செல்வதின் நோக்கம் அங்குள்ள விசேஷங்களைப் பார்ப்பதுமன்றி, மாணவர் யாவரும் ஒருங்கே அமைந்திருந்து சந்தோஷமாக உண்டு களிப்படைதலுமாகும். ஆனால் மாணவர்களுக்குள் அங்கு நடந்த வேறுபாடுகளை நோக்குமிடத்து பிற்கால பிரஜைகளாக வரும் இம்மாணவர்களிடமிருந்து யாவரும் எதிர்பார்க்கும் எண்ணம் வீணாகிவிடும் என்று தோன்றுகிறது.

அன்று யாவருக்கும் புலால் நீங்கிய உணவே அளித்தல் வேண்டுமெனத் தீர்மானித்திருந்தும், சில பார்ப்பன மாணவர் மட்டும் புலால் நீங்கிய உணவு அளித்தாலும் சரி, பிராமணனே சமைத்தாலும் சரி, நாங்கள் பார்ப்பனரல்லாதாரோடு அமர்ந்து உண்ணோம் என்று பிடிவாதமாய் நின்றனர். பார்ப்பனர்கள் தான் தங்கள் குலத்தின் குணத்தால் செய்தார்கள் என்போம். ஆனால் பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலுள்ள இரண்டு தைரியசாலிகள் நண்பரும், ஒரு செக்ரட்டேரியட் காரியதரிசியும், வேளாளர் முதலாகக் கொண்ட பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் உண்ணேனும் வேறு பார்ப்பனரோடு சென்றது விந்தையிலும் விந்தையே. அந்தோ இவர்கள் பார்ப்பனரிடையில் அடைந்த வெகுமானம் ஐயோ பரிதாபம்! எது வந்தாலும் பார்ப்பனன் பார்ப்பனனல்லவா. அப்பார்ப்பனர் அன்னவரைத் தங்களோடு சோாவண்ணம் இலையில் பதார்த்தம் வைத்து ஆங்கோர் திண்ணையில் உட்கார வைத்து உண்பித்தது மிகப்பரிதாபமே.

ஆகையால், பார்ப்பனரல்லாத சகோதரரே! பார்ப்பனரோடு சேர்க்கப்படாத நீங்கள் ஒரு கால் அவர்களோடு கூடி உண்டாலும் என்ன பெருமை காண்பீர். பாருங்கள், மேனேட்டினராகிய நம் (பிரின்ஸிபால்) தன்னை ஆசிரியத் துரையவர்கள் நம்மேலுள்ள அன்பினாலல்லவா தன் கௌரவத்தையும் இனத்தையும் கருதாது, பாதரக்ஷையைக் கழற்றி விட்டு, மிகச்சிரமத்துடன் நம்முடன் தரையில் குந்தியிருந்து தானே உண்டு பழக்கமில்லாத ஆகாரத்தை உண்டார்கள். இப்பெரியார் இங்ஙனம் செய்திருக்க, சகோதர வாஞ்சையுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் நமக்குள் இந்த முறைகெட்ட பேதம் எதற்கு.

சகோதரரே! ஜாதி பேதம் ஒழிய வேண்டும், தீண்டாமையை அகற்றவேண்டும், ஒற்றுமை அடைய வேண்டுமென்று பெரியாரின் சொற்பொழிவுகள் மூலமாயும், பத்திரிகைகளின் வாயிலாகவும் வற்புறுத்திக் கூறப்படும் இவ்விருபதாம் நூற்றாண்டிலுமா இக்கோலம் நடத்த மனங்கொண்டீர். அன்றியும், சில தினங்கட்கு முன்னர் நம்மிடையில் மேற் கூறிய விஷயங்களைப்பற்றிப் பிர

## ஸ்ரீ காந்தியின் தந்திரம்.

ராயல் கமிஷனைப்பற்றி ஸ்ரீமான் காந்தி அபிப்பிராயம் சொல்லியிருப்பது மிகவும் தந்திரமானதாக இருக்கின்றதே தவிர நேர்மையானதாகக் காணவில்லை.

அதாவது அஸோசியேட்டட் பிரஸுக்குச் சொன்னதாக மாகக் காணப்படுவது என்னவென்றால்.

தனது மனச்சாக்ஷி காங்கிரஸ் தலைவரிடத்தும் காங்கிரசிடமும் இருப்பதாகவும் சொல்லியிருப்பதோடு பஹிஷ்காரத்தை ஆதரிக்கிறீர்களா என்று கேட்டதற்கு ஆதரிக்கிறேன் அல்லது இல்லை என்று சொல்லாமல் தந்திரமாய் பேசியிருக்கிறார். அதாவது காங்கிரஸ்காரர் சொல்வதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை என்று சொல்லி விட்டார். காங்கிரஸ்காரரின் தீர்மானத்தையாவது ஒப்புக்கொள்ளுவீர்கள் என்று கேட்டதற்கு அதை ஒப்புக்கொள்ள முடியாது ஆயினும் எதிர்க்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் எனவே இவ்வார்த்தைகள் ஒரு பெரிய மகாத்மா என்றோ தலைவர் என்றோ பெரியவர் என்றோ சொல்லப்படுபவர் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா அல்லது ஒரு தந்திரக்காரர் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா என்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். எப்படி அவர் பேசியிருப்பதை பார்ப்பனப் பத்திரிகைகள் மகாத்மா காந்தியும் ராயல் கமிஷனை பஹிஷ்கரிக்கிறார் என்று தலையங்கமிட்டு எழுதி மக்களை ஏமாற்றுகின்றன, இதை ஸ்ரீமான் காந்தியவர்கள் அறிந்தே சும்மா இருக்கிறார்.

எனவே பாமர மக்களுக்கு எவ்வளவு ஆபத்து இருக்கின்றது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

---

சங்கீதந்தமன்றி, முக்கியமாய் உயர்தரக் கலாசாலை மாணவராகிய நம்மனோரே முற்கூறியவைகளை கடைப்பிடித்துக் கொண்டு வரவேண்டுமென்றும் உரைத்த மகாத்மா காந்தியடிகள் வருகையின் பின்னுமா இக்கேவலம் நம்மிடையில் ஏற்படவேண்டும்.

நண்பரே! பிற்காலத்துப் பிரஜைகளாக விளங்கவேண்டியிருக்கும் நாம இக்காலத்தில் இங்ஙனம் ஒழுகினால் வருங்காலத்தில் நம் நாட்டிற்கு என்ன பயன் விளைவிக்கப் போகின்றோம். ஐயோ கொடுமை.

கடைசியாக இப்பார்ப்பன சூழ்ச்சிக்கு தலைமையாயிருந்த ப்ரொபஸர் கிருஷ்ணய்யர் என்பவர் இனிமேலாகிலும் தன்னிடம் வந்து சேரும் மாணவராகிய பார்ப்பனச் சிறுவர்களுக்கு இவ்விதக் கெடுமதியை யூட்டாது சுயமரியாதையைக் காப்பாற்றும் வழிகளை கற்பிக்குமாறு வேண்டுகிறேன்.

"உண்மைத் தொண்டன்"

---


## "தமிழ் மகள்"

பெண்களின் முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஓர் இனிய மாதாந்தப் பத்திரிகை.

மூன்றுவது சிலம்பு, முதல் இதழ் இன்னும் இரண்டு வாரங்களுள் வெளிவரும்.

அரிய பெரிய விஷயங்களும் சித்திரப் படங்களும் அடங்கியுள்ளன.

**ஆசிரியை: மா மங்களம்மாள்.**

வருட சந்தா ரூ. 5. தனிப்பிரதி அணா 8.

மாதிரிக்காப்பி வேண்டியவர்கள் 8-அணா தபால ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர் 'தமிழ் மகள்' வேப்பேரி சென்னை.

தீராத குஷ்ட ரோகங்களை தீர்க்கும் வல்லமையுடையது பழனி ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகளின் முதல் நெம்பர் தாம்பிரபற்ப மேயாகும். ஏராளமான குஷ்ட ரோகிகள் இப்பழனியிலும் வெளியூர்களிலும் சௌக்கியமடைந்து புகழ்ந்து கொண்டாடி வருகிறார்கள். நண்பர்கள் நேரில் விசாரித்தால் உண்மை தெரியவரும். நன்றாய் கவனித்து உண்மையைத் தெரிந்து வாங்கி உபயோகியுங்கள். நமக்கு அண்டப்புளுகு புளுகத்தெரியாது.

☞ அசட்டையால் வரும் ஆபத்தை நீக்கி, யோசிக்கும் திறமையால் குணம் பெறலாம்.



பாலாம்பிகை
டிரேட்மார்க்

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களாபுரி பாலாஜி பெரிய யோகி மகான். நாலைந்து தலை முறையாகக் கையாண்டுவந்து இம்முறையை நான் இருபது வருஷ தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அகடாவை விட்டு பழனிக்கு வந்து அநேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக் கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அநேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுக்கக் கை கண்டது. பல சிதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண், பெண் இருபாலரும் எந்த வயதாயிருந்தாலும் சாப்பிடச் சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக் கெடுதலும் செய்யாதது.

# முதல் நெம்பர் தாம்பர பஸ்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொறிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல், பெருவயிறு, மகோதரம், நீர் கவசை, குன்மம், அண்டவாய்வு, ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம், அழுகி துர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அநேக கொடிய ரோகங்கள் வெகு சீக்கிரத்தில் 5, 10, 21, வேளைகளில் குணப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விலை விபரம் | முதல் நெம் | தாம்பர பற்பம் | அனுபான | சூரணத்துடன் | 21-நாள் | விலை ரூ | 30 |
| | ,, | ,, | ,, | ,, | 10-நாள் | ,, ,, | 15 |
| | 2 நெம். | ,, | ,, | ,, | 40-நாள் | ,, ,, | 40 |

நற்சாட்சியைக் கவனியுங்கள்:— (1) பழனியில் தாம்பிர பற்பம் என்னும் பொழுது அதன் ஆசிரியரும், உற்பத்தி கர்த்தாவும்—வட இந்தியா இமயகிரிச் சாரல் பெரிய யோகி மகான், மங்களபுரி பாலாஜியின் சீடர் பழனியில் சதானந்த மெடிக்கல் ஹால் வைத்திருக்கும் ஸ்ரீமான் சற்குரு மகாதேவ சுவாமிகள் என்ற ஞாபகம் ஜனங்களுக்கு இருக்கவேணுமாக வற்புறுத்தி சிபார்சு செய்வேன். எங்கள் குடும்பங்களிலேயும் எங்கள் பந்துக்கள் குடும்பங்களிலேயும், எங்கள் சிநேகிதர்களின் குடும்பங்களிலேயும் தீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து வந்தவர் இவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம். சுவாமிகள் அயல் நாட்டிலுள்ள வியாதியஸ்தர்களின் மேல் வைத்துள்ள அன்பு மிகவும் பாராட்டத்தக்கதே. நண்பர்கள் சுவாமிகளின் மருந்தை கையாள சகல வியாதிகளும் நீங்கி சுகமடைவார்களென்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். எம். வேலுசாமி நாடான்வார். மிராசுதார், தாமரைக்குளம் பழனி 8-11-25.)

(2) எனக்குள்ள பெருங் கடினமான குஷ்டரோகத்தைத் தீர்த்தவர் சுவாமிகளே [மாரியப்ப கவுண்டர் விவசாயி பழனி 14-7-25]

(3) எனக்கு 6-வருஷ காலமாய் உள்ள கபால குஷ்டம் சுவாமிகளின் முதல் நெம்பர் தாம்பிர பற்பத்தால் பூரண குணமடைந்தேன். பி. வி. சேஷய்யர், பழனி தேவஸ்தானம் மணியம் 14-1-25

(4) ம-ள-ள-ஸ்ரீ மகாசனம் பொருந்திய ஸ்ரீமத் சற்குரு மகாதேவஸ்வாமி அவர்களுக்கு பிஞ்சு பிறையில் (Pyre) சி. வி தோமாஸ் எழுதிக்கொண்டது.

ஐயா, எனக்கு தங்கள் அனுப்பிய முதல் நம்பர் தாம்பிர பற்பத்தை நான் ஐந்து நாள் சாப்பிட்டேன், கருமேக நீர் சம்மந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப்படுபவர்களை சௌக்கியப்படுத்தி ரட்சிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதாரரூபமாக இப்பேர்ப்பட்ட ரோகங்களை சௌக்யப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார் என்பதாக நான் உறுதியாய் நம்புகிறேன். இப்படிக்கு சி. வி. தோமாஸ் அனந்தபுரம், பிறை, பிஞ்சு 16-2-27

(5) பழனி டவுன் சேர்மென் அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்:—என் வீட்டிற்கு சமீபமாயுள்ள ஒருபெண்ணுக்கு குமார கண்ட வலிப்பு கண்டு இங்கிலீஷ் டாக்டர்களாலும், நாட்டு வைத்தியர்களாலும் கைவிடப்பட்டு சுவாமிகள் முதல் நெ. தாம்பிர பற்பத்தால் வெகு சீக்கிரத்தில் சௌக்கியப்படுத்திவிட்டார். சுவாமிகள் வியாதியஸ்தர்களின் விஷயத்தில் பாராட்டும் தயாள குணமும், இரக்க சிந்தையும் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் தயாரிக்கும் பற்பவகைகளும், செந்தூரங்களும், லேகிய வகைகளும், தைல முறைகளும் மிகவும் மேன்மையானதும் அருமையான முறைகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுவாமிகள் டவுனிலுள்ள அநேக கொடிய ரோகங்களையும், அயலூர்களிலுள்ள பிணியாளர்களையும் வெகு ஜல்தியில் சொஸ்தம் செய்கிறார். மேலும் வியாதியஸ்தர்களால் அநேக நற்சாட்சிகளும் பெற்றிருக்கிறார். ஷை சுவாமிகளிடம் அயலூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், மருந்து சாப்பிடலாமென்ற விஷயத்தை இவருடைய பெருமையை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் எனக்கு பிரியம் அதிகம்.

M. P. மங்கல கவுண்டர் காணியாளர், மிராஸ்தார், முனிசிபல் சேர்மென் & பழனி தேவஸ்தானம் ஆனரரி டிரஸ்டி.

விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள். ஆர்டர் செய்யுங்கள். மற்ற ஏராளமான நற்சாட்சிகளை நமது கேட்லாக்கில் பார்க்கவும்.

மலாய் நாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ 5 அனுப்பவும்

# ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்தா மெடிக்கல் ஹால் பழனி மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி. | Tel-address. "Sarguru" Palni.

# 'அகிலபானு'ப் பத்திராதிபருக்கு அறிவுறுத்தல்.

நவீனமாக மாயவரத்திலிருந்து வெளிவரும் 'அகிலபானு" என்ற ஒரு வாரப்பத்திரிகையில் 'திருவாவடுதுறை ஸ்ரீ ஆதீனகர்த்தர் அவர்கள் ஆதிக்கமும் சூரியனார் கோவில் சிவாக்கிரயோகிகள் மடம் நிர்வாகமும்' என்ற தலைப்பின் கீழ் எழுதப் பட்டுள்ள ஒரு வியாசம் படிக்கப் பட்டது. அவ்வியாசமானது துறைசையாதீனத்தார்களின் தூண்டுதலால் எழுதப்பட்டதா அல்லது அப்பத்திராதிபரால் சுயமாக எழுதப்பட்டதா என்பது ஐயப்படக்கிடக்கின்றது. அஃதெவ்வாறாயினும் ஆகுக. அஃதெழுதியவர் சூரியனார் கோயிலாதீனத்துக்குச் சுமார் பத்து வேலிக்குள்ளடங்கிய பூஸ்திதியுள்ளதென்று எழுதுகிறார். பாக்கி ஆதீனத்தாருக்கோ அல்லது இவருக்குச் சொந்தமோ என்பது தெரியவில்லை.

இன்னும் சூரியனார் கோயிலாதீனமானது திருவாவடுதுறையாதினத்தின் கிளைமடமென்று எழுதுகிறார். இப்படி எழுதுதலால் இவர் சைவாதீன வழக்கம் சிறிதுந்தெரியாதவரென்பது வெளியாகின்றது மேலும் சூரியனார்கோயிலாதீனம் திருவாவடுதுறையாதினவரம்பக்குட் பட்டதென்பது எந்தப் பிரமாணங்களாற் கண்டறிந்தாரோ? ஸ்ரீசிவாக்கிரயோகிகள் ஒரு சமஸ்தான வித்வான் அல்லர். தஞ்சை அரசர் குடும்பத்துக்கு ஞானாசிரியராயிருந்தவரென்பது கற்றோர் பலரும் நன்குணர்ந்ததொன்றாம்

திருவாவடுதுறையாதீனத்துக்குச் சூரியனார் கோயிலாதினம் எந்தக்காலத்திலும் உட்பட்டிருந்ததுமில்லை. தம்பிரான்கள் அங்கு மிகுதியாக அலைந்து காலங்கழிக்கவுமில்லை. திருவாவடுதுறை யாதினத்துக்கு மேலான மேம்பாடு உடையதாய்திருவிடைமருதூர் முதலிய ஒன்பது தேவஸ்தானங்களைப் பூர்வீக அரசர்களால் கொடுக்கப்பெற்றுத் தேவஸ்தான விசாரணை முதலியவைகளை நடத்திச்சைவ சமய அபிவிருத்திக்கு வேண்டிய வடமொழிகளில் அநேக நூல்களையும் பல உரைகளையும் செய்து மிகக்கீர்த்தி பெற்று விளங்கி வந்ததென்பது இவ்வுலக மறியாததல்ல.

சூரியனார் கோயிலாதினத்தின் நிலைமையை ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக மகா சன்னிதானத்தின் காலத்தில் கண்டறிந்த சாமானிய ஜனங்களும் இப்போது அவ்வாதீனமிருக்கும் நிலைமையைக் கண்டால் பரிதாபப்படாமலிருக்க முடியாது. அப்படியிருக்க இப்பத்திராதிபர் இந்நிலைமைக்கு கொண்டு வந்த ஸ்ரீ மீனாட்சி சுந்திர பண்டாரச் சன்னதியவர்களை மிகத் தாங்கி எழுதுகிறார் இது பார்ப்பனர்களின் வழக்கத்தை ஒட்டியதாயிருக்கிறது. முன்பு இச்சூரியனார் கோயிலாதீனத்தின் கர்த்தரொருவரைப் புகழ்ந்து வசப்படுத்தித் துறைசையார் வசம் ஒப்புவித்து அவரை முற்றிலும் கெடுத்தவரும் ஒரு பார்ப்பனரே. இன்னும் சைவசமயத்தையும் சைவ ஆதினங்களையும் தலையெடுக்கவொட்டாமல் இதசத்துரு வாயிருந்து கெடுப்பவர்கள் பார்பனக்குழுவினரென்பது அறிஞர்நன்கு அறிந்ததொன்றே. இதுவுமின்றி துறைசைவாதீனமானது பல வருஷங்களாகநிலைகுலைந்து தடுமாறித் தனக்குரிய மடங்களையும் தேவஸ்தானங்களையும் கிராமங்களையும் முறைப்படி ஒழுங்காக நடத்தாமல் பல வழக்குக்களாலும் சூழப்பெற்று நிற்கவும் அவற்றையெல்லாம் அறியாதவர் போல மறைத்து இப்பத்திராதிபர்மிகப் புகழ்ந்துபேசுதலாலும்பார்ப்பன வழக்கம்நன்கு விளங்கும்.

திருவாவடுதுறை யாதீனத்துக்கு அரசர்களால் கொடுக்கப்பட்ட ஆலயங்கள் ஒன்றுமில்லாமையாலும், திருவிடைமருதூர் தேவஸ்தானத்தை எவ்விதத்தாலேனுங் கைப்பற்ற வேண்டும் என்னும் அவாவினாலும், ஏதோ சில உபாயங்களைச் செய்து ஒன்பது தேவஸ்தானங்களையும் கைவசப் படுத்திக் கொண்டார்கள். அச்செய்கையின் விரிவை இங்குக் காட்டவில்லை. அவர்கள் ஒன்பது தேவஸ்தானங்களையுங் கைப்பற்றியது முதலாக அதற்கு இடையூறு நேராதிருக்கும்படி ஆதீனத்தையுங் கைப்பற்றப் பல முயற்சிகள் செய்தும் இறுதியில் 1918ம் வருஷம் அரசமன்றம் ஏறியும் பயன்படாமல் நியாய மன்றத்திலும் வழக்குத்தொடுத்துப் பல வருஷங்களாக முயன்றும் தங்கட்குப் பயன்படாதென்பதும் கண்டு மேல் நடத்தமாட்டாமல் வழக்கை இழந்ததற்கு ஸ்ரீமான். காசிநாதத் தம்பிரான் சுவாமிகள் திரிசங்கு சுவர்க்கத்திலிருப்பதே போதிய சான்றாம். இச்செய்தி தமிழ்நாடு முழுவதும் நன்கறியும். இப்பத்திராதிபர் மாத்திரம் அறியாதது ஆசிரியராதலால் தமிழறிவின்மை பற்றியோ அக்காலத்துப் பரதேசகமனம் செய்தமை பற்றியோ அல்லது வேறு எக்காரணத்தாலோ அறியோம் பத்திராதிபர்கள் உண்மையை வெளிப்படுத்துங் கடமையுடையராதலின் இனிமேலாவது உண்மையை விசாரித்துணர்ந்து வெளிப்படுத்தக் கடவர்.

இந்நகர்வாசி.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

றியும் பேசப் புகுந்த இந்த ஆசாமிகளின் யோக்கியதையை உலகமறியாதா என்றும் கேட்கின்றோம். அக்கிராசனர் சர். சி. பி ராமசாமி ஐயர் என்கின்றவர் எங்கும் பேசுவார், எதையும்சாப்பிடுவார், எதையும் குடிப்பார், யாரையும் சுகிப்பார்என்னமும் செய்வார். பிரசங்கியாரகிய ஐகோர்ட் ஜட்ஜி ஸ்ரீமான் வி வி. சீனிவாசய்யங்கார் என்பவர் சர். சி. பிக்கு அண்ணன் என்று சொல்ல வேண்டியதுடன் எதுவும் செய்து உத்தியோகம் சம்பாதிப்பார்,எனவே இம்மாதிரியானசுத்தர்கள் நமக்குஇந்துமதத்தையும்இந்தியநாகரீகத்தையும் வருணாசிரமதர்மத்தையும்பெரியோர்களின்புத்திசாலித்தனத்தையும்போதிக்க வருகிறார்கள் என்றால நமது நிலைமை என்னவென்று சொல்லிக கொள்ளுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இவர்கள் இப்போது பார்த்து வரும் பொறுப்புள்ள உத்தியோகத்தில் இனி அரை நாழிகை உட்கார்ந்திருக்க யோக்கியதை உண்டா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டும். குதிரை கீழே தூக்கிப்போட்டதல்லாமல் புதைக்கக்குழியும்பறித்ததுஎன்பதுபோல்சாஸ்திரஞானத்தோடு இவ்வளவு நாள் பேசியதல்லாமல் இப்போது சட்ட ஞானத்தோடும் பேச முன் வந்து விட்டார்கள். இனித்தான் நாம் விழிப்பாய் இருக்கவேண்டும். மதம் என்றும் வருணம் என்றும் ஆச்சிரமமென்றும் தர்மம் என்றும் பெரியோர்கள் ஏற்படுத்தியது என்றும் வேதம் என்றும் புராணமென்றும் இந்திய நாகரீகமென்றும் சொல்லிக்கொண்டுவரும் எந்த ஆசாமிகளையும் கண்டிப்பாய் நம்பக்கூடாது என்றும் அதுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

## வேலையில்லாத் தொழிலாளர் மகாநாடு.

அடுத்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சென்னையில் கூடும் தென்னிந்திய வேலையில்லாத் தொழிலாளர் முதல மகாநாட்டிற்கு டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தலைமை வகிக்கின்றார்.

## சுயமரியாதைக்கு ஜே!

சமீபத்தில் பாலக்காட்டில் நடைபெற்ற ரதோத்சவத்தின் போது தாழ்த்தப்பட்ட ஜாதியினரும் ஆரிய சமாஜிகளும் அவ்வூர் அக்கிராரத்திலுள்ள ரோடுகளின் வழியே அமைதியுடன் நுழைந்து சென்றார்கள். இதற்கு முன் அந்த ரோடுகளில் தாழ்த்தப்பட்ட ஜாதியார் அனுமதிக்கப் படவில்லை.

## அப்துல் ரஷீத்.

சுவாமி சிரத்தானந்தரைக் கொலை செய்த அப்துல் ரஷீதை நவம்பர் 14உ திங்கட்கிழமை தூக்கிலிட்டு விட்டார்கள். அப்பிரேதத்தை சர்க்கார் அப்துல் ரஷீதின் உறவினர்களிடம் கொடுத்து விட்டபடியால் அவர்கள் அதை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். அப்போது ஹிந்துக்கள் தெருக்களின் வழியே செல்ல கலகம் உண்டாயிற்று. அதனால் 110 பேர் காயமடைந்தனர். ராணுவப் போலீஸார் கலகத்தை அடக்க வரும்பொழுது பிரேதத்தைத் தெருவில் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள் பகல் 2 மணிக்கு மேல்தான் பிரேதத்தைக் கொண்டுபோய் அடக்கம் செய்தார்கள்.

## ராஜதுரோக வழக்கு.

பம்பாய் ஹைகோர்ட்டில் மிஸ்டர் ஸ்பிராட்மீது "அவாது இந்தியாவும் சீனாவும்" என்ற பிரசுரம ராஜதுரோகமானது என வழக்கு தொடரப்பட்டு நடந்து வருகிறது. மிஸ்டர் ஸ்பிராட்டுக்காக மாஜி நீதிபதி மிஸ்டர் தயாப்ஜீ ஆஜராகி வருகிறார்.



பழநி சி. எம். சாமி.

# குருதாம்பரபஸ்பம்

## சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டன. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25. ஏழைகளுக்குப்பாதிவிலை.

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர், மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபிஸ்:-முருகன் ஏஜன்ஸி 13 அரண்மனைக்காரத்தெரு ஜி. டி., சென்னை.



# மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு.

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத போக்கிஷம். மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தேன ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து. நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும். இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

REGISTERED TRADE MARK MINSARA RASAM

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம்**



அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ. 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கார்சரி தோட்டம், சேலம்.



## உடனே தேவை.

"அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற ஆச்சரியமான புஸ்தகத்தைப் படித்து முடிந்ததும் உடனே சம்பாதிக்கத் தொடங்கலாம். விசேஷ நற்சாக்ஷிகள் பெற்ற மிக்க உபயோகமான அரிய நூல். பிரதி காப்பி விலை அணா 12. வி. பி. செலவு பிரத்தியேகம். ஆர். சேஷன், எடிடர். ஸ்ரீரங்கம் போஸ்டு, (திருச்சி) தென் இந்தியா,



இனம்! இனம்!! இனம்!!!

# ஸ்ரீ கிருஷ்ணனந்த கௌதம பரிமள சாலை.

1 வீரியவிர்த்தி லேகியம் 2 நறுமண அரக்கீரை விதைத்தைலம்.
3 நறுமண சந்தநாதித் தைலம்.
4 அருமையான கல்நார் பற்பொடி
5 அத்தர் ஊதுபத்தி தினுசுகள்

இன்னும் அநேக விதமான லேகியங்கள், தைலங்கள், நறுமண வாசனைச் சாமான்கள் மிகக் குறைந்த விலைக்கு எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும். விபரமான கேட்லாக் இனம். ஏஜெண்டுகள்தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கிருஷ்ணனந்த கௌதம பரிமள சாலை
வலங்கமான், தஞ்சை ஜில்லா


சிங்கப்பூரில்

## "குடி அரசு"

கிடைக்கும் இடம்:—

1 பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் ஏஜென்சி,
நெ. 6 பேட்டரி ரோட்டு,
சிங்கப்பூர்.

2 ஜி. எஸ். நாயுடு அவர்கள்
105 மார்கட் வீதி,
சிங்கப்பூர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.